துளிர் விடும்

2015

Thalir

# தளிர்

தமிழின் தனித்துவம் காப்போம்!

மலர்: 5
தை – பங்குனி



## முதலாவது ஆண்டு சிறப்பு மலர்





தைப்பொங்கல்
திருநாள்
தமிழர் பெருநாள்



சங்க காலத்
தமிழரிடையே
மதமும் மானிடமும்



உம்மா நோய்
அல்லது
முத்தி வியாதி



இந்து சமயத்தின்
மூலமொழி




எழுத்தாளரும்
பத்திரிக்கையாளருமான
வீரகேசரி மூர்த்தி



பூச்சிய
ஈர்ப்பு விசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலாண்டு சமூக இலக்கிய தமிழ் சஞ்சிகை

# Thalir

## தளிரில் மலர்வது...


தைப் பொங்கல் திருநாள் .......... 3
திருக்குறள் .......... 6
இந்து சமயத்தின் மூல மொழி .......... 8
சங்க காலத்தமிழரிடையே மதமும் மானிடமும் .......... 11
வெரோனிக்காவின் மர்மங்கள் .......... 16
கவலைக்கு மருந்து .......... 22
ஒவ்வொரு பொருட்களும் அணுக்களால் ஆனது .... 24
மாண்புறு கணினிகள் மேவிடும் செய்திகள் .......... 26
மழலை இன்பம் நுகர்தல் .......... 28
பண்டைய தமிழ் பெண்களின் தேசப்பற்று .......... 32
வீரகேசரி மூர்த்தி – விஜபி .......... 34
டாக்டர் போல் யோசேப் (உம்மா முத்தம்) .......... 36
சொர்க்கம் இதுவென்று சொக்கும் மனிதர்கள்.......... 40
ஓமம் .......... 42
லவுட் ஸ்பீக்கர் .......... 44
அணுத்துகள்களின் இரட்டை நிலையும்
ஷ்ரோடிங்கரின் பூனைச் சிந்தனையும் .......... 46
தமிழ் இலக்கிய மரபில் மகாபாரதமும்
அதன் செல்வாக்கும் .......... 54
கொண்டாடப்பட வேண்டியதே காதலர்கள் தினம்.......... 59
தவறான பழமொழிகளும்
அதன் சரியான பழமொழிகளும் .......... 60
நளவெண்பா .......... 62
கவித்தளிர் .......... 64
தளிரில் படர்ந்த நிகழ்வுகள் .......... 66
சிரி சிரி.......... 71
மரபுத்திங்கள்.......... 72
பூந்தளிர் .......... 74
போசிலேன் பீங்கான்கள் .......... 80
பூச்சிய ஈர்ப்பு விசை .......... 82
ஹிக்ஸ் போஸான் .......... 84
சுதந்திரமாக வாழ்வதற்கான பாதுகாப்பு .......... 88
கிருஸ்மஸ் என்றால் என்ன? .......... 90



Chief Editor
**Sivamohan Sivalingam**

Sub Editors
**Nanthini Mohan**
**Sivanayani Mugunthan**

Advisors
**Prof. E. Balasundaram**
**Dr. Paul Joseph**

Managing Editor
**Dr. Paulraj Pandian**

Media Cordinator
**Pudhuvai Raman**

Design & Artwork
**GOODWIN THALIR**

Advertisements
**Pushpan**
**Mohan**



43 Andover Cresent, Scarborough, ON.
M1E 2X2 Tel: 647 657 0910,
647 345 3022 | Fax: 647 345 3022
Email: thalir.thalir@yahoo.ca



**Disclaimer:-** All rights reserved the opinion/views expressed by the contributors are their own and do not reflect those of the publisher. The Publisher assumes no responsibility of any kind of publication.



**Published by:** Thalir Publication,
Member of National Ethinic Press Media




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஆண்டுகள் கடந்தும் துளிர்க்கும் தளிர்"

விதையொன்று வீழும் போது விருட்சமாகின்றது. இலையொன்று உதிரும் போது நுனி உயர்கின்றது. விழுவதும், பின் எழுவதும் இயற்கை மேற்கொண்ட சொற்றொடர்கள்,

இயற்கையின் சீற்றமும், மனிதனின் பாரம் நிறைந்த வார்த்தைகளும், எனது மனதை கனப்படுத்தவில்லை. ஆசிரியன் என்ற வகையில் தளிரின் வளர்ச்சியை தூண்டியது. எனது முயற்சியை சாதனைப்படியில் ஏற்றி வைத்திருக்கிறது. சமநிலை தத்துவத்தை பேணும் போதுதான் ஒரு மனிதனும் பூரணமடைகிறான், அப்படித்தான் ஒரு தாவரமும் வளர்ச்சி பெறுகிறது.

பழியும் பாவமும் பேசுபவர்கள் பேசிக்கொண்டே இருந்தாலும், பரிவும் பாசமும் சொரிவோர்களும் என்னோடு அதிகமாக இருக்கத்தான் செய்கிறார்கள். வாசகர்களின் ஆதரவும், ஊக்கமும் தளிர் என்ற குழந்தைக்கு என்றும் பேருதவியாய் இருக்கும் வரை ஆண்டுகள் கடந்தும் தளிர் துளிர்க்கும். இந்த சஞ்சிகையினை ஆரம்பிக்கும் போது சிலருடய பிரதிவாதங்களும் ஏன் தளிர் எனும் சஞ்சிகை ஒன்று இரண்டுடன் நின்றுவிடும் பின்னர் தளிர் கருகி கனடிய மண்ணில் புதைந்து, தளிர் என்ற பெயரே இல்லாமல் போய்விடும் என்று எனது செவிகள் கேட்க, சொல்லி புன்னகைத்தவர்களும் என்னருகில் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் அதையும் தாண்டி எனது செயல்பாடு ஒவ்வொன்றும் சவாலாக பேனா என்னும் ஆயுதத்துடன் வரிகளை வருடிச்சென்று கொண்டிருக்கின்றேன்.

இன்றுவரை என்னோடும் எம் தளிரோடும் இணைந்திட்ட தொண்டர்களும்,

வாரி வழங்கும் வள்ளல் களான வர்த்தகர்களும் இருக்கும் வரை வாட்டும் குளிரிலும் சுட்டெரிக்கும் வெயிலிலும் தாங்கி, ஓங்கி வளர்ந்து கொண்டே இருக்கும். ''தளிர்'' என்ற நம்பிக்கை வலுவடைந்து வருகின்றது. ''யானைக்கு பலம் தும்பிக்கையில் மனிதனுக்குப் பலம் நம்பிக்கையில்'', ''நம்பினார் கெடுவதில்லை'' என்ற சான்றோரின் வாக்குகள் பொய்ப்பதில்லை.

எண்ணித் துணிக கருமம் துணிந்த பின்
எண்ணுவம் என்பது இழுக்கு.

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கேற்ப எண்ணித் துணிந்து கனடிய மண்ணில் கன்னித் தமிழை வளர்க்கும் வண்ணம் விதைத்த வித்து தளிராகி, ஆழ வேரூன்றி, விண்ணை நோக்கி விருட்சமாக வளரும் என்ற நம்பிக்கையினை எனக்கு வளர்த்துக் கொண்டிருக்கும் வாசகர்கள், எழுத்தாளர்கள், வர்த்தகப் பெருமக்கள் அனைவருக்கும் எனது மனம் நிறைந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு முதலாவது ஆண்டு சிறப்பிதழாக இத்தளிரினை வெளியிடுவதில் பெருமை அடைகின்றேன்.

நன்றி.
என்றும் தமிழோடு தளிர்
பிரதம ஆசிரியர்

**சிவமோகன் சிவலிங்கம்**

Email : editor.thalir@yahoo.ca
Phone : 647 657 0910



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தைப் பொங்கல் திருநாள்

## தமிழர் திருநாள்

சா.சிவபாக்கியராசா

தமிழர் நாட்காட்டியில் தைப் பொங்கல் திருநாள் தைமாதம் முதல்நாள். ஆங்கில நாட்காட்டியில் இந்த நாள் ஜனவரி பதினாலாம் நாள். தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் திருநாள் தமிழர்களின் பண்பாட்டு வாழ்வியலோடு பின்னிப் பிணைத்திருப்பதைப் பார்க்கலாம். தமிழர் பண்பாடுகளில் முதன்மை பெறுவது நன்றி நவிலல் அல்லது நன்றிக் கடன் செய்தல் என்றாகிறது.

தமிழர் வாழ்வியலில் குறிப்பாக சைவசமயத்தை தழுவிநிற்கும் விவசாயம் பெரும் குடிமக்களால், உலகில் எத்திக்கில் வாழ்ந்தாலும் அத்தினத்தை நினைவு கூர்ந்து கொண்டாடப்படுகின்ற திருநாளாக இந்த தைப்பொங்கல் திகழ்கின்றது. இந்தத் திருநாள் இயற்கையோடு தொடர்புடைய பிரபஞ்சத்தின் செயல்பாடுகளாகும். அவற்றின் ஆளுமைக்குள் வருகின்ற பஞ்சபூதங்களது பயன்பாட்டோடும் தொடர்புள்ளது. இது சூரியபகவானுக்கும் பூமிமாதாவிற்கும் விவசாயிக்குத் துணைபுரியும் விலங்குகளுக்கும் நன்றி சொல்லும் திருநாள்.

ஆக மேற்சொன்ன சூரியபகவானுக்குரிய தைப்பொங்கல், மாடுகளுக்கான மாட்டுப் பொங்கல், பூமாதேவிக்கான களத்துப் பொங்கல் ஆகியவை விவசாயப் பெருமக்களால் மேற்கொள்ளப்படும் நன்றி செலுத்தும் நற்பண்பை குறிகாட்டி நிற்கிறது. இதனை மேலைத்தேய நாட்டவர்கள் Thanks giving day என்று கொண்டாடுவதை ஒப்பிட்டுச் சொல்லலாம். உலகுக்கு உணவளிக்கும் உழவன் அண்டவெளியில் சஞ்சரிக்கும் நட்சத்திரக் கூட்டத்தின் நகர்வை புறநானூற்றில் குறிப்பிட்டுள்ளவாறு,

"இலக்கு கதிர்வெள்ளி தென்புலம் படரினும்" - (பு.நா. 35)
"தென்திசை மருங்கில் வெள்ளி ஓடினும்" - (பு.நா. 107)
"வெள்ளி தென்புலத் துறைய விளைவயல்" - (பு.நா. 338)

#### பள்ளம் பாடிய பயனில் காலை

முழைக்கோளாகிய வெள்ளியின் நகர்வை அற்புதமாக வானிலைக் கணிப்பீடு செய்துள்ளனர் நம்முன்னோர்கள். இந்தக் கணிப்பை என் தந்தையார் தலையை நிமிர்த்தி வானைப் பார்த்து இரு கண்களாலும் சில நிமிடம் துளாவிவிட்டுச் சொல்வார். நாளை அல்லது நாளை மறுநாள் சூடுதள்ளிச் சூடடித்தால் நல்லதென்பார். அனுபவ முதிர்ச்சியின் அறுவடை அதுவென்றால் வியப்பில்லை. தொல்காப்பியம் பருவகாலங்கள் பற்றிப் பகிர்ந்துள்ள கணிப்பீடுகளின்படி அன்றைய வானிலை பருவ கால மாற்றங்களை ஆறுபருவ காலங்களாக கணிப்பீடு செய்துள்ளான் அன்றைய விவசாய விஞ்ஞானி. வியப்பாய் இருக்கிறதா?

#### பருவகாலங்கள்:

1. இளவேனில் – சித்திரை – வைகாசி
2. முதுவேனில் – ஆனி – ஆடி
3. கார்காலம் – ஆவணி – புரட்டாசி
4. கூதிர் காலம் – ஐப்பசி – கார்த்திகை
5. முன்பனிக்காலம் – மார்கழி – தை
6. பின்பனிக்காலம் – மாசி – பங்குனி

மேற்சொன்ன கணிப்பீட்டை கணக்கிட்டு, ஏர்பூட்டி, உழுதுப் பண்படுத்தி, விதையிட்டு, நீர்பாய்ச்சிக் களை பிடுங்கி, அறுவடைக்காலத்தை அளவிட்டு விளை பொருளை வீட்டிற்கு கொண்டு வந்து பொங்கலிடும் காலம் முன்பனிக்காலம். அதுவே தைமாதம் – தைப் பொங்கல்.

#### தைப்பொங்கல் :

இதில் தைப்பொங்கலைத் தமிழர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பிரபஞ்சம் முழுவதையும் அவற்றின் செயற்பாடுகள் பற்றியும் விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் தெரிந்து வைத்திருப்பது தெட்டத் தெளிவு. இதில் மிக முக்கியமான அம்சமாக சூரியபகவானுடைய செயல்பாடுபற்றி முன்னமே தெரிந்து வைத்திருக்கிறான். சூரியனே முதல்வன் – சூரியன் இல்லையென்றால் இந்த உலகில் எதுவுமே இயங்காது. உயிருள்ள எதுவுமே இருக்காது என்ற வியப்பூட்டும் விஞ்ஞான அறிவியலை உண்மையைத் தெரிந்து வைத்திருக்கின்றான் தமிழன்.

சூரிய பகவானுடைய ஒளிக்கதிர்கள் ஆகர்ணசக்தி அவற்றின் செயல்பாடுகள் தாவரங்களின் இலைப்பரப்பில் படிந்து செறிந்துள்ள குளோறோபில் என்ற ஆங்கிலத்தில் சொல்லப்படும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சையத்தைப் பற்றியும் அதனைப் பயன்படுத்தி ஒளித்தொகுப்பு என்ற செயல்பாட்டினால் உணவு தயாரித்து தாவரக் கலங்களுக் குள்ளாகக் கடத்தி தளிர்கள், இலைகள், மொட்டுக்கள், பூக்கள், பிஞ்சுகள், காய்கள், கனிகள், விதைகள் என விரிவடைந்து விளைச்சலாகி விவசாயிக்கு உணவு உற்பத்திக்கு துணைபுரிந்த அந்த ஆதவனின் செயல்பாட்டையும் பஞ்சபூதங்களின் பங்களிப் பையும் கருத்தில் கொண்டு தம் நன்றிக் கடனாக பொங்கி சூரிய னுக்குப் படைத்துக் கொண்டாடுகிறார்கள்.

சூரியன் உதயமாகும்வேளையில் தனது வயலில் விளைந்த விளைபொருட்களாகிய அரிசி, பயறு, கரும்பு, சீனி, சர்க்கரை யோடு வாழை, பலா, மா ஆகிய கனிவர்க்கங்களையும் பசுவின் பால் அல்லது தேங்காய்ப்பாலில் புதுப்பானையில் பொங்கிப் பால் பொங்கி வந்ததும் அதில் அரிசிபோட்டுப் பொங்கிப் புது ஆடை உடுத்தி, அந்தப் பொங்கலை சூரியபகவானாகிய கடவுளுக்குப் படைத்துப் பூசை செய்த பின்பு, குடும்ப உறவுகள், உற்றார், உறவினர், சுற்றத்தார் அனைவருக்கும் கொடுத்தும் கூடியுண்டு வாழும் நாள் பொங்கல் திருநாள். அந்நாளை நன்றியுடன் பொங்கலோ பொங்கல் என்று பூரித்தும் போவார்கள்.

**மாட்டுப் பொங்கல் அல்லது பட்டிப் பொங்கல்:**

தைப்பொங்கல் தினத்திற்குப் பிறகு மறுநாள் காலையில் விவசாயி தன்னோடு பகலிரவாய் பணிசெய்து, நிலத்தை உழுது பண்படுத்தல், நீர்இறைத்தல், சூடுமிதித்தல், விளைபொருட்களை வீட்டிற்கும், வியாபார நிலையங்களுக்கும் கொண்டு செல்லு தல் மட்டுமன்றிப் பால், தயிர், மோர், நெய், வெண்ணை யினால் மக்களுக்கு பசிபோக்கும் பல பலன்களைத் தந்து உதவு கின்ற பசுக்கள், எருதுகள், எருமைகள் எனப்பட்டியில் இருக்கும் மாடுகளுக்கெல்லாம் குளிப்பாட்டிப் பூமாலை போட்டு பொட்டிட்டு பொங்கல் செய்து, பொங்கலையும், பழங்களையும் உண்ணக் கொடுத்து நன்றி செய்யும் அந்த நல்ல நாளை மாட்டுப் பொங்கல் அல்லது பட்டிப் பொங்கல் என்று சொல்வார்கள்.

**களத்துப் பொங்கல் அல்லது களத்துமேட்டுப் பொங்கல்:**

உணவு உற்பத்திக்கு அடித்தளமாய் அமைந்து, நீரையும் நிலத்தில் செறிந்திருக்கும் பல்வேறு சத்துணவுகளையும், பச ளையையும் தன்னகத்தே தேக்கி வைத்து உணவூட்டும் பஞ்ச பூதங்களாகிய நிலமங்கை பிரிதிவி (மண்), அப்பு (நீர்), தேயு (தீ), வாயு (வளி), வான் (ஆகாயம்) இவற்றில் மண்ணாகிய பூமாதேவிக்குச் செய்யும் நன்றிக் கடனாக இந்தக் களத்துப் பொங்கல் அல்லது களத்து மேட்டுப் பொங்கல் அமைகிறது.

களத்து மேட்டில் (சூடு அடிக்குமிடம்) சூடு வைத்திருந்த (நெற்கதிர்களை உப்பட்டிகளாக்கி அவற்றை பலவற்றை ஒன்றாக்கி சுமந்து செல்லக் கூடிய அளவுக்கு கட்டுகளாக் கட்டித் தலையில் சுமந்து வந்து களத்தில் நீராலும் காற்றாலும் விலங்குகளாலும் தேசமுறாதவாறு நெற்கதிர்களைக் குவிய லாக குவித்து தற்காலிகமாக "சூடு" வைத்திருப்பார்கள்.

அதனை மழையில்லாக் காலங்களில் நிலாக்காலங்களில் பொதுவாக இராக்காலங்களில் களத்துமேட்டில் (அதாவது சூடு அடிக்கும் அல்லது சூடு மிதிக்கும்) எருமைகள், எருதுகள், தற்போது உழவு இயந்திரத்தால் சூடு அடித்து தூற்றிய பதர்கள் கால் வயிறான், அரை வயிறான் நெல் எனப் பிரித்தெடுத்து அந்தப் பூமியிலேயே விளைந்த நெல்லைக் குற்றி அரிசியாக்கி, அந்தப் பச்சரிசியுடன் பசுப்பால் அல்லது எருமைப்பாலில் சீனி, சர்க்கரை, கற்கண்டு, பழவகைகள் சேர்த்துப் பொங்கி அப்பொங்கலை களத்து மேட்டின் மத்தியில் வாழையிலையில் படைத்து வெற்றிலை பாக்கு, பழம், பூக்கள் வைத்து தீபாராதனை செய்த பின்பு அங்கு வேலை செய்த தொழிலாளிகள், பக்கத்துக் களக்காரர்கள் அனைவர்க்கும் கொடுத்துண்பார்கள். இதனைத்தான் களத்துப் பொங்கல் அல்லது களத்து மேட்டுப் பொங்கல் என்பார்கள்.

எனது சிறுவயதில் குருவிக்காவல் சூட்டுக்காவல் செய்யும் வேளைகளில் பட்டிப்பொங்கல் கிடைத்தது ஞாபகம் வருகிறது. அப்பொங்கலின் ருசியும், மணமும் சொல்லி மாளாது.

அப்படிச் சாப்பிட்டது போல், மீதியைச் சுடச்சுட சூடுஅடித்த வைக்கோலை ஒழுங்காக கூட்டி அதன் மத்தியில் பொங்கலை வைத்துச் சுருட்டி ஆவி பறக்க அன்னையிடம் கொடுத்து அனைவரும் சாப்பிட்ட ஞாபகமும் களத்து மேட்டில் சூடு அடிக்கும் போது மாடுகளைக் கலைத்தபடி பாடுகின்ற பாடல் களில் "வரம்பு தலையணையோ வாய்க்காலோ பஞ்சுமெத்தை" "பொலி பொலி தாயே பூமாதேவியே ஆய்..." என்ற பாட்டொலி கள் இன்னும் இனிக்கிறது.

மேற்சொன்ன மூன்று வகைப் பொங்கலுடன் நாலாவது பொங்கலாக வருவது புதிரெடுக்கும் புது அரிசிப் பொங்கல்.

**புதிரெடுக்கும் புதுஅரிசிப்பொங்கல்**

விவசாயிகள் விளை நிலத்தில் விளைந்த புதிய நெல்லை முதன் முதலில் புதிர் எடுக்கவென அதற்கென்றே சிறியதொரு "கன்னட்டில்" களத்துமேட்டுக்கு அருகில் வயது குறைந்த நெல்லினங்களை சீரகச்சம்பா, சீனட்டி, கறுப்பன், ஒட்டவாயன், இவை போன்ற நெல்வர்க்கங்களில் ஒன்றை முன்கூட்டியே பிறம்பாக விதைத்து விளைந்ததும் பஞ்சாங்கம் பார்த்துப் புதிரெடுத்தல் என்ற குறிப்பிட்ட ஒரு சுபநாளில் சால்வையை தலைப்பாகையாகக் கட்டிக்கொண்டு சூரியபகவானை நமஸ் கரித்து அறுவடை செய்வார்கள்.

அந்த நெற்கதிர்களை சுளகில் மேல் (முறம்) சால்வையைப் போட்டு அதன்மேல் புதிர்க்கட்டை வைத்து வீட்டில் சாமியறையில் விளக்கேற்றி விநாயகர் இலட்சுமி படங்கள் முன்னே வீட்டுப் பெண்களான அம்மா, அம்மம்மா, அல்லது முதியவர்கள் வைத்துக் கும்பிட்டு அவற்றில் ஒரு பகுதியை ஆலயத்திற்கும் அயலவர்கட்கும் புதிர் கொடுப்பார்கள்.

இவ்வாறு புதிர் எடுத்த நெற்கதிர்களையும், வயலில் மீதமுள்ள புதிர்கன்னட்டியில் உள்ள நெல்கதிர்களையும் அறுவடை செய்து நெல்லை அடித்து வேறாக்கி முற்றத்தில் பாய்மீது காய வைத்து பின்பு உரலிலிட்டு குத்திப் பச்சையரிசியாக்கியும், புளுங்கலரிசியாக்கியும் நல்ல தினமொன்றில் தைப்பொங்கல் நாளில் பொங்குவது போல் பொங்கியும் சோறாக்கியும் மா இடித்துக் கூழ் காச்சியும் நல்ல பல கறிவகைகள் செய்து குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுகூடி உண்டும் மகிழ்வார்கள். இதனைப் "புதிர் உண்ணல்" என்பார்கள். இத்தகைய தமிழர் கலாச்சாரம் பண்பாட்டு விழுமியங்களை பேணிப்பாதுகாத்திட தமிழர்கள் முன் வரவேண்டும்.

**"பொங்கலோ பொங்கல்"**

**"வாழ்க தமிழர் கலாச்சாரம் பண்பாடுகள்"**

************************************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



KEN KIRUPA
SALES REPRESENTATIVE
Direct: (416) 830-8191 | Email: kenkirupa@rogers.com

RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED

Thinking of
# Buying or Selling?

## NEW CONDOS | BANK SALES | FIXER-UPPERS

CALL ME TO DISCUSS
## INVESTMENT PROPERTIES

# KenKirupa
SALES REPRESENTATIVE

416homes.com | 905areahomes.ca

# 416.830.8191

RE/MAX COMMUNITY
Realty Inc., Brokerage

Re/Max Community Realty Inc, Brokerage | 1265 Morningside Ave, Suite 203, Toronto, ON. M1B 3V9
Office: 416.287.2222 | Direct 416.830.8191 | email: kenkirupa@remax.net

Each office is independently owned and operated



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள்

பிள்ளைகளே! உலகப் பொதுமறையாம்
திருக்குறளை
உங்கள் அனைவருக்கும் விளங்கும்படி ஆங்கிலத்திலும், தமிழிலும் இங்கு தந்துள்ளோம். இது எமது தமிழ் மொழியில் திருவள்ளுவரால் ஆக்கப்பெற்ற உலகம் வியக்கும் ஒரு நூல். எக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய பல கருத்துக்களை உள்ளடக்கியதும், பெரிய விடயத்தை இரண்டே வரிகளில் அழகு தமிழில் எழுதப்பட்டதுமான ஒரு பொக்கிஷம்... எல்லாத் தமிழர்களும் அறிந்திருக்கவேண்டிய ஒரு நீதி நூல்.

அதிகாரம் / Chapter / Adhigaram: நீத்தார் பெருமை
பால் / Section / Paal: அறத்துப்பால் / Virtue / Araththuppaal 1
இயல் / Chapter Group / Iyal:
பாயிரவியல் / Prologue / Paayiraviyal



### குறள் 26:

**செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.**

பிறர் செய்வதற்கு முடியாத செயல்களைச் செய்பவரே மேன்மக்கள்; செய்ய முடியாதவரோ சிறியவரே.

செயற்கரியன - இயம நியம முதலாயின. இவ்வதிகாரம் நீத்தார் பெருமையென்று கூறப்பட்டதாயினும், துறந்த மாத்திரத்தானே பெரியரென்று கொள்ளப்படார். செயற்கரியன செய்வாரே பெரியரென்று கொள்ளப்படுவரென்று இது கூறிற்று.

**Couplet 26:**

Things hard in the doing will great men do; Things hard in the doing the mean eschew.

Explanation: The great will do those things which is difficult to be done; but the mean cannot do them.

### குறள் 27:

**சுவைஒளி ஊறுஓசை
நாற்றமென ஐந்தின்
வகைதெரிவான் கட்டே
உலகு.**

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்
என்று கூறப்படும் ஐந்து புலன்களின் வழிப் பிறக்கும் ஆசைகளை அறுத்து எறிபவனின் வசப்பட்டதே இவ்வுலகம்.

**Couplet 27:**

Taste, light, touch, sound, and smell: who knows the way of all the five, & the world submissive owns his sway.

Explanation: The world is within the knowledge of him who knows the properties of taste, sight, touch, hearing and smell.

### குறள் 28:

**நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.**

நிறைவான வாக்குப் பெருமை உடைய மேன் மக்களின் உயர்வை, அவர்கள் இவ்வுலகில் சொன்ன மந்திரச் சொற்களே அடையாளம் காட்டிவிடும்.

**Couplet 28:**

The might of men whose word is never vain, The 'secret word' shall to the earth proclaim.

Explanation: The might of men whose word is never vain, The 'secret word' shall to the earth proclaim.

### குறள் 29:

**குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது.**

நற்குணங்களாம் சிறுமலை மீது ஏறி நின்ற அம் மேன்மக்கள், தமக்குள் ஒரு கணப்பொழுதும் கோபத்தைக் கொண்டிருப்பது கடினம்.

**Couplet 29:**

The wrath 'tis hard e'en for an instant to endure, Of those who virtue's hill have scaled, and stand secure.

Explanation: The anger of those who have ascended the mountain of goodness, though it continue but for a moment, cannot be resisted.

### குறள் 30:

**அந்தணர் என்போர்
அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்.**

எல்லா உயிர்களிடத்திலும் இரக்கம் கொண்டு வாழ்பவரே அறவோர்; அவரே அந்தணர்.

**Couplet 30:**

Towards all that breathe, with seemly graciousness adorned they live; And thus to virtue's sons the name of 'Anthanar' men give,

Explanation: The virtuous are truly called Anthanar; because in their conduct towards all creatures they are clothed in kindness.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்து சமயத்தின் மூல மொழி சமஸ்கிருதமா, ஆதித்திராவிடமா?

Dr.J.T.சேவியர், M.B.B.S(Cey) F.R.C.S (Eng), (சத்திர சிகிச்சை நிபுணர் (தமிழ் ஆய்வாளர்)


"ஆதி அம்மா படைத்த மனுதி" என்ற திராவிடர் சித்திர எழுத்துக் கதை, விவிலிய வேதத்தில் "ஆதாமின் விலாவால் ஆக்கப்பட்ட ஏவாள்" ஒரு கதையாக மாறி விட்டது. அறிவு அல்லது போதி மரத்திலிருந்து சர்ப்பம் ஆதித் திராவிட எழுத்துக்களில் அர-அத்தி எனக் குறிக்கப்பட்டு காமக் கடவுளைச் சுட்டிக் காட்டியது. ஆசையை அடக்காதவர்களுக்கு மறுபிறப்பும், இறப்பும் தண்டனை எனவும், ஆசையை அடக்கினால் மட்டுமே ஜீவ விருட்சத்தை அடைந்து அமரநிலை பெறலாம் எனவும் இக்கற்பனைக் கதை வலியுறுத்துகின்றது.

சுமேரிய - யூதர் ஆகியோரின் நெடுங்கணக்கு முறைக்கும், எழுத்து முறைக்கும் மற்றும் சமய தத்துவ போதனைக்கும் ஆதித் திராவிடமே மூலவழிகாட்டியாக இருந்தன என்பதற்கு விவிலிய ஆதாம் - ஏவாள் கதை சிறந்த சான்றாக விளங்குகின்றது.

### விருட்ச வழிபாட்டின் தோற்றுவாய்

சிந்துவெளி இலச்சினைகளில் மிகக் கூடுதலாகக் காணப்படும் விருட்சம் அரச மரமே (Fi.us religiosa) இது சமஸ்கிருதத்தில் பிப்பாலா என்றும் அஸ்வத என்றும் அழைக்கப்படுகிறது. இதுவே பௌத்தர்களின் போதிமரம் அல்லது ஞான விருட்சமாகும், இம்மரத்தின் நவீன தமிழ்ப் பெயர் அரசு ஆயினும் திராவிட மொழிகளாகிய தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் அத்தி என்று வழங்கப்படுகின்றது. அத்தி மரத்தின் நேர் பொருள் தாய் மரமாகும். இதைச் சுரண்டினால் பால்வடியுமாதலால் இப்பெயர் இதற்கு வழங்கியது போலும், அரச மரத் திற்கு வழங்கிய ஆதிதிராவிடப் பெயரும் தாய்த்தெய்வத்தின் பெயரும் ஒன்றாக இருந்ததினால் தாய்த் தெய்வத்தின் குறியீடாக அத்திமரம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

அத்தி மரம் உயிரினங்களைப் படைத்தவளின் (சித்திர எழுத்து) ஜீவ விருட்சம் என வழங்கப்பட்டது. ஆதி திராவிடர்களால் உருவாக்கப்பட்ட சித்திர எழுத்து வடிவத்தில் அத்தி மரத்தின் சித்திரம் தாய் தெய்வத்தின் பெயரைச் சுட்டி நின்றது.



### பூமாதேவி பிரபஞ்ச விருட்சம்

உலகமே (தமிழில் பார்) உயிரினங்களைப் படைத்த தாய் (ஆதி, தி) தனது மலைகளிலிருந்து ஊற்றெடுக்கும் ஆறுகள் மூலம் உயிரினங்களை அது பராமரிக்கின்றது. இறப்பிற்குப்பின் எல்லா உயிரினங்களும் அதற்குள்ளே அமிழ்ந்து விடுகின்றன. இதனால் உலகம் பார்-அத்தி எனப்பட்டது. பற (பறத்தல்), பறவை (பட்சி) என்ற ஆதிதிராவிட தமிழ் சொற்களின் ஒலிப்புகள் பறவை ஓவிய எழுத்தினால் மிகத் திறமையாகச் சுட்டப்பட்டது. பறவையினதும் அத்தி மரத்தினதும் கூட்டு ஓவிய எழுத்துக்கள் பார்-அத்தி (பாரலர், தி) பூமா தேவியாகிய பறவை - தி (பார்வதி) ஆகியோருடைய பெயர்களைச் சுட்டி நின்றன. பூமா தேவியை வழிபட்டவர்கள் பாரர், பாரவர், பாரதியார், பாரதர் எனப்பட்டனர். இவர்களுடைய இலச்சினை பறவையே.

பற என்ற தமிழ் வினை "பறத்தல், பரவுதல், சிதறுதல், பரந்திருத்தல்" ஆகிய அர்த்தங்களை உணர்த்துகின்றது. கூட்டு பறவை - விருட்ச ஓவிய எழுத்து எங்கும் பரவி நிற்கும் படைப்பு பெண் தெய்வத்தைக் குறித்தது. எனவே அத்திமரம் பிரபஞ்ச விருட்சம் எனப்பட்டது. (மும்மூர்த்திகளின் இருப்பிடம்).

பூமாதேவியை வழிபட்ட ஆதித் திராவிடர்கள் பண்டைய இந்தியாவை பாரர்-தா (பாரத்த) அல்லது பாரர்-தேச (விவிலிய நூலின் பரடைஸ்) என்றழைத்தனர். ("த - தேசம் - தரிப்பிடம், இருப்பிடம், நிலம் அல்லது தேசம்" - ஆதித்திராவிடம்). பூமா தேவியை வழிபட்ட ஆதித் திராவிடர்களின் இருப்பிடமாகிய சுவர்க்கலோகத்தின் நடுவில் ஜீவ விருட்சம் இருந்தமை வியப்பன்று.

### கங்காதேவியும் இச்சை விருட்சமும்

சிந்து நதியின் ஆற்றங்கரைகளிலே வாழ்ந்த ஆதி திராவிடர் தம்மை சிந்தவர் அல்லது அரவர் என்றழைத்தனர். இதன் கருத்து ஆற்று மக்கள் ஆகும் (சிந்து - ஆறு, அர் - அவர் - "மக்கள்" என்பதைக் குறிக்கும் பின்னொட்டு, தமிழ், அர - ஆறு அல்லது பாம்பு), ஆதி திராவிடர் தமது தெய்வத்தைக் கங்காதேவி அல்லது அர-தி என்றழைத்தனர். அப்பெண் தெய்வத்தின் இலச்சினையில் பாம்பும் அத்திமரமும் இடம் பெற்றன. கங்காதேவி மண்வளத்திற்கும், செல்வத்திற்கும் மக்களின் சுபிட்சத்திற்கும் காலாயிருந்தாள். தமது ஆசைகள் நிறைவேறுவதற்கு மக்கள் அவள் ஆசியை வேண்டி நின்றனர். கங்காதேவி "ஆசை தெய்வம் (அர-தி, ரதி") எனப் பட்டாள்.

சிந்து வெளி இலச்சினை ஒன்றில் எருமைமாட்டு (மா) கொம்புகளை அணிந்த பெண்தெய்வம் அத்தி மரத் தண்டினுள் இருப்பதாக பொறிக்கப்பட்டிருக்கிறது. சித்திர எழுத்து அடிப்படையில் இத்தெய்வத்தை மாத்தி என கருதலாம். சமஸ்கிருத மொழியில் இப்பெயர் சிந்து-மதி என உச்சரிக்கப்பட்டு சரஸ்வதியின் இன்னொரு பெயராயிற்று. இன்னொரு இலச்சினையில் இத்தெய்வம் சிந்து நதியின் ஏழு கிளைகளைக் குறிக்கு முகமாகப் பொறிக்கப்பட்ட ஏழு பெண் தெய்வங்களுடன் காணப்படுகிறாள்.

### மீன்கொடிப் பாண்டியன்

ஆதித்திராவிடரின் இனக்குழுக் குறியீடுகள் தொழில் அல்லது சாதியை மையமாகக் கொள்ளாது மத, பிரதேச அம்சத்தை அடிப்படை ஆதாரமாகக் கொண்டன. இருமீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# SHAN THAYAPARAN

Sales Representative

**Dir: 416.567.7675**

**Bus: 416.321.2228**

## Buy or Sell... Call us first and Compare




SHAN'S
Home Team

www.shan123.com

Re/Max Vision Realty Inc. Brokerage

INDEPENDENTLY OWNED & OPERATED

Not intend to solicit property currently listed for sale or individuals under contract




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னம் மீனவரின் இனக் குழுவைக் குறிக்கும் சித்திர எழுத் தாகும். மீனவர் என்ற பெயர் அக்காலத்தில் நவக்கிரகங்களை வழிபட்டோரைக் குறித்ததேயன்றி மீன் பிடித் தொழிலை மேற் கொண்டோரைக் குறிக்கவில்லை. ஆதித் திராவிடத்தில் மின் என்ற சொல் கோள்கள், நட்சத்திரங்களின் பொதுப் பெயராக இருந்தது. இவ்வடிப்படையில் எழுந்ததே மின்னவர் (மீனவர்) என்ற பெயராகும். இவர்கள் வானசாஸ்திரக் கலையில் வல்ல ராக இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தியாவில் முதல் முதலாகக் காலத்தை அளக்கும் முறை யையும், கிழமை, மாதம், ஆண்டு ஆகியவற்றை வகுக்கும் முறையையும் கண்டுபிடித்தவர்கள் ஆதித்திராவிட மீனவ குழு வினர் என்ற கருத்தை நிறுவ சமஸ்கிருத மொழியில் உள் வாங்கப்பட்டிருக்கும் திராவிட வானசாஸ்திர, சோதிடக் கலைச் சொற்கள் சான்றாக உள்ளன.

பண்டைக்கால சுமேரிய தேசத்தின் வானசாஸ்திர விஞ்ஞான வளர்ச்சிக்கு ஒரு மீனவன் காரணகர்த்தாவாக இருந்தான் என சுமேரிய சாசனங்களில் குறிக்கப்பட்டிருக்கும் பரம்பரைக்கதை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழ் இலக்கியத்தில் மீனவன் என்பது மன்மதனையும் குறித் தது. மன்மதனின் மனைவி ரத்தியை (ஆதிதிராவிட - அர - அத்தி) மீனவர்-த்தி அல்லது மீனாத்தி என்ற பெண் தெய்வமாக மீனவர் என்ற இனக்குழுவினரால் கொள்ளப்பட்டது. பெண், தாய் பெண்தெய்வம் என்ற அர்த்தங்களை கொடுக்கும் தி, த்தி, அத்தி என்ற ஆதித்திராவிட சொற்கள் பிராகிருத மொழியில் ச்சி-ஆச்சி எனவும், சமஸ்கிருத மொழியில் அக்ஷி-ஆக்ஷி எனவும் உச்சரிக்கப்பட்டதினால் மீனவர்த்தி மீனாத்தி என்ற பெயர்கள் இன்று மதுரை மீனாச்சி எனவும் மதுரை மீனாட்சி எனவும் வழங்கப்படுகின்றன. அக்காலத்தில் மீனவர்த்தி என்ற பெயரை எழுதுவதற்கு இருமீன் - அத்திமரச் சித்திர எழுத்துப் பாவிக்கப்பட்டிருக்கலாம்.

வேண்டுவதை வேண்டியவாறு நிறைவேற்றும் தமது இஷ்ட பெண் தெய்வத்தை ஆதிதிராவிடர்கள் அர-அத்தி (ரதி) எனவும் அரவர்-த்தி எனவும் பெயரிட்டு அழைத்தனர். இவற்றினைக் குறிக்க முறையே ஒரு பாம்பு - அத்திமர, இருபாம்பு அத்திமர சித்திர எழுத்துக்கள் பாவிக்கப்பட்டன.

ஆதிதிராவிடரின் (அரவர் என்ற இனக்குழுவின்) பெண் தெய்வத்தைக் குறிக்கும் அத்தி; அர; அத்தி அர-அவர் - த்தி என்ற பெயர்கள் பிற்கால சமஸ்கிருத உச்சரிப்பில் ஸக்தி-(சக்தி) ரத்தி; ஸர - ஸவர் - த்தி (சரஸ்வதி) என மாற்றமடைந்தன. மதம், பிரதேசம், இனக்குழுகுறி, இனக்குழுவின் தெய்வம் ஆகியவற்றைக் குறிக்கும் சித்திர எழுத்துக்களைக் கௌரவித்து வணங்கும் பண்பாடு ஆதித்திராவிடர் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்தது.

சந்திர - சூரிய கிரகணத்திற்குக் காரணமாக இருக்கும் இராகுவையும் மீனவர் தமது கடவுளாகக் கொண்டனர். இவர்கள் ராகுவைக் காமக்கடவுள் எனவும் அழைத்தார்கள். விண்ணில் மின்களை விழுங்கும் இராகுவான காமக்கடவுளின் வாகனமாக மண்ணில் உள்ள ஆற்றில் மீன்களை விழுங்கும் முதலை கொள்ளப்பட்டது.


OPTIMART

கண்பரிசோதனை | EYE EXAM

தமிழ் மக்களின் நன்மை கருதி தமிழர் நிர்வாகத்தில் மூன்று இடங்களில் சேவையாற்றுகிறார்கள்

(416) 266-3389
3150 Eglington Ave. E. #6
(Eglinton & Markham)
Scarborough, ON. M1J 2H2

(416) 297-9903
3351 Markham Road
(Markham & Steeles)
Toronto, ON. M1X 0A6

(416) 690-4649
294 Main St. (@ Danforth)
#2, Professional Bldg.,
Toroto, ON. M4C 4X5






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க காலத் தமிழரிடையே மதமும் மானிடமும்

பேராசிரியர் இ. பாலசுந்தரம்
தமிழ்த்துறைத் தலைவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், கனடா வளாகம்.

உலகில் மானுட சமுதாயம் உற்பத்தியாகி, அதன் வளர்ச்சிக் காலங்களினூடாக மதமும் அவர்களுக்கு உற்ற துணையாக பாதுகாப்பு அளிப்பதாக, நம்பிக்கை ஊட்டுவதாக வளர்ந்து வந்துள்ளது. இந்த வளர்ச்சியானது சடங்குகளாகவும் கோட்பாடுகளாகவும் அமையலாயின. சடங்குகள் வாழ்க்கைச் சுற்றோட்டத்தில் பிறப்பு முதல் இறப்புவரை தேவை யேற்பட்டபோதெல்லாம் மதச் சடங்குகள், பல்வேறு சூழல்களில் பன்முகப்பட்ட நடைமுறைகள் நம்பிக்கைகளுடன் பின் பற்றப்பட்டு வந்துள்ளன. காலப்போக்கில் சமய வளர்ச்சியானது ஆன்மீகத்துறையாக வளர்ச்சி பெற்று சமய தத்துவ சிந்தனைகளாக வளர்ச்சியும் அடையலாயின.

சங்ககாலத் தமிழரிடையே நிலவிய மதமும் மானிடமும் பற்றி அறிவதற்குத் துணையாக சங்க காலத்தின் தொடக்கமும் முடிவும் என்ற கால எல்லையை வரையறை செய்துகொள்ளுதல் பொருத்தமாகும். பொதுவாக சங்க காலத்தின் கால அளவை கி. மு. 1000 – கிபி. 300 எனக் கொள்வது மரபாகிவிட்டது. அக் காலப்பகுதியில் தோன்றிய இந்தவகையில் ஆராய்வதற்கு எட்டுத் தொகை பத்துப்பாட்டு எனும் மேற்கணக்கு நூல்களும், இது வரை காலமும் கண்பிடிக்கப்பட்ட புதைபொருட் சான்றுகளும், பிறநாட்டார் குறிப்புக்களும் ஆதாரமாகின்றன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது சங்க காலத்திலும் அதற்கு முன்னரும் தமிழர் இந்தியா முழுவதும் பரந்திருந்தமை புலப்படும். இராமாயணம், பாரதம் நடைபெற்ற காலங்களிலும் தமிழர் பற்றிய செய்திகள் வட இந்தியா வரை பரவியிருந்தமை புலனாகின்றது. அதற்கும் முந்திய மொகஞ்சதாரோ – ஹரப்பா நாகரீக காலங்களிலும் தமிழர் அங்கு வாழ்ந்தமை அறிய வந்துள்ளது. அதன் பின்னர் அமைந்த வேத காலத்துத் தோன்றிய வேதங்களிலும் தமிழ்மொழியின் செல்வாக்கு இடம்பெற்றமை அறிஞர்களால் நிறுவப்பட்டுள்ளது. சங்க இலக்கியத்திலும் பின்னர் தோன்றிய சிலப்பதிகாரத்திலும் தமிழர் பரவல் வட இந்தியாவரையும் நிலைபெற்றிருந்தமை அறியப்படுகிறது.

இந்தியாவில் நிலைத்திருந்த திராவிடரின் பண்பாட்டைத் தமதாக ஆரியர் மாற்றிக்கொண்டனர் என்பதும் அறியப்பட வேண்டியதாகும். ஆரிய இனமே தோன்றுவதற்குக் காரணமான மிகச் சிறந்த, தாய் இனங்களாய் விளங்கியவற்றிலே ஒன்றான புகழ் படைத்த தமிழர்களது பழம் பெருமையினை அறிவதால் விளையும் நியாயமான நன்மதிப்பை ஏற்படுத்த வேண்டுவது மிகவும் அவசியம் ஆகிறது என விருப்பு – பக்கச்சார்பற்ற சுவாமி விவேகானந்தர் கூறுவதும் உண்மையாகும். மேலும் அழிந்த குமரிக்கண்ட உண்மைகள் இப்போது அறிஞர்களால் நிறுவப்பட்டு வருகின்றன. இந்நிலையில் தமிழர் சமயம் பற்றிய சிந்தனையானது உலகப் பழைமை வாய்ந்தது என்பது உணரப்படுகின்றது.

சங்ககால மக்களின் கடவுள் கோட்பாடு, அவர்கள் பின் பற்றிய மத நம்பிக்கைகள் – நடைமுறைகள், கடவுள் சார்ந்த பாடல்கள் என்னும் விடயங்களை நோக்கும்போது முதலில் குறிப்பிட வேண்டியது, அவர்களது வாழ்வியல் முறை சமய நம்பிக்கைகளோடு பின்னிப் பிணைந்திருந்ததே ஒழிய, தனியே சமய சிந்தனைகளோ சமய நடைமுறைகளோ இல்லாது இருந்தமையாகும். தொல்காப்பியர் குறிஞ்சி முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய நிலங்களுக்குரிய தெய்வங்களாக முறையே முருகன், மாயோன், இந்திரன், வருணன், கொற்றவை என ஐந்து தெய்வங்களைக் குறிப்பிடுவர்.

**மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
(தொல். அகம்: 5)



முல்லை நில மக்கள் மால் அல்லது மாயோன் என்ற பெயரில் கடவுளை வழிபட்டனர். மாயோனைக் கண்ணனாகவும் விஷ்ணுவாகவும் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

மாயோன் அழகிய நீலமேனியும் கருடக்கொடியும் உடையவன் எனவும் (புறநானூறு-56:5-6),

திருமால் தன் கைகளிலே சங்கும் சக்கரமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரித்துள்ளதோடு, தனது மார்பிலே திருமகளை வைத்திருக்கிறான் எனவும் (முல்லைப்பாட்டு:1-3) குறிப்பிடப்பட்டுள்ளன. பாம்பணைப்பள்ளி அமர்ந்தோன் எனப் பெரும்பாணாற்றுப்படை (371) வருணிக்கின்றது. குடும்ப நலம் வேண்டி கணவனும் மனைவியும் பிள்ளைகளுடன் சென்று திருமாலுக்குப் பூவும் புகையும் படைத்து வழிபாடு செய்தமையையும் (461-466) திருமால் பிறந்த ஓணத்திருநாளில் திருமாலுக்கு விழாவெடுத்த செய்தியும் மதுரைக்காஞ்சி (590-591) விவரிக்கிறது.

குறிஞ்சிநில மக்கள் வழிபட்ட முருகன் சங்ககாலத்துப் பெருங்கடவுள் போல் தோற்றமளிக்கிறார். வீரயுக கால மக்கள் வெற்றியைத் தரும் தெய்வமாக முருகனை வழிபட்டனர். வெல்போர்ச் சேய் என மடிலைபடுகடாமும் (493), செருமிகு சேய்... எனப் புறநானூறும் (120-21) முருகனைப் பாடுகின்றன. கடம்பமாலை அணிந்து கடம்ப மரத்தின்கீழ் வீற்றிருப்பான் எனவும், வெற்றித் தெய்வமாம் கொற்றவையின் புதல்வன் எனவும் முருகன் கருதப்பட்டான். அங்குள்ள முருகன் கோயிலில் வருத்தும் தெய்வம் உறைந்திருப்பதாக (புறம்:299-6) மக்கள் நம்பினர். சங்காலத்து இலக்கியங்களில் ஒன்றாகிய திருமுருகாற்றுப்படையில் முருகன் ஆறுபடை வீடுகளாகிய திருப்பரங்குன்றம், குன்றுதோறாடல், திருஆவினன்குடி, திருச்சீர்அலைவாய், திருஏரகம், பழமுதிர்சோலை ஆகிய தலங்களிலே எழுந்தருளி மக்களுக்கு அருள்பாலித்த செய்திகளும் அந்நூலில் மிக விரிவாகப் பாடப்பட்டுள்ளன. குறிஞ்சிக் குமரனாக, வள்ளி மணாளனாக, உமை பாலனாக, வெறியாட்டு விரும்பும் கடவுளாக முருகன் தமிழ் மக்களால் வழிபடப்பட்டிருக்கிறார். பின்னாளில் ஆரிய உருவாக்கமான சுப்பிரமணியக் கடவுளின் இயல்புகளும் புராணக் கதைகளும் முருக வழிபாட்டுடன் இணைந்தமை பண்பாட்டு ஊடுருவலின் விளைவாகும். இதனையே கந்த புராணம் விரிவாகப் பாடுகிறது. மருதநில மக்களின் தெய்வமாக இந்திரன் குறிப்பிடப்படுகிறான். ஆயிரம் கண்களை உடையவனும், வச்சிராயுதத்தைத் தாங்கியவனும், யானையை வாகனமாகக் கொண்டவனும் ஆகிய இந்திரனுக்குக் கோயில் இருந்ததாகப் புறநானூறு (241-2-3) கூறுகிறது. சிலப்பதிகாரம் சித்தரிக்கும் இந்திர விழா சங்ககால மக்களாலும் கொண்டாடப்பட்டமையை ஐங்குறுநூறு (62-1) குறிப்பிடுகிறது. இந்திரன் வழிபாடு சிவன் முதன்மைபெற்ற பின்னர் தமிழ் மக்களிடம் பெருவழக்கற்றுப் போயிற்று.

நெய்தல் நில மக்கள் கடல் தெய்வமாக வருணனை வழிபட்டனர் எனத் தொல்காப்பியர் குறிப்பிடுவர். ஆனால் அந்நில மக்கள் கடல் தெய்வத்தின் சின்னமாகச் சுறாமீன் கொம்பை கடற்கரை மணலில் நட்டு வழிபட்ட செய்திகளே சங்க இலக்கியங்களிற் கூறப்படுகின்றன.

பாலைநில மக்களது தெய்வமாக கொற்றவை வழிபடப்பெற்றாள். அதேவேளை மலையுறை தெய்வமாகவும் வெற்றித் தெய்வமாகவும் கொற்றவையை மக்களும் மன்னரும் போற்றினர். சேரநாட்டிலுள்ள ஆயிரைமலையில் கொற்றவையின் கோட்டம் இருந்ததாகப் பதிற்றுப்பத்தில் குறிப்புகள் உள்ளன. கொற்றவை புதல்வனாக முருகன் மக்களால் வழிபடப்பட்டான். போருக்குச் செல்லும் மன்னர் கொற்றவைக்குப் பலி கொடுத்து வெற்றியை வேண்டி வழிபட்ட செய்திகள் புறானூற்றில் உள்ளன.

சங்க காலத்தில் தெய்வம் என்ற சொல் வழக்காறு நிலைபெற்றிருந்தது. தொல்காப்பியத்திலே தெய்வம் உணர்வே... (தொல். அகம் 18), மொழிப்பொருள் தெய்வம். (தொல். அகம்), உள்ளுறை தெய்வம்... (தொல். அகம். 47), என்ற சான்றுகள் உள்ளன. அதேபோன்று சங்க காலத்தில் வழிபாடு என்ற வழக்காறும் இருந்துள்ளது.

சங்ககால மக்களிடையே நடுகல்வழிபாடு மிகவும் பிரபல்யமாக இருந்திருக்கிறது. வீர மரணம் எய்தியவரின் பெயரும் புகழும் கல்லிற் பொறித்து அந்த உருவக்கல்லை மக்கள் வழிபட்டிருக்கின்றனர். நடுகல் மூலமாகத் தோற்றம் பெற்ற மானுட உருவவழிபாடு, தெய்வ உருவ வழிபாட்டுக்கும் முன்னோடியாக அமைந்திருக்கலாம். சங்க இலக்கியங்களில் நடுகல் வழிபாடு பற்றிய செய்திகள் பெரிதும் பேசப்படுகின்றன. வீரயுகம் எனப் போற்றப்பட்ட அக்காலத்தில் அரசனுக்காக - நாட்டுக்காகப் போரிட்டு வீரமரணம் அடைந்த வீரர்களின் நினைவுச் சின்னங்களாக நடுகற்கள் நிறுவி அவற்றை மக்கள் வழிபட்டு வரலாயினர். சங்க காலத்தில் நடுகல் வழிபாடு சமூக முக்கியத்துவம் பெற்றிருந்ததால் தொல்காப்பியர் அது பற்றி ஒரு சூத்திரம் அமைத்தார்.

**காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்**
**சீர்த்த மரபில் பெரும்படை வாழ்த்தலென்று**
**இருமூன்று வகையிற் கல்லொடு...**
(தொல். பொருள்: 63)


வீரர்களின் நினைவுக் குறியீடாக நடுகல் நாட்டற்பொருட்டு முதலிற் பொருத்தமான கல் தெரிந்தெடுக்கப்படும். அக்கல்லில் வீரனின் உருவம் செதுக்கப்படும். அக்கல் நடுவதற்குரிய நல்ல நிமிர்த்தம் பார்க்கப்படும். பின்னர் தக்க மரியாதையுடன் நடுகல் எடுத்து வரப்பட்டு, நீரில் கழுவி தக்க இடத்தில் நிறுவி, அதற்கு வழிபாடும் நடத்தப்படும் எனத் தொல்காப்பியர் கூறுவர். இவ்வாறு நடுகல் நிறுத்திய இடத்தில் சிறுகோயில் அமைத்தலும், அவ்வீரனின் பெருமைகளை நினைத்துச் சிறப்புச் செய்தலும், அந்த நடுகல்லைத் தெய்வமாகப் போற்றி வழிபடுதலும் பெருவழக்காக இருந்தது.

நடுகல் நடப்பட்ட இடங்களிலே இறந்துவிட்ட வீரர்கள் பயன்படுத்திய போர்க்கருவிகளும் வைக்கப்பட்டிருந்தமையை பட்டினப்பாலை கிடுகு நிரைத்து எஃகு ஊன்றி நடுகல்லின் அரண் போல... (78-79) எனக் குறிப்பிடுகின்றது. நடுகற்களில் இறந்தோரின் பெயர்கள் பொறிக்கப்பட்டமையை ஐங்குறுநூறு விழுத்தொடை மறவர் வில்லிடைத் தொலைந்தோர் எழுத்துடை நடுகல்... (352:1-2) எனப் பதிவு செய்துள்ளது. நடுகல்லில் குறிக்கப்பட்டோர் கடவுளர்களாகப் போற்றப்பட்டனர் என மலைபடுகடாம் (394-396) குறிப்பிடுகிறது. நடுகற்களுக்கு மக்கள் மயில்தோகை சார்த்தி, நெற்பொரி சொரிந்து, செம்மறிக் குட்டியைப் பலி கொடுத்து வீரவழிபாடு செய்துள்ளமையைச் சங்க இலக்கியங்களில் விரிவாகக் காணலாம்.

அடுத்ததாகச் சிவ வழிபாடு திராவிட மக்களின் பூர்வீககால வழிபாடாக இருந்தமை சிந்துவெளி நாகரீக புதைபொருட் சான்றுகளால் நிருபிக்கப்பட்டுள்ளது. ஆயினும் சங்க காலத்தில் சிவவழிபாடு பெரிதாகப் பேசப்படாமை பற்றி நோக்குதல் வேண்டும். சிவனைப்பற்றிய வருணனைகள் மதுரைக்காஞ்சி (453-455), திருமுருகாற்றுப்படை (151-154) முதலான பல சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. சங்கப் புலவர் சிவனைப்பற்றிப் பாடாது விட்டார்களா அல்லது சங்க மருவிய காலத்தில் தமிழ் நாட்டிற் புகுந்த சமண பௌத்தர்கள் சமயக் காழ்ப்பின் பின்னணியில் சிவன் பற்றிய பாடல்களை அழித்து விட்டார்களா என்பதும் ஆய்வுக்குரியதாகும்.

1945 இல் அரிக்கமேட்டில் சேர். மேட்டிமர் வீலர் மேற்கொண்ட புதைபொருள் ஆய்வில் பாவை உருவங்கள் கண்டெடுக்கப்பட்டன. அவற்றில் சிவனது உருவமும் அடையாளம் காணப்பட்டுள்ளது. அத்தகைய அடையாளங்கள் சங்க கால


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் வழிபட்ட சிவனது உருவத்தை நினைவு படுத்துவனவாக உள்ளன. சங்க இலக்கியங்கள் சிவனது உருவத்தை வருமாறு குறிப்பிடுகின்றன: பிறைநுதல் விளங்குமொருவன், (புறநா.55:5), நீலமணி மிடற்றொருவன் (புறநா.61:5-6), நீள்நிமிர்சடை முழுமுதல்வன் (புறநா.166:1-2), மழுவாள்நெடியோன் (மதுரைக்காஞ்சி: 453-455), வெள்ளேறு வலம்வயின் உயரிய பலர் புகழ் திணிதோள், உமை அமர்ந்து விளங்கும் இமையா முக்கண், மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வன் (திருமுருகு-151-154) என சிவபெருமானின் உருவ வருணனைகள் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன.

அகத்திணை இலக்கியங்களில் காதல்வழிப்பட்ட தலைமகள் மேற்கொண்ட வழிபாடு பற்றித் தொல்காப்பியத்திலே, வழிபாடு மறுத்தல், வழிபடுகிழமை அவட்கு இன்மையால் என்ற தொடர்கள் இடம்பெறுகின்றன. இளம்பிறையை வழிபட்டால் காதல் கைகூடும் என்பதும், காதலன் கிடைக்கப் பெற்ற பின்னர் பிறையைத் தொழும் வழக்கம் இல்லை என்பதும் அக்கால நம்பிக்கையாக இருந்துள்ளது. ஆற்றுப்படை இலக்கியங்களிற் பரிசில் வேண்டி மன்னரை நோக்கிச் செல்லும் பாணர், விறலியர் முதலான பரிசில் வாழ் மக்கள் மன்னரை வழிபட்டுச் சென்ற செய்திகளும் புறநானூறு மற்றும் ஆற்றுப்படை இலக்கியங்களிலும் கூறப்படுகின்றன.

சங்க கால மக்கள் வாழ்வில் இயற்கை வழிபாடே பெரிதும் நிலைபெற்றிருந்தது. பிறைதொழுதல் பெண்களிடம் நிலவிய முக்கிய வழிபாடாக இருந்திருக்கிறது. பெண்ணொருத்தி தனக்கென ஒரு தலைமகன் கிடைக்கும் வரை பிறையைத் தொழும் மரபைப் பின்பற்றுவது வழக்கமாகும். காதல் தலைவனை உரிமையாக அடைந்த பின்னர் அவள் பிறையைத் தொழாதிருக்கும் ஒரு மரபும் சங்க காலத்தில் இருந்தது. சத்தியம் உரைத்தல் என்ற நடைமுறையும் அதன்வழிப்பட்ட நம்பிக்கைகளும் மக்களிடம் காணப்பட்டது. வாழ்க்கையிலே காதலன் தன் காதலிக்குச் சத்திய வாக்குக் கொடுத்தால் அதன்படி ஒழுக வேண்டும். அவ்வாக்குப் பிழைத்தால் தெய்வம் அவரைப் பழிவாங்கும் என்ற பயமும் நம்பிக்கையும் பெண்களிடம் இருந்தமையை அகத்திணைச் செய்யுள்கள் குறிப்பிடுகின்றன.

அக்காலத் தமிழ் மக்கள் வெறியாட்டு என்ற தெய்வ ஆடலை நடத்தி வழிபாடு மேற்கொண்டுள்ளனர். அவ்வழிபாட்டில் முருகனை முன்னிறுத்தி வேலன் என்போன் தன்மீது தெய்வம் ஏறப்பெற்று ஆடுவான். வேலனுடன் சேர்ந்து குறமகள் ஒருத்தி வள்ளியாகப் பாவனை செய்து இசைக்கருவிகள் ஒலிக்கத் தெய்வம் ஏறி ஆடுவாள். மக்கள் பயபக்தியுடன் அவர்களை வழிபடுவதும், தெய்வம் ஏறப் பெற்று வெறியாட்டு அயர்வோர், தெய்வ வாக்காக கட்டு (தெய்வவாக்கு) கூறுதலும் இடம்பெறுவதுண்டு. வெறியாட்டு நடைபெறும்போது ஆடு பலி கொடுக்கப்பட்டது. நெற்பொரியுடன் மலர்களும் எங்கும் தூவப்பட்டன. காதல் அணங்கினால் பீடிக்கப்பட்ட தம் மகளுக்காகவே தாய்மார் இவ்வழிபாட்டைப் பெரிதும் மேற்கொண்டனர் என அறியப்படுகிறது. அவ்வழிபாட்டிலே வெறியாடுவோருக்கு பக்திமயப்பட்ட ஆவேசம் ஊட்டும் வகையில் குழலும் யாழும் வாசிக்கப்பட்டன, வெறியாட்டில் முழவு என்ற பறையுடன் முரசும் ஒலித்தமையைப் பட்டினப்பாலை வருமாறு குறிப்பிடுதல் நோக்குக:

செறிதொடி முன்கை கூப்பிச் செவ்வேள்
வெறியாடு மகளிரொடு செறியத் தாஅய்க்
குழலகவ யாழ்முரல
முழவதிர முரசியம்ப
விழவறா வியலா வணத்து. (154-158).

அக்கால தெய்வ வழிபாட்டில், பொது இடங்களிலே நடப்பட்ட கல் வடிவான தெய்வங்களையும் பெண்கள் வழிபட்டுவந்தமை பற்றி அகநானூறு (307-11-12) கூறுதல் காண்க.

நெய்தல் நிலத்து மக்கள் கடல் தெய்வத்தை வழிபட்டனர். பூரணை நிலவுக்காலத்தில் கடற்கரை மணற் பரப்பில் சுறா மீன் கொம்பைக் கடல் தெய்வமாகப் பாவித்து அதனை மணலில் நாட்டி, மீனும் இறைச்சியும் படைத்து, மலர் மாலை சூட்டி, பனங்கள் படைத்து, நெல்லில் வடித்த கள்ளை அருந்தி வழிபாடு செய்தமையைப் பட்டினப்பாலை (86-93) விரிவாகக் கூறுகிறது.

வழிபாடு என்றதும் தெய்வ வழிபாடும் கோயில் வழிபாடும் மனக் கண்முன் தோன்றுதல் இயல்பே. கோ 10 இல் ஸ்ரீ கோயில் கோ ஸ்ரீ அரசன். சங்க காலத்தில் மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் என்ற கோட்பாடு மன்னரிடமும் மக்களிடமும் நிலைபெற்றிருந்தது. அதனால் மக்கள் மன்னரையும் வழிபட்டனர் என்பது இயல்பாயிற்று. எனவே சங்க காலத்தில் தெய்வங்களையும் மன்னரையும் வழிபட்டு வந்தமை புலனாகின்றது.

இலக்கிய வரலாற்றாசிரியர் சங்க காலத்தை இயற்கை நெறிக் காலம் எனக் குறிப்பிடுவர். இயற்கையோடு இயைந்த வாழ்க்கையையே அம்மக்கள் மேற்கொண்டிருந்தனர், ஐந்து நிலங்களிலும் வாழ்ந்த மக்கள் ஆங்காங்கு முதன்மைபெற்ற இயற்கை அம்சங்களை வழிபட்டுவந்தமை இயல்பான செயலாகவே அமைகிறது. அவ்வகையில் மலை, ஆறு, காடு என்பனவற்றில் கடவுள் உறைவதாக அவர்கள் நம்பினர். கடவுள் ஆலம் (புறம்-199), காடுறை கடவுள் (புறம்-290) என வரும் இலக்கியக் குறிப்புகள் இதனைச் சான்றுபடுத்துகின்றன. இவற்றுடன் விலங்குகள், பறவைகள், இடி. முழக்கம், மின்னல் முதலானவையும் இவ்வரிசையில் வழிபடப்பட்ட இயற்கைக் கூறுகளாக அறியப்படுகின்றன.

மனிதன் - மனிதம் - மானிடம் - மானுடம் என்ற சொற்கள் ஆங்கிலத்தில் Human, Humanity Humanism என்ற பதங்களுடன் ஒத்தவையாகும். இலக்கியங்கள் மனித உணர்வுகளை மனித உறவுகளைப் பாடுவதையே சங்க காலம் முதற்கொண்டு இற்றை வரையிலான இலக்கியங்கள் பிரதிபலிக்கின்றன. மதமும் மானிடமும் பற்றிய கட்டுரை ஒன்றில் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் தமிழ் இலக்கியத்தை மானுடக் கோட்பாட்டின் தெளிவாகவும் சான்றாகவும்காணும்நோக்குமேனாட்டுச்சிந்தனைமரபொன்றி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னைத் தமிழ் நிலைப்படுத்தும் ஒரு கண்ணோட்ட மரபின் முகிழ்ப் பாகும் (1983:157) எனக் கூறுவர் ஆனால், மேனாட்டு இலக் கிய சிந்தனைகள் தோன்றுவதற்கு முன்னரே சங்க இலக்கிய ங்கள் மனித சிந்தனைகளின் வெளிப்பாடுகளாகவும் வடிவ ங்களாகவும் தோற்றம் பெற்றிருத்தனை அறிந்து கொள்ளுதல் இன்றியமையாதது. சங்க இலக்கியப் புலவர்களின் சிந்தனை மரபில் முழுக்க முழுக்க மனித நேயச் சிந்தனை மரபே இழை யோடியுள்ளது என்பது உண்மையாகும்.

சங்கப் புலவர் மானுடத்தை மக்கள் மத்தியில் விதந்துரைத்து அதனைப் பேணி வந்துள்ளனர். சங்க காலப் புலவர்கள், மக்கள் அனைவரும் ஓரினத்தாரே என்று வலியுறுத்தினர். இனம், அரசியல் இரண்டாலும் விளைந்த நெருக்கடிகளைப் போக்க முயன்றனர். அடிப்படை மனித உரிமைகளை எடுத்துக் காட்டி போர்களைத் தடுத்துள்ளனர். இயற்கை வருணனை மூலம் இயற்கைச் சமநிலைச் சூழலையும் உணர்வுகளையும் வளர்த்தனர். அறம் திறம்பட வாழ்க்கையில் தாங்களே வாழ்ந்து காட்டினர். வாழ்க்கையின் மேலான குறிக்கோள்களைச் சுட்டிக் காட்டினர். சமூக உறவை வளர்த்தனர். என ஆதி பாலசுந்தர னார் கூறுவது மிகப் பொருத்தமான கருத்தாகும். (பக். 30)

சங்ககால மக்களிடையே நிலவிய மதம் தொடர்பான விடயங்களை ஆராயும்போது கடவுளர் மீது அவர்கள் கொண்ட நம்பிக்கை, மதத்தின் அடிப்படையில் அவர்கள் மேற்கொண்ட சடங்குகள், கடவுளர்மீதும் சடங்குகளோடும் தொடர்புடைய புராணக்கதைகள் என்பன முன்னிற்கின்றன. பல்லவர் காலத்துப் பக்தி இலக்கியங்களிலும் இம்மூன்று அம்சங்களே மேலோங்கி அவ்விலக்கியத்தின் இயங்குநிலைக்கு ஒத்தாசை புரிந்துள்ளன. ஆயினும் மதம் இல்லாமல் இலக்கியம் இல்லை என்பது அர்த்தமில்லை. சங்க காலத்து இலக்கியங்களை மட் டும் எடுத்து நோக்கினால், சங்க இலக்கியத் தொகுப்பிலுள்ள தனித்தனிப் பாடல்களில் பெரும்பாலானவற்றில் மதம் பற்றிய சிந்தனைகள் இல்லை. ஆங்கு தனித்து வீரமும் காதலும் பொருண்மியமும் வாழ்வியலும் என வெவ்வேறு விடயங்கள் மட்டுமே வெளிப்படக்காணலாம்.

நாட்டார் இலக்கிய மரபில் தோற்றம் பெற்றவை சங்க இலக்கியங்கள் என்பது இக்கட்டுரைத் தொடரில் பலமுறை குறிப்பிடப்பட்டுள்ளது. அதுபோன்றே சங்ககாலத்தில் மதம் என்று கூறும்போதும் இரு நிலைப்பட்ட சமயாசாரங்களை நோக்க வேண்டும், உயர்ந்தோர் மதம். பாமரர் சமயநடைமுறைகள், நம்பிக்கைகள் என்பன பற்றிச் சிந்திக்க வேண்டும். சங்க இலக்கியவழி இவ்விரு நெறிப்பட்ட மதக்கோட்பாடுகளும் பொதிந்து கிடப்பதை அறிந்துகொள்ளலாம். அக்காலத்தில் சமூக ஏற்றத்தாழ்வுகள் பேசப்படவில்லை என்பது யதார்த்தமே. ஆனால் தொழில்சார் அடிப்படையிலும், அவர்களின் வாழ்வியல் அடிப்படையிலும் சடங்குகள் நம்பிக்கைகள் வேறுபட்டிருப் பதைச் சங்க இலக்கியங்கள் சான்றுபடுத்துகின்றன. 21ஆம் நூற்றாண்டிலும்கூட இந்த வேறுபாடுகளை சமூக அடிப்படை யில் கண்டுள்ள வாய்ப்புகள் உண்டு. பண்பாட்டின் உயிர் நாடி மொழியாகும். அதற்கு அடுத்தபடியாக மதமே அம்மொழிப் பட்ட இலக்கியங்களையும் பண்பாட்டையும், சமூக ஒருமைப் பாட்டையும் அதற்கும் அப்பால், நாட்டின் அரசியலையும் நெறிப்படுத்தி வருகின்றது என்பது இன்றைய உலக நாடுகளின் அனைத்துச் செயற்பாடுகளிலும் கண்டு கொள்ளும் உண்மை என்பது வெள்ளிடை மலையாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெரோனிக்காவின் முக்காடு

**முடிவுக்கு வராத மர்மங்கள்**

**– ராஜ்சிவா**

**பல மர்மங்களைக் கொண்டது. உண்மை எது, பொய் எதுவென அறிவியலாளர்களையே திண்டாட வைத்த சம்பவத்தின் அடிப்படையில் ஆராயப்படும் ஒரு தொடர் கட்டுரை. படியுங்கள். படித்துவிட்டு உங்கள் அபிப்பிராயத்தைச் சொல்லுங்கள். – ராஜ்சிவா –**

கிருஸ்தவர்களின் புனித வேதமாகக் கருதப்படும் பைபிள், 'பழைய ஏற்பாடு', 'புதிய ஏற்பாடு' என்ற இருபகுதிகளைக் கொண்டது. முதல் மனிதனான ஆதாமைக் கடவுள் படைத்ததில் ஆரம்பித்து, யேசுநாதர் பிறப்பதற்கு முன்னுள்ள காலம் வரையான வரலாற்றைச் சொல்லும் பகுதி 'பழைய ஏற்பாடு' என்றும், யேசுநாதரின் பிறப்பையும், அவரது வாழ்க்கையையும், அதன் பின்னுள்ள தொடர்ச்சியான சம்பவங்களையும் சொல்லும் பகுதி 'புதிய ஏற்பாடு' என்றும் பிரிக்கப்பட்டிருக்கிறது. புதிய ஏற்பாட்டில், யேசுநாதரின் வரலாறு நான்கு பேர்களினால் சொல்லப்பட்டிருக்கிறது. இன்றுள்ள கணிப்பின்படி, உலகம் முழுவதும் 2.1 பில்லியன் மக்கள் கிருஸ்தவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் மத்தேயு, மார்க்கு, லூர்க்கா, யோவான் ஆகிய நால்வரும் புதிய ஏற்பாட்டில் கூறிய யேசுநாதரின் வரலாற்றையே தெரிந்து வைத்திருக்கிறார்கள். புதிய ஏற்பாட்டில் இல்லாத யேசுநாதர் பற்றிய கதைகளை இவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. வத்திக்கானில் அமைந்திருக்கும் கத்தோலிக்கத் திருச்சபையும் ஏற்றுக்கொள்வதில்லை. ஆனாலும், புதிய ஏற்பாட்டில் காணப்படாத, சொல்லப்படாமல் தவறவிடப்பட்ட சம்பவமொன்று, வத்திக்கான் திருச்சபையாலும், கிருஸ்தவர்கள் அனைவர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. யேசுநாதர் செய்த அதிசயங்களில் ஒன்று என்பதால் அது ஏற்றுக்கொள்ளப்பட்டதோ தெரியவில்லை. 'வெரோனிக்காவின் முக்காடு' (Veil of Veronica) என்ற பெயரில் அந்தச் சம்பவம் அழைக்கப்படுகிறது. 'வெரோனிக்கா' என்னும் பெண்மணிக்கு நிகழ்ந்த ஒரு அதிசயச் சம்பவம் அது.

**அந்தச் சம்பவம்............!**

குற்றமற்றவர் என்பதை நன்கு தெரிந்த பின்னரும், பரிசேயர்களின் சதியாலும், மக்களின் வெண்டுகோளினாலும், யேசுநாதரை அவர்கள் வசமே ஒப்படைக்கிறான் ஆளுனர் பிலாத்து. சிலுவையில் அறைந்து கொலை செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் அவரை இழுத்துச் செல்கின்றனர். தான் அறையப்படப்போகும் சிலுவையைத் தானே சுமந்தபடி, நொடிக்கொரு சவுக்கடியுடன் நடக்கிறார் தேவகுமாரன். தலையில் சூட்டப்பட்டிருந்த முற்கிரீடத்தின் வழியே குருதி பொங்கி வழிகிறது. கால்கள் இடற, ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்துச் செல்லும் யேசுநாதரைச் சோகத்துடன் பார்த்துக் கொண்டிருக்கின்றனர் மக்கள். அந்த மக்கள் கூட்டத்தில் ஒரு பெண்மணியும் இந்த அநீதிகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். அந்தப் பெண்மணியின் பெயர் 'வெரோனிக்கா'. குருதியும், வியர்வையும், அன்புடன் சேர்ந்து வழியும் அவர் முகத்தைப் பார்க்கிறாள் அவள். அவரும் அவளை அப்போது நிமிர்ந்து பார்க்கிறார். பார்த்த நொடியில் கனிவான புன்னகையொன்று யேசுவின் முகத்தில் தோன்றி மறைகிறது. திடீரென வெரோனிக்கா துணிச்சலான காரியமொன்றைச் செய்கிறாள். தன் தலையில் கட்டப்பட்டிருக்கும் வெண்பட்டினால் நெய்த முக்காட்டுத் துணியைக் கையிலெடுத்துக் கொண்டு யேசுவின் அருகே செல்கிறாள். அவரின் முகத்திலுள்ள இரத்தத்தையும், வியர்வையையும் பரிவுடன் துடைத்துவிடுகிறாள். அப்போதும் புன்னகையே அவளுக்குப் பரிசாகக் கிடைக்கிறது. சவுக்குகள் சீற, மீண்டும் அவர் அழைத்துச் செல்லப்படுகிறார். அவர்கள் சென்ற வழியைப் பார்த்து வெரோனிக்கா சோகத்தில் கண்ணீர் சிந்துகிறாள். உலகமே அவளைக் கொண்டாடப் போகின்றது என்று அந்தக் கணத்தில் அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை. வத்திக்கானில் இருக்கும் கத்தோலிக்கத் திருச்சபை அவளுக்குப் பின்னாளில் 'புனிதர்' (Saint) என்னும் அந்தஸ்தை வழங்கப் போகிறது என்றும் தெரிந்திக்கவில்லை.

தன் கையிலுள்ள பட்டுத் துணியைச் சோகத்துடன் பார்க்கிறாள் வெரோனிக்கா. இரத்தத்தால் சிவப்பு நிறத் திட்டுகளுடன் ஈரமாகிப் போயிருந்தது துணி. ஏதோ ஒரு உணர்வு அவளை நெருட, துணியை விரித்துப் பார்க்கிறாள். அவளால் நம்பவே முடியாத ஆச்சரியம் அந்தத் துணியில் காணப்பட்டது. இப்படியொரு அதிசயத்தை அவள் பார்த்ததேயில்லை. அவளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SAMY & SONS

## Wholesalers & Retailers

*Textiles, Jewellery, Gift Items & Fancy Goods, Express Money Transfer, Pawn Broker, Party Item Rental Etc.*

☑ வரவேற்பு
☑ விலை
☑ தரம்

☑ தெரிவு
☑ நம்பிக்கை
☑ நாணயம்

**குறைந்த விலையில் நிறைந்த சேவை**

- 2011ம் ஆண்டிற்கான புதிய டிசைன் சாறி வகைகள் சுடிதார் வகைகள் (அனார்கலி, பட்டேலா, மசாகலி, etc.)
- லங்கா சூட், சிறுவர் சிறுமியர் ஆடவர்களுக்கான ஆடைவகைகள்,
- பரதநாட்டிய உடைகள், பரதநாட்டிய ஆபரணங்கள், (f)பான்சி நகைகள் ஆண்கள், பெண்களுக்குரிய கைகடிகார வகைகள்
- கலை சம்பந்தப்பட்ட வாத்திய கருவிகள்(சுருதிப்பெட்டி, வயலின், மிருதங்கம், தபேலா)
- அன்பளிப்புப் பொருட்கள் (மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்)
- கதிரைகள், குத்துவிளக்கு, நடராஜர் சிலை, பாவை விளக்கு,
- மணமகனுக்குரிய சூட் வகை, தலைப்பாகை போன்றவைகள் வாடகைக்கும், விற்பனைக்கும் பெற்றுக்கொள்ளலாம்.
- தரமான 22 கரட் தங்க நகைகள் விற்பனைக்கும்
- துரித பணமாற்றுச் சேவை (இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், மற்றும்
- ஐரோப்பிய நாடுகளுக்கான நம்பிக்கை நிறைந்த சேவை) சமையலறைப் பாத்திரங்கள், றைஸ் குக்கர், ரொட்டி மேக்கர், பிரஷர் குக்கர், அடுக்குச் சட்டி, ஸ்ரீமர், etc.
- சுமித், (Sumeet, C.S.A. Approved) 5 வருட கால வாரண்டி(Warrenty) யுடன் Preethy (பீரித்தி) Bajaj(பஜாஜ்), திருத்த வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.









## Samy & Sons Pawn Broker Govt. Licensed





அரச அங்கீகாரம் பெற்ற
தங்க நகை அடைவு மாடம்
துரித பணமாற்று சேவை
வெளிநாட்டு நாணயமாற்று





**Tel: 416-298-1598 Fax: 416-298-2849**

**1884 B Kennedy Road (at Ellesmere)**
**Scarborough, Ontario M1P 2L8**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளில் இருந்த வெண்பட்டுத் துணியில், யேசுநாதரின் முகம் அப்படியே பதிந்து போய்க் காணப்பட்டது. கண்கள் திறந்த நிலையில், இரத்தம் வழியும் அவரின் முகம் புகைப்படம் போலப் பதிந்து போய்க் காணப்பட்டது. பரிசேயர்கள், யேசுநாதரின் சீடர்களையும், அவரைப் பின்பற்றுபவர்களையும் தேடிப் பிடித்து கைது செய்து வந்தபடியால், இந்த அதிசயத்தை யாருக்கும் சொல்லாமல் தனக்குள்ளேயே பாதுகாத்து வந்தாள் வெரோ னிக்கா. 'வியர்வைத் துணி' என்று லத்தீன் மொழியில், பொருள் தரக்கூடிய 'சுடாரியம்' (Sudarium) என்னும் பெயரில், இந்தத் துணி பின்னாட்களில் அழைக்கப்பட்டது. வெரோனிக்கா தன் கடைசிக் காலங்களில் ரோம் நகருக்குச் சென்று, அங்கு ஆட்சி செய்த சீசரான 'டிபெரியுஸ்' (Tiberius) சக்கரவர்த்திக்கு இந்தத் துணியைப் பரிசாகக் கொடுத்ததாக சில தகவல்கள் சொல்கின்றன.

புதியஏற்பாடுஎங்குமேவெரோனிக்காஎன்னும்பெயர்காணப் படவில்லை. அப்படியொரு அதிசயச் சம்பவம் உண்மையில் நடைபெற்றிருந்தால், யேசுநாதரின் சரித்திரத்தை எழுதிய நால்வரில் ஒருவராவது அதைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பார். அதனால், அப்படியொரு சம்பவம் நடைபெறவேயில்லை என்று சொல்பவர்களும் இல்லாமலில்லை. ஆனால், கத்தோலிக்க திருச்சபை வெரோனிக்காவைப் புனிதராக ஏற்றுக் கொண்டது. வத்திக்கான் நகரில் அமைந்துள்ள மிகப்பிரபலமான St.Peter's Basilica தேவாலயத்தில், புனித வெரோனிக்காவுக்கெனப் பெரியதொரு சிலையும் நிறுவப்பட்டது.

புனித வெரோனிக்காவின் இந்தச் சம்பவம் நடைபெற்றதா? இல்லையா? என்று பார்ப்பதல்ல இந்தக் கட்டுரையின் நோக்கம். இந்தக் கட்டுரையில் நாம் பார்க்க வந்த விசயமே வேறு. அந்த விசயம் எதுவெனப் பார்ப்பதற்கு முன்னர் இதை நான் சொல்லிவிட வேண்டும். இந்தக் கட்டுரை எந்த இடத்திலும் கடவுள் நம்பிக்கையாளர்களைக் காயப்படுத்தாது. கிருஸ்தவர்களின் நம்பிக்கைக்கு எதிராக எதையும் நான் சொல்லப் போவதுமில்லை. இங்கு நான் சொல்லப் போகும் தொடர்ச்சியான சில சம்பவங்களை வத்திக்கான் திருச்சபையே, விஞ்ஞானிகளைக் கொண்டு ஆராய முற்பட்டது. அந்த ஆராய்ச்சிகளின் மூலம் உண்மை எதுவெனத் தெரிந்துகொள்ள வத்திக்கானே முயற்சி செய்தது. அந்தச் சம்பவங்களை மட்டும் தெரிந்து கொள்வதே இந்தக் கட்டுரையின் நோக்கம். ஐரோப்பிய, அமெரிக்க நாட்டினர்களுக்கு மீடியாக்கள் மூலம் தெரிந்திருப்பது, நம் நாட்டிலுள்ளவர்களுக்கு மட்டும் தெரியாமல் இருக்கிறது. அப்படித் தெரியாமல் இருக்கும் சம்பவங்களைத்தான் இந்தக் கட்டுரை அடக்கியிருக்கும். அதனால், தயவுசெய்து, கட்டுரையின் முடிவுவரை அமைதியாகப் படியுங்கள். இப்போது அடுத்த சம்பவத்துக்குப் போகலாம் வாருங்கள். புதிய ஏற்பாட்டில் நடைபெற்ற சம்பவம் அது.

**அந்தச் சம்பவம்............!**

''ஏலீ ஏலீ லாமா சபக்தானி'' என்ற பெரும் சத்தத்துடன் யேசுநாதரின் ஆவி, அவர் உடலை விட்டுப் பிரிகிறது. யேசுவின் சீடரும், பெரும் செல்வந்தருமான அரிமத்தியா ஊரைச் சேர்ந்த யோசப் என்பவர், ஆளுனர் பிலாத்துவிடம் சென்று, ''இயேசுவின் உடலை அடக்கம் செய்வதற்காகக் கொடுத்துவிடுங்கள்'' என்று கேட்டுக் கொண்டார். அதை ஏற்றுக் கொண்ட பிலாத்து, உடலை யோசப் வசமே கொடுக்கும்படி உத்தரவிட்டான். யேசுவின் உடலைப் பெற்றுக் கொண்ட யோசப்பும், அவரது சீடர்களும், இஸ்ரேலர்களை அடக்கம் செய்யும் முறையில், தூய்மையான மெல்லிய நீண்ட துணியினால் உடலை மூடிக்கட்டினார்கள். பின்னர் கன்மலையில் உள்ள கல்லறையொன்றில் உடலை வைத்துப் பெரிய கல்லொன்றினால் அதன் வாசலை மூடினார்கள். மூன்றாம் தினம் கல்லறையைப் பார்க்க வந்த மரிய மக்தலேனாவும், மற்றவர்களும், கல்லறையை மூடியிருந்த பெரிய கல் விலக்கப்பட்டிருந்ததைக் கண்டார்கள். கல்லறையின் வாயில் திறக்கப்பட்டிருந்தது. பயத்துடனும் ஆச்சரியத்துடனும் உள்ளே சென்று பார்த்தபோது, அங்கே யேசுநாதரின் உடலைப் போர்த்தி யிருந்த துணி மட்டும் கீழே வீழ்ந்து கிடப்பதைக் கண்டனர். ஆனால் அங்கே யேசுநாதர் காணப்படவில்லை. ''இறந்த மூன்றாம் நாள் நான் உயிர்த்தெழுவேன்'' என்று யேசுநாதர் கூறியது அவர்களின் ஞாபகத்திற்கு வந்தது. அப்போது, அங்கு தோன்றிய இறைதூதன் ஒருவன், 'யேசுநாதர் உயிர்த்தெழுந்து விட்டார்' என்ற நற்செய்தியை அவர்களுக்கு அறிவித்தான்.....

புதிய ஏற்பாடானது, யேசுநாதரின் உயிர்த்தெழுதலுக்குப் பின்னர், சீடர்களுடன் சில காலம் அவர் இருந்ததையும், அவர் பரலோகத்துக்குச் சென்றதையும், சீடர்களுக்கிடையே நடந்த சம்பவங்களையும் சொன்னதேயொழிய, யேசுநாதரின் இறந்த உடலைப் போர்த்தப் பயன்படுத்தப்பட்ட அந்தத் துணியைப் பற்றி எதுவுமே சொல்லவில்லை. அதற்குப் பின்னர், அந்தத் துணிக்கு என்ன நடந்தது? அதை யாராவது கல்லறையிலிருந்து பாதுகாப்பாக எடுத்துச் சென்றார்களா? என்னும் தகவல் வரலாற்றில் எங்கும் பதிவு செய்யப்படவில்லை. ஆனால், அந்தத் துணி பின்னாட்களில் வரலாற்றின் மிகப்பெரிய அதிசயத்துக்கு அத்திவாரமாகப் போகிறது என்று யாருக்கும் அப்போது தெரிந்திருக்கவில்லை. பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர், நம்பவே முடியாத சாட்சியாக, அறிவியலையே திணறடிக்கப் போகின்றது அந்தத் துணி என்று யாரும் அறிந்திருக்கவுமில்லை. கிட்டத்தட்ட 1350 ஆண்டுகளின் பின்னர், அதாவது கி.பி.1357ம் ஆண்டளவுகளில், பிரான்ஸ் நாட்டின் 'லிரே' நகரத்தில் (Lirey, France) இறந்த உடலை மூடிவைத்த நீண்ட துணியொன்று, அழகிய பெட்டியொன்றினுள் புனிதமான பொருளாகப் பாதுகாக்கப்பட்டு வந்ததாக சரித்திரக் குறிப்புகள் சொல்கின்றன. அரசர்களின் கொண்டாட்டங்களிலும், தேவாலயங்களில் நடைபெறும் புனித விழாக்களிலும், அந்தத் துணிக்கு முக்கிய இடமளிக்கப்பட்டு, மரியாதை செய்யப்பட்டு வந்ததாகவும் குறிப்புகள் சொல்கின்றன. கி.பி.1354ம் ஆண்டளவுகளில் பிரான்ஸில் நடைபெற்ற போரொன்றில், நாட்டுக்காகப் போரிட்டு இறந்த ஒரு மாவீரனின் உடலைப் போர்த்திய துணியாகத்தான், அந்தத் துணி இருக்க வேண்டும் என்று அந்தக் காலங்களில் கருதப்பட்டிருக்கிறது. லிரே நகரத்து மக்கள், ஒரு மாவீரனுக்குரிய மரியாதையைச் செலுத்தினார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

சில ஆண்டுகளின் பின்னர், இந்தத் துணி வரலாற்றில் மிகமுக்கியமானதொரு வடிவத்தை எடுத்துக் கொண்டது. பிரான்ஸிலிருந்த இந்தத் துணி, கி.பி.1578ம் ஆண்டளவில் இத்தாலியைச் சேர்ந்த 'டுரின்' நகருக்கு (Turin, Italy) எடுத்துச் செல்லப்பட்டது. 'டுரின்' நகரில் உள்ள கத்தோலிக்கத் தேவாலயம் ஒன்றில் (Cathedral of Turin), ஒரு முக்கிய காரணத்தை முன்னிட்டு, மிகவும் புனிதமான ஒரு பொருளாகப் பாதுகாக்கப்படவும் ஆரம்பித்தது. அந்தப் புனிதத்துக்குக் காரணம் என்னவாக இருக்கும் என்பதை இப்போது நீங்கள் ஊகித்திருப்பீர்கள். யேசுநாதர் இறந்தபோது அவரது உடலை மூடிய துணிதான் இது என்று முடிவுக்குத்தான் அவர்கள் வந்திருந்தார்கள். அப்படியொரு முடிவுக்கு அவர்கள் வருவதற்குக் காரணங்களிருந்தன. வெரோனிக்கா, பட்டுத் துணியொன்றினால் யேசுநாதரின் முகத்தைத் துடைத்த போது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10K | 27 | 23 | 28 | 24 | 35 | 30 | 44 | 36 | 60 | 46 | 83 | 62 |
| 20K | 50 | 40 | 52 | 41 | 64 | 54 | 83 | 67 | 115 | 87 | 160 | 118 |
| 30K | 72 | 57 | 74 | 59 | 93 | 78 | 122 | 98 | 169 | 128 | 237 | 174 |
| 40K | 94 | 74 | 98 | 77 | 123 | 101 | 160 | 129 | 223 | 169 | 315 | 230 |
| 50K | 116 | 91 | 120 | 95 | 152 | 125 | 199 | 159 | 278 | 210 | 392 | 287 |
| 100K | 227 | 177 | 235 | 185 | 399 | 245 | 392 | 354 | 550 | 415 | 768 | 569 |

## 20 YEARS TERM NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 39 | 33 | 63 | 47 | 99 | 79 | 164 | 111 | 267 | 173 | 452 | 297 |
| 150K | 55 | 46 | 91 | 66 | 147 | 103 | 243 | 163 | 397 | 256 | 675 | 442 |

**No Mediacl Exam, No Doctor's Report, No Needles, Fast Approval within 48hrs.**

100% Tax FREE Money

**Thana Manickavasagar**
Broker

Cell : **416-728-5772**
Off : **416-519-3896**
Fax : **647-547-8147**



Nobody Beats my Service & Price

## Your Referrals Will be Rewarded

E-mail : thana7@gmail.com Web : www.thana.ca

*80 Nashdene Road, Unit D218, Scarborough, ON, M1V 5E4*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் முகம் அந்தத் துணியில் பதிந்தது போல, 'லிரே' நகரிலிருந்து 'டூரின்' நகருக்குக் கொண்டுவரப்பட்ட அந்தத் துணியிலும் முழுமையான மனிதனின் உருவ அமைப்பு பதிந்து காணப்பட்டது. நீளமான 'லினன்' (Linen) நூலினால் நெய்யப்பட்ட வெள்ளைத் துணியில், கைகளைக் குறுக்காக வைத்துக் கொண்டிருக்கும் ஒரு மனிதனின் முன்புற உடம்பும், பின்புற உடம்பும் சித்திரமாக வரைந்தது போல, அந்தத் துணியில் பதிந்திருந்தது. பதிந்திருக்கும் உடற்பகுதியெங்கும் இரத்தம் திட்டுத் திட்டாக வடிந்திருக்கும் அடையாளங்களும் காணப்பட்டன. யேசுநாதர் மரித்த போது கூட, அவரது உடல் அரிமத்தேயு யோசப்பினால், நீண்டதொரு வெள்ளைத் துணி யொன்றினாலேயே மூடப்பட்டுக் கல்லறையில் வைக்கப்பட்டது. அதனால், யேசுநாதரின் உடலை மூடிக் கல்லறையில் வைத்த அதே துணிதான், இந்தத் துணியென்றும் பலரால் நம்பப் பட்டது. டூரினுக்கு எடுத்துச் சென்ற அந்தத் துணிக்கு 'டூரின் பிரேதத் துணி' (Shroud of Turin) என்ற விசேச பெயரும் கொடுக்கப்பட்டது.




கி.பி.1578ம் ஆண்டிலிருந்து, கி.பி.1898ம் ஆண்டு வரை, அந்தத் துணியில் காணப்படும் உருவம் யேசுநாதரி னுடையதுதான் என்று பரவலாக நம்பப்பட்டு வந்தாலும், அதை உறுதிப்படுத்த முடியவில்லை. நம்பிக்கை ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு, அந்தத் துணியைப் புனிதமாகக் கருதிவந்தார்கள். காலம் செல்லச் செல்ல, அந்தத் துணியில் பதிந்திருந்த உருவம் மங்க ஆரம்பித்தது. அங்கங்களின் வடிவங் கள் மெதுமெதுவாக மறையத் தொடங்கியது. அதனால், அந்தத் துணியைப் புகைப்படமாகப் பிடித்து வைப்பதற்கு வத்திக்கான் விரும்பியது. கி.பி.1898ம் ஆண்டு புகைபடத்தை எடுக்க ஆயத் தம் செய்த போதுதான் அந்த உலகை உலுக்கும் அதிசயம் நடந்தது. அதுவரை இருந்த சந்தேகங்கள் அனைத்தையும் உடைத்தெறிந்தது அந்தச் சம்பவம்.

1898ம் ஆண்டு, மே மாதம், 28ம் தேதி இத்தாலியைச் சே ர்ந்த புகைப்படப்பிடிப்பாளரான, 'செகண்டோ பியா' (Secondo Pia) என்பவர், டூரின் துணியை அவரது புகைப்படக் கருவி யினால் (Camera) படமெடுப்பதற்கு அனுமதிக்கப்பட்டார். முதன்முறையாக அந்தத் துணி ஒரு நவீனப் புகைப்படக் கருவியினால் (அந்தக் காலத்தின்) படமெடுக்கப்பட்டது. தன் வீட்டிலிருந்த பிரத்தியேக அறையில், படத்தின் எதிர் மறைப் பிரதியை (Negative) உருவாக்கிய பின்னர், அதை உற்றுப் பார்த்தார் 'செகண்டோ பியா'. பார்த்தவர் பயத்தில் உறைந்து போனார். தான் காண்பது கனவா? நிஜமா? என்றே தெரியவில்லை அவருக்கு. அந்த எதிர்மறைப் பிரதியில் செகண்டோ பியா கண்டது, ஒரு மனித முகத்தை. அதுமட்டுமில்லை அவர் பயத்துக்குக் காரணம். அந்த மனித முகம், இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் சிலுவையில் அறையப்பட்டவர் என்று சொல்லப்படும் யேசுநாதரின் முகமே தான். செகண்டோ பியா கண்ட அந்த எதிர்மறைப் பிரதி உருவத்தில் மேலுமொரு அதிசயமும் அல்லது அதிர்ச்சியும் இருந்தது. அது இன்னும் விசேசமானது. ஒரு புகைப்படத்தின் எதிர்மறைப் பிரதியில் (நெகட்டிவ்) எப்போதும் எதிர்மாறான விம்பம்தான் காணப்படும். அதாவது, கருமையான பகுதிகள் வெண்மையாகவும், வெண்மையான பகுதிகள் கருமையாகவும் இடம் மாறிக் காணப்படும். ஆனால், செகண்டோ பியா எடுத்த படத்தின் எதிர்மறைப் பிரதியில் காணப்பட்ட உருவம், நெகட்டிவ் உருவமாக இருக்கவில்லை. பாசிட்டிவ் (Positive) உருவமாகவே காணப்பட்டது. அதாவது சாதாரணமான ஒரு புகைப்படம் போல இருந்தது. செகண்டோ பியா எடுத்த படத்தின் நெகட்டிவோ, பாசிட்டிவாக இருந்தது. நம்பவே முடியாத ஆச்சரியம் இது. இப்படி இருப்பதற்கு ஒரேயொரு காரணம்தான் இருக்க முடியும். எந்தத் துணியை செகண்டோ பியா படமெடுத்தாரோ, அந்தத் துணியில் இருந்த உருவம், ஏற்கனவே நெகட்டிவாகவே அந்தத் துணியில் பதிந்திருக்க வேண்டும். நெகட்டிவ் உருவம் ஒன்றைப் புகைப்படக் கருவியினால் படமெடுத்து, அதன் நெகட்டிவைப் பார்த்தால் மட்டுமே, பாசிட்டிவாகத் தோன்றும். அப்படியென்றால், அந்தத் துணியில் உள்ள உருவம் எப்படி எதிர்மறை விம்பமாகப் பதிந்தது? இந்தச் சம்பவம் அறிவியல் ரீதியாக ஒரு குழப்பத்தையே ஏற்படுத்தியது.

இதை மேலும் தொடர்வதற்கு முன்னர், சில விசயங்களை நாம் பார்க்கலாம். ஆன்மீகவாதிகள், நம்பிக்கை என்னும் தளத்தில் இயங்கிக் கொண்டிருப்பவர்கள். அதனால் எதையும் பரிசோதனை செய்து பார்க்க வேண்டிய கட்டாயங்களோ, நிர்ப்பந்தங்களோ அவர்களுக்கு ஏற்படுவதில்லை. நம்பிக்கை என்ற ஒன்றே அவர்களை வழிநடத்திச் செல்லும். ஆனால், கடவுள் மறுப்பாளர்களுக்கும், அறிவியலாளர்களுக்கும், நம்பிக்கையினடிப்படையில் சொல்லப்படுபவைகளுக் கான ஆதாரம் எப்போதும் தேவைப்படுகிறது. நம்பிக்கை என்னும் ஒற்றை வார்த்தை அவர்களைத் திருப்திப்படுத்தி விடாது. முட்டாள்தனமான நம்பிக்கைகளை அவர்கள் மூடநம்பிக்கையென்று சொல்லி முழுமையாக நிராகரித்து விடுகிறார்கள். அதேநேரம் உண்மையான நம்பிக்கை களுக்கு ஆதாரம் கேட்டு நிற்பார்கள். மேலே சொல்லப்பட்ட டூரின் துணியை எடுத்துக் கொள்வோம். அந்தத் துணியில் இருக்கும் உருவம் யேசுநாதருடையது என்று சொன்னாலே நம்பிகையுள்ளவர்கள் எந்தக் கேள்விகளையும் கேட்காமல் நம்பிவிடுவார்கள். ஆனால், அறிவியல் அதை அப்படியே ஏற் றுக் கொண்டுவிடாது. ஒரு இரத்தம் தோய்ந்திருக்கும் மனித முகத்தின்மேல் ஒரு துணியைப் போட்டால், அந்த முகம் புகைப்படம் போல அல்லது சித்திரம் போலத் துணியில் பதியவே முடியாது என்றுதான் அறிவியல் சொல்லும். அதற்கான சாத் தியக் கூறுகள் இல்லவே இல்லை என்றுதான் மறுக்கும். அப்படியொரு துணி இருக்கும் பட்சத்தில், அந்தத் துணியில் உள்ள உருவத்தை யாராவது நிஜம் போல வரைந்திருக்கலாம் என்றுதான் அறிவியல் சந்தேகப்படும். டூரின் துணியிலும் அறிவியல் அப்படியொரு சந்தேகத்தையே கொண்டிருந்தது. பல நூற்றாண்டுகளுக்கு முன்னர், யாரோ இந்தத் துணியில் மனித உருவத்தை வரைந்திருக்கலாம் என்றுதான் அறிவியல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பியது. ஆனால், செகண்டோ பியாவின் நெகடிவ் விம்பக் கருத்தினால், அறிவியலும் கொஞ்சம் ஆடித்தான் போனது. ஒரு மனித உருவத்தைச் சித்திரமாக வரைபவர்கள் அந்தக் காலத்தில் இருந்திருக்கிறார்கள். ஆனால், ஒரு நெகட்டிவ் பிரதியை எப்படி வரைந்திருக்க முடியும்? அப்படி வரைந்திருக்க முடியுமென்று வைத்துக் கொண்டாலும், இப்படியொரு புகைப் படக் கருவியைப் பிற்காலங்களில் கண்டுபிடிப்பார்கள் என்றும், அதில் நெகட்டிவாகப் படமெடுப்பார்களென்றும் அந்தக் காலத்து சித்திரம் வரைபவனுக்கு எப்படித் தெரியும்? அதனால், இந்த எதிர்மறை வடிவம் டுரின் துணியில் இருப்பது அறிவியலுக்கு ஒரு சவாலாகதான் இருந்தது. ஆனாலும், அறிவியல் இதை நம்பிவிடத் தயாராகவில்லை. தன் அடுத்த பரிசோதனைக்கே ஆயத்தமானது.

'டுரின் பிரேதத் துணி' (Shroud of Turin) என்றழைக்கப்படும் அந்தத் துணி, கிட்டத்தட்ட நான்கரை மீட்டர் நீளமும், ஒரு மீட்டர் அகலமும் கொண்ட 'லினன்' (Linen) வகைத் துணியாகும். இறந்த ஒருவரை நிர்வாணமாக அந்தத் துணியின் மேல் கிடத்தி எஞ்சிய பகுதியால் மேல் பகுதியையும் மூடிவிடுவது இஸ்ரேலர்களின் வழமைகளில் ஒன்று. அதனால் இறந்த உடலின் பின் கால்களிலிருந்து முதுகுப் பகுதி முதல், மார்பு, முன்கால்கள் வரை முழுவதுமாக அந்தத் துணியினால் மூடு வார்கள். யேசுநாதரின் உடலையும் அதே விதமாகவே மூடிக் கல்லறையில் அடைத்தார்கள் என்று நம்பப்படுகிறது. அந்த இரண்டு மீட்டர் நீளமான துணியில், யேசுநாதரின் பின் பகுதி யும் (முதுகுப்பக்கப் பகுதி), முன்பகுதியும் (மார்புப் பக்கப் பகுதி யும்), டுரின் துணியில் பதிந்துள்ளதாக நம்புகிறார்கள். அந்தத் துணியில் காணப்படும் உருவத்தின் கைகள் இரண்டும் நீட்டிய நிலையில் ஒன்றின் மேல் ஒன்றாகக் கைகள் வைக்கப்பட்டபடி இருக்கிறது. அந்த உருவத்தின் முகப் பகுதியிலும், மணிக் கட்டுப் பகுதியிலும், மார்புப் பகுதியிலும் இரத்தம் வழிந்த அடையாளங்கள் சிவப்புத் திட்டுகளாகக் காணப்படுகின்றன. இந்த அடையாளங்கள் அனைத்துமே யேசுநாதருக்கு பொருந்துவதாக இருக்கின்றன. அத்துடன், செகண்டா பியா எடுத்த படத்தின் நெகட்டிவில் தெரியும் உருவத்தில் இருக்கும் தாடியும், நீண்ட தலைமுடியும் யேசுநாதரின் தோற்றத்தையே ஒத்திருக்கின்றன. இவையெல்லாம் சேர்ந்து அந்தத் துணிக்கு மறுக்கவே முடியாத புனிதத் தன்மையையும், அற்புதத் தன்மையையும் வழங்குவதால், ஆன்மீகவாதிகளின் கொண்டாட்டத்திற்கு அடையாளமாக அது கருதப்படுகிறது.

ஆனாலும், அறிவியல் ரீதியாக எதிர்ப்புக் குரல்களும் எழாம லும் இல்லை. அந்தத் துணியைக் 'கார்பன் தேதிப்' (Carbon Dating) பரிசோதனைக்குட்படுத்தக் கேட்டபோது, வத்திக்கான் அதற்கு மறுப்பு எதுவும் தெரிவிக்கவில்லை. அனுமதியளித்தது. அதனால், அந்தத் துணியின் கீழ் மூலையில் சிறியதொரு பகுதி வெட்டியெடுக்கப்பட்டு. கார்பன் தேதிப் பரிசோதனையும் நடைபெற்றது. பரிசோதனையின் முடிவும் அதன் தொடர் சம்ப வங்களும் ஆச்சரியமானதாகவே இருந்தது. அது என்ன முடிவு என்பதையும், உண்மையாகவே டுரின் துணி யேசுநாதருடையதுதானா? என்பதையும், இந்தத் துணி பற்றி ஆராயும் போது, மேலும் மேலும் வந்து கொண்டே இருக்கும் ஆச்சரியங்களையும் அடுத்த தளிரில் பார்க்கலாம்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவலைக்கு மருந்து

**- வி. கந்தவனம் -**

எமக்குக் கிடைத்த இந்தப் பிறப்பு, அரிய பிறப்பாகிய மானிடப் பிறப்பு வாழ்வதற்குரியது, வாழ்ந்து அனுபவிக்கப்பட வேண்டியது. திருஞானசம்பந்தப் பெருமான் பாடுகின்றார்:

**மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்**
**எண்ணில் நல்லகதிக்கு யாது மோர் குறைவிலைக்**
**கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப்**
**பெண்ணில் நல்லாளொடும் பொருந்தகை இருந்ததே.**




என்ன சொல்கின்றார்? வாழலாம் என்கின்றார், நல்லவண்ணம் வாழலாம், எப்பொழுதும் வாழலாம் என்கின்றார், நல்ல கதிக்கும் குறைவில்லை என்கின்றார். ஆனால் ஒரு நிபந்தனை. மிகவும் கவனமாக ஒரு சொல்லை இடையிலே வைக்கின்றார். நஎண்ணில்ந என்பது அது. நினைத்தால் .... மனம்வைத்தால் மட்டுமே வாழலாம், வாழ்ந்து நல்ல கதியை அடையலாம்.

மனம்போல் வாழ்வு என்பார்கள். வாழ்வுக்கும் தாழ்வுக்கும் மனம் காரணமாக இருக்கின்றது.

சில பேருடைய மனம் எதற்கு எடுத்தாலும் சஞ்சலப்படுகின்ற மனமாகவே இருக்கும். இந்தச் சஞ்சலத் துக்கும் பல வகையான காரணங்கள் இருக்கும். ஒன்று அச்சம், இரண்டு சந்தேகம், மூன்று அளவுக்கு மீறிய ஆசை அல்லது எதிர்பார்ப்பு, நான்கு பொறாமை என்று இக்காரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். இவற்றுக்கு அப்பால், தனிமனிதன் ஒருவனுடைய சத்தியை மீறிய காரணங்களும் உள்ளன. போர், விபத்து, நீர், நிலம், நெருப்பு, காற்று, முதலிய இயற்கைச் சத்திகளால் நேரக்கூடிய அழிவுகள், திருட்டு, நோய் என்று இவையும் பலவகைப்படும்.

துன்பங்களைச் சமாளிப்பதுதான் வாழ்க்கை.

அப்படிச் சமாளிக்கின்றவர்களைத்தான் இன்பங்கள் எதிர் பார்த்திருக்கின்றன. எடுத்ததற்கெல்லாம் கவலைப்படுகின்ற மனம் உறுதியற்ற மனம். அடிக்கடி சாத்திரம் பார்க்கின்ற மனம் இந்த மனந்தான். குறிப்புச் சாத்திரத்திலும் குருவிச் சாத்திரத்திலும் கைரேகைச் சாத்திரத்திலும் நம்பிக்கையுள்ள இந்த மனத்துக்கு மிகவும் முக்கியமான ஒரு நம்பிக்கை இல்லை.

அதுதான் தன்னம்பிக்கை.

**மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்**
**எண்ணில் நல்ல கதிக்கு யாது மோர் குறைவில்லை**

என்று எவ்வளவு நம்பிக்கையோடு திருஞானசம்பந்தப் பெருமான் பாடுகின்றார் பாருங்கள்.

வாழ்க்கையை நல்ல வண்ணம் வாழ்வதற்கு நம்பிக்கை அவசியம். தன்னம்பிக்கையோடு வேண்டியவர்களை நம்பும் நாகரிகமும் வேண்டும். இன்றைய உலகம் ஒருவரில் ஒருவர் தங்கி வாழும் உலகம், ஒருவரை ஒருவர் நம்பி வாழவேண்டிய உலகம்.

எல்லாவற்றிலும் மேலான ஒரு நம்பிக்கை கடவுள் நம்பிக்கை. எல்லாம் வல்ல இறைவனை நம்பினால் தன்னம்பிக்கை தன்னாலே வந்துவிடும். மனக்கவலை தன்னாலே மறைந்துவிடும். மனக் கவலைக்கு ஒரே மருந்து இறை வழிபாடுதான் என்கிறார் வள்ளுவர் பெருமான்.

**தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லால்
**மனக்கவலை மாற்றல் அரிது.**

மனக்கவலைக்குஅடிப்படையானஒருகாரணம்அறியாமை. எம்மை இயக்குவது நாமல்ல, எமக்கு மேலாகவுள்ள ஒரு சக்தி என்னும் உண்மையை அறியாமை. அந்தச் சக்தியிலே, பரம்பொருளிலே நம்பிக்கை வைத்துவிட்டால் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவில்லை.

திருஞானசம்பந்தப் பிள்ளையார் பாண்டிநாட்டுக்குச் செல்ல வேண்டும். அதனை அப்பர் பெருமானுக்குச் சொல்லி விடை பெறுகின்றார். சம்பந்தர் குழந்தைப்பிள்ளை. அப்பர் பெருமான் வயதில் முதிர்ந்தவர், அனுபவசாலி. அறிவுரை ஒன்று சொல்கின்றார்.

தேவரீர் அறியாததல்ல. பாண்டி நாட்டில் சமணர் ஆதிக்கம் நிலவுகிறது. அவர்கள் பொல்லாதவர்கள். தாங்களோ சிறு பிள்ளை. மேலும் தங்கள் கிரக பலன்களும் இப்பொழுது சரியில்லை. அதனாலே இந்தப் பயணத்தைப் பின்போட்டால் நல் லது என்றார்.

அதுகேட்ட பிள்ளையார் சிவபிரான் என் சிந்தையில் உள்ளான். அதனால் எனக்கு எவ்வித தீங்கும் நேரமாட்டாது என்று கோளறு பதிகத்தைப் பாடி அப்பர் பெருமானிடம் அனுமதி பெறுகின்றார்.

**வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்**
**மிகநல்ல வீணை தடவி**
**மாசறு திங்கள் தங்கை முடிமேல் அணிந்தென்**
**உளமே புகுந்த அதனால்**
**ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி**
**சனிபாம்பு இரண்டும் உடனே**
**ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல**
**அடியார் அவர்க்கும் மிகவே.**

'சிவபெருமான் உமாதேவியாரோடு என்னுள்ளத்திலே எழுந்தருளி இருக்கின்ற காரணத்தினாலே கிரகங்கள் எல்லாம் எனக்கு நல்லவையாகவே அமையும்' என்று அவர் கூறும் நம்பிக்கையைக் கவனித்தல் வேண்டும். இந்த நம்பிக்கை, அதாவது, கடவுள் எம்மைக் கைவிடமாட்டார் என்னும் நம்பிக்கை வாழ்வை வளப்படுத்துகின்ற ஒரு நம்பிக்கை. 'எல்லாம் நல்லபடியே நடக்கும்' என்று எதனையும் சாதகமாகச் சிந்திக்கவும் செயற்படவும் தூண்டுகின்ற நம்பிக்கை. இந்த நம்பிக்கையிலே தான்,

**அன்னம் பாலிக்கும் தில்லைச்சிற்றம்பலம்**
**பொன்னம் பாலிக்கும் மேலுமிப் பூமிசை**
**என்னன் பாலிக்கு மாறுகண் டின்புற**
**இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே**

என்று அப்பர் பெருமான் பாடுகின்றார். இந்த நம்பிக்கையிலே தான்,

**இம்மையே தரும் சோறும் கூறையும்**
**ஏத்தலாம் இடர் கெடலுமாம்**

என்று பாடுகின்றார் சுந்தரமூர்த்தி நாயனார். இந்த நம்பிக்கையிலேதான்,

**உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்**
**உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்**
**அன்னவரே எங்கணவர் ஆவார் அவர் உகந்து**
**சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்**

என்று மணிவாசகப் பெருமானின் 'திருவெம்பாவை' யிலே கன்னிப் பெண்கள் பாடுகின்றார்கள்.

இவர்கள் எல்லாம் என்ன சொல்கிறார்கள்?

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்கிறார் கள்.

எனினும் துன்பங்கள் எம்மாலும் பிறராலும் இயற்கைச் சக்திகளாலும் ஏற்படவே செய்யும். அவற்றைக் கண்டு அஞ்சவேண்டாம் என்று சமயம் அறிவுறுத்துகின்றது.

சிலர் கடவுளைக் கும்பிட்டாலும் துன்பங்கள் வருகின்றனவே என்று விரக்தியடைந்து கடவுளையே வெறுக்கிறார்கள், திட்டுகிறார்கள். இது பாதகமான போக்கு. சைவ சமயத்திற் பாதகமான போக்குக்கு இடமில்லை. எதையும் சாதகமாகவே அணுகுதல் வேண்டும்.

கடவுளை ஒழுங்காக வணங்குகின்றவர்கள் தமக்குத் துன்பங்கள் வருகின்ற பொழுதெல்லாம் கடவுளே தம்மைச் சோதிக்கின்றார் என்று கருதி அந்தச் சோதனையிலே சித்தியடைய முயலுதல் வேண்டும்.

அது என்ன சோதனை?

கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் உல்லாசபுரியில் வாழ்கிறார்கள், காலையும் மாலையும் கடவுளை வணங்கும் எமக்குத் தான் துன்பங்களா, சோதனைகளா, என்று சிலர் கேட்கலாம். இவர்கள் ஒன்றைச் சிந்திக்கவேண்டும். பாடசாலையில் படிக்கின்ற பிள்ளைகளுக்குத்தான் பரீட்சை வைக்கமுடியும். பள்ளிக்கூடத்திற் பதியப்படாதவர்களுக்குப் பரீட்சை வைக்கும் வழக்கம் எங்கணும் இல்லை.

பள்ளிக்கூடத்திற் பதிந்திருந்தாலும் கூடப் பள்ளிக்கூடத்துக்கு வராதவருக்கும் உரிய பாடநெறியை ஒழுங்காகப் படித்து முடியாதவருக்கும் பரீட்சை வைக்கமுடியாது.

சிவனுடைய பள்ளிக்கூடத்திலே சேர்ந்தவர்கள் சிவனடியார்கள். சிவனடியார்கள் எல்லாம் சிவன் செயல் என்றிருப்பவர்கள். துன்பம் வருங்காலத்து இறைவனிடம் சென்று முறையிடுகின்ற அன்பாளர்கள். இறைவன் மீது ஆராத அன்பு மிகுந்தவர்களாதலால் இடர்கள் வரினும் அவனை வெறுத்து ஒதுக்கும் இயல்பு அவர்களிடம் இல்லை. அறவே இல்லை. திருஞானசம்பந்தப் பெருமானின் நிலைப்பாட்டைப் பாருங்கள்:

**இடரினும் தளரினும் எனது உறுநோய்**
**தொடரினும் உன்கழல் தொழுதெழுவேன்**
**கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை**
**மிடறினில் அடக்கிய வேதி யனே**

என்கிறார். நாயன்மார் வரலாறுகள் எல்லாம் எமக்குப் புகட்டும் பாடம் இறைவழிபாட்டால் நாம் எதையும் சாதிக்கலாம் என்பது. இந்த நம்பிக்கைக்குக் குறுக்கே நாம் முன்பு செய்த தீவினைகள் வந்து நிற்கலாம். அவற்றின் தாக்கத்தைத் தணிப்பதற்கும் இறைவழிபாடு இன்றியமையாதது.

கவலையைப் போக்கவல்ல மற்றுமொரு மந்திரம் நமச்சிவாய மந்திரம். ஆபத்துக்காலத்திலே மந்திரமாகவே ஓதத்தக்க தேவாரம் இது:

**நமச்சி வாயவே ஞானமும் கல்வியும்**
**நமச்சி வாயவே நானறி விச்சையும்**
**நமச்சி வாயவே நாநாவின்று ஏத்துமே**
**நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.**

– அப்பர் சுவாமிகள்.

தேவாரங்கள் சக்திவாய்ந்தவை, ஆபத்துக்கு உதவ வல்லவை. அவற்றைக் காலையும் மாலையும் முறைப்படி ஓதித் துன்பங்களையும் போக்கி இன்புற்று வாழ்வோமாக.

**அல்லல் என்செயும் அருவினை என்செயும்**
**தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்**
**தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்கு**
**எல்லை யில்லதோர் அடிமை பூண்டேனுக்கே.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒவ்வொரு பொருட்களும் அணுக்களால் ஆனது போல ஒவ்வொரு உயிரினமும் கலங்களால் ஆனது

– R. சிவா



ஒவ்வொரு பொருட்களும் அணுக்களால் ஆனது போல, ஒவ்வொரு உயிரினமும் கலங்களால் (Cells) ஆனது, அணுக்கள் அடுக்கப்பட்டு ஒரு பொருள் உருவானது போல, கலங்கள் அடுக்கப்பட்டு உயிரினங்கள் ஒவ்வொன்றும் உருவாகியிருக்கின்றன. இதில் அனைத்து உயிர்களும் அடங்கும். நான், நீங்கள், நாய், பூனை, பாம்பு, பல்லி என அனைத்துமே! இதில் மனித உயிரை எடுத்துக் கொண்டால், ஒரு ஆணின் விந்தும், பெண்ணின் கருமுட்டையும் சேர்ந்து முதல் கலம் (Cell) உருவாகின்றது. அந்தக் கலம் பிரிவடைந்து, இரண்டாகிப் பின்னர் நான்காகி அப்புறம் பதினாறாகி அப்படியே படிப்படியாக அழகிய குழந்தையாகிறது. இதிலுள்ள ஆரம்ப கட்டமான முதல் கலத்திற்கு நாம் மீண்டும் வந்தால்...!

ஆணில் இருந்து வரும் விந்தில் 23 குரோமோசோம்களும் (Chromosomes), பெண்ணின் கருமுட்டையிலிருக்கும் 23 குரோமோசோம்களும் இணைந்து, 23 சோடிகளாக ஒன்று சேர்வதால், மனிதக் குழந்தையின் முதல் கலம் உருவாகும். மனித உயிரின் ஒவ்வொரு கலத்திலும் 23 சோடிகளாக குரோமோசோம்கள் இருக்கும். இதில் 23ம் சோடியாக இருக்கும் குரோமோசோம்தான், உருவாகும் அந்தக் குழந்தை, ஆணா? அல்லது பெண்ணா? என்று தீர்மானிப்பது. 23ம் குரோமோசோம் சோடியில், 'X,Y' என இரண்டு குரோமோ சோம்கள் இருந்தால் அது ஆணாகவும், 'X,X' என இரண்டு குரோமோசோம்கள் இருந்தால் அது பெண்ணாகவும் இருக்கும். ஒரு ஆணிடம் 23வதாக இருக்கும் 'X,Y' ஆகிய இரண்டு குரோமோசோம்களில் எந்தக் குரோமோசோம் அதாவது, X குரோமோசோமா அல்லது Y குரோமோசோமா பெண்ணுடைய கருவிலிருக்கும் 'X,X' குரோமோசோமில் ஒன்றுடன் சேர்கிறது என்பதைப் பொறுத்து, அந்தக் குழந்தை ஆண் அல்லது பெண் என்பது தீர்மானிக்கப்படுகிறது. மொத்தத்தில் சொல்லப் போனால், பிறக்கும் குழந்தை ஆணா, பெண்ணா என்பதைத் தீர்மானிப்பது முழுக்க முழுக்க ஆண் மட்டும்தான். பெண்ணுக்கு இதில் எந்தப் பங்கும் கிடையாது. ஆதலால், 'பெண் குழந்தையைப் பெற்றுவிட்டாள்' என்று சொல்லி, வீட்டுக்கு வந்த மருமகளிடம் கோவம் கொள்ளும் மாமியார்களும், அதையே சாட்டாக வைத்து இரண்டாவது திருமணம் செய்யத் துடிக்கும் ஆண்களும், இதைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். இங்கு மாமியார்களுக்கும், ஆண்களுக்கும் புத்திமதி சொல்வதற்காக நான் இந்தக் கட்டுரையை எழுதவில்லை. நான் இதை எழுத வந்ததற்கான காரணமே வேறு. மனித செல்களில் 23 சோடி குரோமோசோம்கள் இருக்கின்றன என்று சொன்னேனல்லவா? ஆணின் விந்தும் பெண்ணின், முட்டைக்கருவும் ஒன்றாகச் சேரும் போது, அதில் 21வது குரோமோசோம்கள் சோடிகளாகச் சேரும்போது, அங்கு அரிதாக ஒரு தவறு ஏற்பட்டுவிடுகிறது. அரிதாக இப்படிப் பல விதங்களில் தவறுகள் ஏற்படுவதுண்டு, ஆனாலும் இன்று நாம் பார்க்கப் போவது 21வது குரோமோசோமில் நடக்கும் தவறு பற்றி மட்டும்தான். 21ம் குரோமோசோமில் சோடி சேர்தல் நடைபெறும்போது, மேலதிக மாக ஒரு குரோமோசோம் அந்தச் சோடியுடன் சேர்ந்து விடுகின்றது. அதாவது இரண்டு குரோமோசோம்கள் இருப்பதற்குப் பதில் மூன்று குரோமோசோம்கள் (Trisomi) ஆகிவிடுகிறது. அதாவது, 23 சோடிகளாக மொத்தமாக 46 குரோமோசோம்கள் ஒரு மனித உயிருக்கு இருப்பதுதான் இயல்பானது. ஆனால் இங்கு 47வது







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குரோமோசோமும் சேர்கிறது. இப்படி மேலதிகமாக ஒரு குரோமோசோம் சேர்வதால், அந்தக் குழந்தைக்கு ஒரு மாற்றுத்திறன் தன்மையைக் கொடுத்துவிடுகிறது. அந்த உடல் குறைபாட்டைத்தான் 'டவுன் சிண்ட்ரோம்' (Down Syndrome) என்பார்கள்.

'டவுன் சின்ட்ரோம்' உள்ள குழந்தைகள், பார்க்கும் போது உடலியலில் சிறிது வித்தியாசமாக இருப்பார்கள். உலகில் இந்தக் குறைபாடுள்ள குழந்தைகள் அனைவரும் கிட்டத்தட்ட ஒரே விதமாக முக அமைப்பைக் கொண்டிருப்பது ஆச்சரியமான ஒன்று. இந்தக் குறைபாட்டுடன் பிறப்பவர்களை மிகவும் சரியான விதத்தில் பராமரித்து வந்தால், அவர்கள் சாதாரண மனிதர்களுக்கு நிகராகவே தம்மை நிலைநிறுத்திக் கொள்ளும் வாய்ப்புகள் அதிகம். அதனால், பெற்றோர்கள் கவலைப்படுவதை நிறுத்தி விட்டு, அந்தக் குழந்தையை அக்கறையுடன் வளர்ப்பதில் தங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டும். இந்த நோய் பற்றி மேலதிகமாக ஆராய்வதற்கு மிருகங்களைப் பயன்படுத்தலாம் என்று பார்த்தால், அவை ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு எண்ணிக்கையில் குரோமொசோம்கள் காணப்படுகின்றன. அதிகமாகப் பரிசோதனைக்குப் பயன்படுத்தப்படும் எலிகளை எடுத்துக் கொண்டால், அவற்றுக்கும் மனிதர்களைப் போல 23 சோடிக் குரோமோசோம்கள் இல்லை. குறைவான அளவில், அதாவது 20 சோடிகளே உண்டு. அப்படியிருந்தும், எலிகளில் மேலதிக குரோமோசோம் ஒன்றைச் சேர்த்து. 'டவுன் சிண்ட்ரோம்' குறைபாட்டுடன் புதிதாக உருவாக்கினாலும், அவை உயிருடன் இருக்கவில்லை. இந்த நேரத்தில்தான் டவுன் சின்ட்ரோம் குறைபாட்டுடன் வாழ்ந்து கொண்டிருந்த ஒரு 'வெள்ளைப் புலி' பற்றிய தகவல்கள் கிடைத்தன. அந்த அதிசயப் புலியைப் பற்றிய தகவல்களைச் சொல்வதுதான் இந்தக் கட்டுரையின் நோக்கம். அமெரிக்காவின் ஒக்லஹோமா நகருக்கு அருகில் அமைந்துள்ள மிருகக்காட்சிச்சாலையில், 'கென்னி' (Kenny) என்னும் பெயர் கொண்ட வெள்ளைப் புலி இருந்தது. இந்தப் புலி பெங்காலி வகைப் புலியினத்தைச் சேர்ந்தது. அதிசயமாக இந்தப் புலிக்கு, 'டவுன் சிண்ட்ரோம்' என்னும் அரிய வகைக் குறைபாடு இருந்தது. 'டவுன் சிண்ட்ரோம்' உள்ள மிருகமாக பெரிய அளவில் அறியப்பட்டது இதுதான். 1998ம் ஆண்டு பிறந்த கென்னி, 2008ம் ஆண்டு வரை உயிர் வாழ்ந்தது. பின்னர் அதற்கு புற்றுநோய் பீடித்ததால் 28ம் தேதி ஜுன் மாதம் 2008ம் ஆண்டு இறந்து போனது. மிருக இனங்களில் இன்றும் அதிசயமாகக் கென்னி பார்கப்படுகின்றது.

பிற்குறிப்பு: கென்னி தவிர துருக்கி நாட்டில் ஒரு பூனைக்கு இந்தக் குறைபாடு உள்ளதாகத் தெரிய வந்தது. மேலும், இந்தப் பதிவு யார் மனதையும் புண்படுத்துவதற்கானது அல்ல.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாண்புறு கணினிகள் மேவிடும் செய்திகள்!! 2

அன்புடன், அகணி சுரேஸ்

எதிர்பார்த்தவாறே அழகுக் கோலத்துடன் உங்கள் கைகளில் தவழ்ந்த தளிர் சஞ்சிகையின் மலர் 4இல் இந்தத் தொடர்கட்டுரையின் முதலாம் பாகத்தைப் படித்திருப்பீர்கள் என நம்புகின்றேன். கணினியின் துணைகொண்டு பார்வையற்றவர்களுக்காக உருவாக்கப்பட்ட ஒரு கண்ணாடி பற்றிய செய்தியைப் பகிர்ந்து கொண்டேன். மனித வாழ்க்கையின் தரத்தை மிகவும் மேன்நிலைக்கு கொண்டு செல்லும் கணினியால் உலகில் இதுபோன்ற நல்ல விடயங்கள் நடைபெறும் இந்த உலகில் மனிதரை அழிவுப்பாதையில் இட்டுச் செல்லும் விடயங்களும் நடைபெறுவது மிகவும் கவலைக்குரியது. மாண்புறு கணினியால் மனித வாழ்க்கைக்கு மேவிடும் விடயங்கள் மிகவும் அதிகமாக நடைபெற வேண்டும் என்ற விருப்பத்துடன் இவ்வாறான செய்திகளை இந்தக் கட்டுரை மூலமாக வெளிக் கொணர்வதே எனது நோக்கம். இதற்கான வாய்ப்பளித்த தளிர் சஞ்சிகை நிறுவனர்க்கு எனது மனப்பூர்வமான நன்றிகள்.

இந்த உலகத்தில் 285 மில்லியன் மக்கள் பார்வையற்று உள்ளார்கள் என்று சொல்லப்படுகின்றது. பார்வையற்று இருத்தல் என்பது எவ்வளவு துர்ப்பாக்கியம் என்பதை நான் வாசகர்களுக்கு எடுத்து விளக்க வேண்டிய அவசியம் இல்லை. பார்வையற்றவர்களின் வாழ்க்கைக்கு ஒளியூட்டுவதை நோக்கமாகக் கொண்டு பல நிறுவனங்கள் இயங்குகின்றன என்ற விடயத்தை அறிந்ததும் மிக்க மகிழ்ச்சியடைந்தேன். பார்வையற்றவர்களுக்கு அவர்களால் கேட்க முடிந்த ஒலியைப் பயன்படுத்தி பார்வையை வழங்கும் ஒரு முயற்சியும் நடைபெற்று வருகின்றது. இதற்காக ஐமியுசிக் (Eye Music) என்ற பெயரில் ஒரு மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. வித்தியாசமான இசைகளை உருவங்களுக்கும், நிறங்களுக்கும் தொடர்புபடுத்துவதன் மூலம் ஒலி மூலம் பார்வைத்திறனை அளிக்கும் வழிமுறையாக உள்ளது. பேராசிரியர் அமிர் அமேதி 2013ஆம் ஆண்டில் மேற்கொண்ட ஆய்வின் மூலம் ஒரு கமராவைப் பயன்படுத்தி எடுக்கும் படங்களை ஒலியுடன் தொடர்புபடுத்தி நாளடைவில் பயனாளர்கள் ஒலி மூலம் நிறங்களையும், உருவங்களையும் அடையாளப்படுத்தி ஈற்றில் பொருட்களை அடையாளம் காணமுடியும் என்று கருதப்படுகின்றது. இந்த மென்பொருள் ஐஓஎஸ்(ios), அன்ரொயிட்(Android) ஆகியவற்றிலும் தொழிற்படக் கூடியது. இதற்கான ஆய்வு பேராசிரியர் அமிர் அமேதி அவர்களால் ஜெருசலத்தில் உள்ள கிபுறூ பல்கலைக்கழகத்தில் நடைபெற்று உள்ளது. இதற்கா கப் பயன்படும் கருவியை EyeMusic sensory–substitution device (SSD)என்று அழைக்கின்றார்கள். பார்வையற்ற ஒருவர் அணிந்திருக்கும் கண்ணாடியுடன் ஒரு கமராவும், ஹெட்போனும் (HeadPhone) இணைக்கப்பட்டிருக்கும். பார்வையற்றவர்கள் கேட்கும் ஒலிமூலம் ஒரு உருவத்தை அவர்களால் மூளையில் உணரமுடியும். இதற்காகப் பார்வையற்றவர்கள் 10மணித்தியாலங்கள் முதல் 20 மணித்தியாலங்கள் வரை பயிற்சி செய்தால் போதுமானது என்று கூறப்படுகின்றது. பார்வையற்ற மனிதர்களுக்கு உள்ள கேட்டல் புலனைப் பயன்படுத்தி பார்வைப் புலனை வழங்கும் ஒரு அற்புதமான முயற்சியாக இதனைக் கவனிக்கலாம்.

ஒரு மீற்றர் தூரத்திற்குள் உள்ள பொருட்களை அடையாளம் காண உதவும் வெள்ளைப் பிரம்பிற்குப் பதிலாகப் பலமடங்கு தூரத்தில் உள்ள பொருட்களை அடையாளம் காண உதவும் அற்புதமான இந்த உபகரணத்தை மாண்புறு கணினிகள் தந்த பயன்பாடாகக் கருதலாம். இந்த உபகரணத்தை 30 கனேடியன் டொலர் பெறுமதியில் உருவாக்க முடியும் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். வெள்ளைப் பிரம்பின் தொழிற்பாட்டை நுணுக்கமாக அவதானித்தலின் மூலம் ஆய்வாளர்களுக்கு இந்தக் கண்டுபிடிப்பிற்கான சிந்தனை ஏற்பட்டதாம்.

இது போன்ற ஆய்வுகளும், கண்டுபிடிப்புக்களும் நிறைய நடக்க வேண்டும். இளைஞர்களும் தமது அறிவைப் பயன்படுத்தி நிறைய கண்டுபிடிப்புக்களைச் செய்ய வேண்டும். அண்மைக் காலத்தில் இளம் வயதினரின் பல கண்டுபிடிப்புக்கள் பற்றிய செய்திகள் வெளிவந்திருப்பது வரவேற்கப்பட வேண்டிய விடயம். தளிர் வாசகர்களே!. இந்த இதழில் கணினியின் துணைகொண்டு பார்வையற்றவர்களுக்காக உருவாகும் இன்னுமொரு உபகரணம் பற்றிய செய்தியைக் கவனித்தோம். இந்தக் கட்டுரைத் தொடர் பற்றிய உங்கள் கருத்துக்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். மீண்டும் சில செய்திகளுடன் அடுத்த இதழில் சந்திப்போம். நன்றி. வணக்கம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








**KAMALI** SHANMUGALINGAM
Sales Representative


Cell. **647-864-1051**
Off Phone. **905-201-9977**
Off Fax. 905-201-9229
realtor.kamalishan@gmail.com
*Independently owned & operated*

HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, Suite 205
Markham, ON. L3S 4N8
www.homelifefuture.ca
*Independently owned & operated*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழலை இன்பம் நுகர்தல் மன்னனையும் விட்டுவிடவில்லை



த.சிவபாலு
B.Ed.Hons, M.A in Education

படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும்
உடைப் பெருஞ் செல்வர் ஆயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குற இல்லை தாம் வாழும் நாளே

(புறம் 188)

முடியுடை மூவேந்தர்கள் எனப் போற்றப்பட்ட சேர, சோழ, பாண்டியர்கள் வணங்காமுடியர்களாக வலம் வந்தவர்கள் என்பது தமிழின வரலாறு. வீரம், காதல் என்னும் மரபுவழி வந்தவர்கள்.

வீரத்தில் திழைத்தவர்கள். ஆனால் அவர்களும் மனைவி, குழந்தை என்னும் பற்றுக்கோடுகளுக்கு என்ன விதிவிலக் கானவர்களா?

செல்வத்துள் செல்வம் கல்விச் செல்வம் என்றார் வள்ளுவர். இன்பத்துள் மழலை இன்பம் சிறந்தது என்றார். இவ்விரண்டையும் தமிழ் மன்னர்கள் போற்றி மதித்தனர், வாழ்க்கையில் கடைப்பிடித்து இன்பம் துய்த்தனர்.

கல்விகேள்விகளில் சிறந்தவர்களாக தமிழ் மன்னர்கள் விளங்கியுள்ளனர். புலமை மிக்கவர்களாக புலவர்களை மதிக்கும் புரவலர்களாக வாழ்ந்தவர்கள். அவர்கள் செய்யுட் களை ஆய்ந்து அறிந்து இன்பம் துய்ப்பதோடு தாமும் புலமை மிக்கவர்களாக செய்யுட்களை யாத்தும் உள்ளனர்.

சேர நாட்டு இளவரசர் இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம் ஒன்றே அரசர்களும் புலமை படைத்திருந்தனர் என்பதனை எடுத்துக்காட்டப் போதுமானது.

எனினும் பாண்டியன் அறிவுடை நம்பி இயற்றிய செய்யுள் ஒன்று அவர் குழந்தைகளின் அடிக்குமேல் அடியெடுத்து வைத்து தத்தக்கப் பித்தக்க நடைபயிலும் காட்சியையும் உணவு உண்டு அதனைக் கொட்டிச் சிந்தி உடலெல்லாம் பூசிக் கொண்ட காட்சி களையும் அணுவணுவாக ரசித்துள்ளார் என்பதனை பின் வரும் புறநானூற்றுப் பாடல் படம் பிடித்துக் காட்டுகின்றது.

மிகவும் பெரியவர்களோடு அவையிலே இருந்து உணவு உண்டு மகிழும் தகைமை வாய்ந்த பெரும் செல்வந்தராக இருப்பி னும் உணவினை உண்டு கொண்டு இருக்கும் வேளையிலே இடையிடையே மெல்ல மெல்ல அடியெடுத்து வைத்து வந்து தனது சிறிய மலர்க்கரங்களை நீட்டி கையிலே பெற்றுக்கொண்ட நெய்யிடப்பட்ட அமுதினை கையில் தானே பிசைந்து, கீழே கொட்டியும் அதனை அழைந்தும், உடல் எல்லாம் பிரட்டிக் கொண்டும் மிகவும் சுவைமிக்க அந்த உணவினை வாயினால் கவ்வியும், வாயோரங்களில் பூசிக்கொண்டும் செய்கின்ற அந்த சின்னச் சின்ன விளையாட்டுகளால் வீட்டில் உள்ளோரை மதி மயங்க வைக்கும் அந்த இன்பம் வேறு எங்குதான் எப்போதுதான் கிடைக்குமோ என்கின்றாரா பாண்டியன் அறிவுடை நம்பி. எத்துணை ஆழமாகக் குழந்தையை அவதானித்து அதன் இன்பத்தை நுகர்ந்துள்ளார் என்பது வெளிப்படை. இதனையே வள்ளுவப் பெருந்தகையும்.

அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள்
சிறுகை அளாவிய கூழ்

என அறுசுவை கலந்த உணவைவிட தமது மழலைச் செல்வத்தின் கைபட்ட கூழ் மிகுந்த சுவையைத் தரவல்லது என்கின்றார். ஆம் குழந்தையோடு விளையாடி மகிழ்ந்து அவர்களுக்கும் ஊட்டி அவர்களைப் பார்த்து மகிழும் வாய்ப்பு கிட்டிவிட்டால் அதனைவிட வேறு என்னதான் உள்ளத்தை மகிழ வைத்துவிடும்? என்றும்

குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்

என யாழிசை, வேணு கான இசை போன்றன மிகவும் இனி மையானது என அரற்றிக்கொள்வோர் உண்மையிலேயே தமது மக்களின் மழலைச் சொல்லைக் கேட்டு அதன் இனி மையை அனுபவிக்கதாவர்களே என்கின்றார், என்றும்

மக்கள் மெய்தீண்டல் உடற் கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு

பெற்றோரின் மீது ஏறி விளையாடும் குழந்தையின் பரிசம் எவ்வளவு இன்பத்தைத் தரவல்லது என்பதனை வள்ளுவர் குழந்தைகளால் பெறக்கூடிய மனமகிழ்வை எடுத்துரைக் கின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BMO Bank of Montreal

For all your mortgage needs

Sivacantharasa (Siva) Thurairatnam

Mortgage Specialist

Serving Greater Toronto Region

BMO Bank of Montreal

Cell: 416-476-5419

416-274-2830

sivacantharasa.thurairatnam@bmo.com





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோருக்கு மட்டுமல்ல மழலைகளின் மகிழ்ச்சி பழகும் அனைவருக்குமே இன்பம் பயக்கவல்லது. தாய்ப்பாலை ஊட்டுவது மிகவும் முக்கியமானது. தாய்மையின் இன்பம் தாய்ப்பால் ஊட்டுவதிலேயே முக்கியத்துவமும் பாசப்பிணைப்பினையும் தோற்றுவிக்கின்றது. தாய்ப்பால் குறைவடையத் தொடங்க உணவு ஊட்டப்படவேண்டும். அதற்கு திடமான உணவு வகைகளை அறிமுகப்படுத்துதல் அவசியமாகும். சோறு ஊட்டுதல், அல்லது அன்னம் ஊட்டுதல் அல்லது அமுது ஊட்டுதல் என்பது பண்டைக்காலந்தொடக்கம் தமிழர்களால் பின்பற்றப்பட்டு வருகின்ற மிக முக்கியமான செயல்களில் ஒன்று.

குழந்தையின் முதல் உணவு ஒரு மிக முக்கியமான நிகழ்ச்சி! ஆனால், உயரமான குதிரையை இழுத்துப்போட்டு வீடியோ படக்கருவியைத் தயார் செய்வதை விட அதிகமான காரியங்கள் செய்யவிருக்கின்றன. இது சந்தோஷமான மற்றும் மகிழ்ந்தனுபவிக்கும் நிகழ்ச்சியாவதை நிச்சயப்படுத்திக்கொள்ள நீங்கள் விரும்பினால், முதல் உணவின் நேரத்தையும் சூழல் அமைப்பையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

எல்லாவற்றிற்கும் முதலாக, திட (Solid food) உணவு கொடுக்கும் முதற் சில மாதங்கள், உங்கள் குழந்தை உணவின் சுவை மற்றும் தன்மையை பழக்கப்படுத்திக்கொள்ளும் நேரம். இந்த நேரத்தில் குழந்தைக்கு அருகிருந்து சேர்ந்து உண்டு, ஊட்டி குழந்தைக்கு உணவின் சுவையை பெற்றுக்கொள்ள வைக்கவேண்டும். தாய்ப்பால் அல்லது புட்டிப்பால் குடித்துக் கொண்டிருக்கும் வரை உங்கள் குழந்தை உண்ணும் உணவின் சரியான அளவு முக்கியமில்லை. உண்மையில், முதலில் சில நாட்களுக்குக் கொடுக்கப்படும் உணவு மிகக் குறைந்த அளவாகவே இருக்கும்.

உங்கள் குழந்தை உற்சாகமாக மற்றும் மகிழ்ச்சியாக அல்லது சுறுசுறுப்புக்குறைந்து சோர்வுற்றுக் காணப்படும் வேளைகளைக் கண்டறிந்து புதிய உணவினைக் கொடுத்தல் பயன்தரும். களைப்படையாது இருக்கும் ஒரு நேரத்தைத் தெரிவு செய்யுங்கள். உணவூட்டுதல் அதிக நேரத்தை எடுத்துக் கொள்ளும். அதனால் மற்ற வேலைகளில் நீங்கள் சுறுசுறுப்பாக இருக்கும் நேரத்தைத் தெரிவு செய்யாதிருப்பதை நிச்சயப் படுத்திக்கொள்ளுங்கள்.

ஒரு நாளில் ஒரு முறை தான் பெரும்பாலும் உங்கள் குழந்தை பசியாயிருக்கும் நேரத்தைத் தெரிந்தெடுத்து உணவூட்ட முயற்சித்தல் பயன் தரும்.


உங்கள் குழந்தையின் பசியைத் தூண்டுவதற்காக கொஞ்சம் கலந்த பால் அல்லது தாய்ப்பால் கொடுப்பதில் தொடங்குங்கள். அதனால் புதிய அனுபவத்தைச் சகிப்பதற்கு அவன் அதிக பசியுள்ளவனாக இருக்கமாட்டான். அதிகளவு கலந்த பால் அல்லது தாய்ப்பாலை அவனுக்குக் கொடுக்கவேண்டாம். அது அவனுக்குப் பசியைக் கட்டுப்படுத்திவிடும்.

குழந்தைகளோடு விளையாடி விளையாடி அவர்களுக்கு உணவூட்டுதல் பண்டைக்காலத் தாய்மார் மேற்கொண்ட வழிமுறைகள். அம்புலியைக் காட்டி, இயற்கையைக் காட்டி, வானத்தை, மரங்களை, பறவைகளைக் காட்டி உணவூட்டுவதோடு, பாடல்கள், உபகதைகளையும் சொல்லிச் சொல்லித் தான் எமது அன்னையர் எமக்கு உணவூட்டினர். அத்தோடு எமது பண்பாடு, பழக்க வழக்கங்களையும் சொல்லித்தந்தனர். தொட்டில் பழக்கம் சுடுகாடுவரையும் என்பது எத்துணை உண்மை.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய தமிழ் பெண்களின் தேசப்பற்று!

புஷ்பா கிறிஸ்ரி

பண்டைத் தமிழர் 'மறம்' என்பதனை ஆடவர்க்கு உரியதாகவே கருதினர். ஆனால் அது தவறு என நான் உணர்கின்றேன். காரணம் பெண்களும் ஆண்களும் போராடி வெற்றி கண்ட பல சரித்திரங்கள் நாம் காணக்கூடியதாக உள்ளது. எனவே ஆண்களுக்கும் பெண்களுக்கும் 'மறம்' பொதுவானது என்போம். ஒரு நாட்டின் தேசிய உணர்வுக்கு அடிப்படையானது 'மறம்' பற்றிய சிந்தனையே.

'அடல்வே லாடவர்க் கன்றியும் அவ்வில்
மடவரன் மகளிர்க்கு மறமிகுந்தன்று'
(புறப்பொருள் வெண்பாமாலை)

இவ்வரிகள் மூலம் நாம் அறிவது, 'மறம்' ஆடவர்க்கும் பெண்களுக்கும் பொதுவானது என்பதே!

ஆயுதம் ஏந்திப் போரிடும் ஆண்களுக்கு மட்டுமின்றி, அவர்கள் மனையில் வாழும் பெண்களுக்கும் அவ்வீரம் அவர்கள் உடலில் ஊறியிருக்கும் என்பதும், தக்க நேரம் வரும்போது அது வீறுகொண்டு வீரமாய் வெளிப்படும் என்பதும் தெரிய வருகின்றது.




அம்புகளும் ஈட்டிகளும் வீரர் கைகளிலிருந்து பாய்ந்து சென்று, களத்தில் யானைகளின் தும்பிக்கைகளை அறுத்து விடுகின்றன..

அவை கலப்பைகள் போல் களத்தில் வீழ்ந்து கிடக்கின்றன. அவ்வாறு யானைகளை வீழ்த்தி வீரமரணம் எய்திய தம் கணவரையும் தம் புதல்வர்களையும் போர்க்களத்தில் காணும் வீரப் பெண்டிர், கதறி அழ வெட்கப்பட்டு, வீரமரணம் தழுவிய தம் மக்களுக்கு வீரவணக்கத்தினை அக்களத்திலேயே செலுத்துவதை, கீழ்வரும் புறப்பாடல் செய்தியாகத் தருவதைக் காண்போம்.

'அம்புசென் றிறுத்த வரும்புண் யானைத்
தும்புடைத் தடக்கை வாளொடு துமிந்து
நாஞ்சி லொப்ப நிலமிசைப் புரள
எறிந்துகளம் படுத்த வேந்துவாள் வலத்தர்
எந்தையொடு கிடந்தோரெம் புன்றலைப் புதல்வர்
இன்ன விறலு முளகொ லமக்கென
மூதிற் பெண்டிர் கசிந்தழ நாணிக்
கூற்றுக்கண் ணோடிய வெருவரு பறந்தலை' (புறம் 19)

பண்டைத் தமிழ் இளம் பெண்கள் வீர தீரம் மிக்க ஆடவரையே மணந்து கொள்ள விரும்பினர். அவர்களின் வீரதீரச் செயல்களை அறிவதிலேயே அதிகம் நாட்டமுள்ளவராயிருந்தனர்.

பெற்ற தாய்மாரும் 'மறம்' கொண்ட புதல்வர்களையே போற்றிக் காத்தனர். போர்க்களத்தில் போரிடுவதையே தம் பிள்ளைகள் செய்ய வேண்டும் என தாய்மார் விரும்பினர்.



அப்படியான ஒரு தாயிடம் இளம் பெண்ணொருத்தி வந்து, உன் மகன் எங்குள்ளான்? என வினவ அவள் பதிலில், அவன் எங்குள்ளான் என அறியேன். புலி தங்கிப் போன கற்குகை போல் என் மகன் இருந்த என் வயிறு இதுவே. அவன் ஏதாவதொரு போர்க்களத்தில் போரிட்டுக் கொண்டிருப்பான் என அத்தாய் தன் வயிற்றைக் காட்டி பாடியதைக் காவற்பெண்டு என்னும் மறக்குடியில் பிறந்த பெண்பால் புலவர் பாடிய கீழுள்ள பாடலில் காணலாம்.

'சிற்றி னற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுள னோவென வினவுதி யென்மகன்
யாண்டுள னாயினு மறியே னோரும்
புலி சேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ விதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே
(புறம்.86)

இன்னும் தொடரும்..






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமைப்போம்! சுவைப்போம்!



## பாகற்காய் பிரட்டல்

**செய்யத் தேவையானவை**

பாகற்காய் – 450 கிராம்
வெங்காயம் – 20 கிராம்
பூண்டு – 2 பற்கள்
புளி – 20 கிராம்
வெந்தயம் – 2 தேக்கரண்டி
கறித்தூள் – 2 தேக்கரண்டி
பால் – 15 மி.லி
உப்பு – ஒரு தேக்கரண்டி
சீனி – ஒரு தேக்கரண்டி

**செய்யும் முறை**

பாகற்காய் பிரட்டல் செய்ய மேலே குறிப்பிட்டுள்ள தேவையான பொருட்கள் அனைத்தையும் தயாராக எடுத்துக் கொள்ளவும். பாகற்காய், பூண்டு, வெங்காயம் ஆகியவற்றை சிறுத் துண்டுகளாக நறுக்கி வைத்துக் கொள்ளவும். நறுக்கி வைத்திருக்கும் பாகற்காயை தண்ணீரில் போட்டு பிழிந்து எடுத்து வாணலியில் போட்டு வெந்தயம், பூண்டு, வெங்காயம், உப்பு ஆகியவற்றை அதனுடன் போடவும். புளியை நன்கு கரைத்து ஊற்றி பாகற்காய் முழுவதும் மூழ்கும் அளவிற்கு தண்ணீர் சேர்த்து மூடி வைத்து வேக விடவும். பாகற்காயில் ஓரளவிற்கு தண்ணீர் வற்றி வெந்ததும் தூளை சேர்த்து வேக விடவும். நன்கு வெந்ததும் அதில் கறிவேப்பிலை மற்றும் பாலை சேர்க்கவும். பால் கட்டாயமாக சேர்க்க தேவையில்லை விருப்பப்பட்டால் சேர்க்கலாம். கறி பிரட்டலாக வந்ததும் சீனியை சேர்த்து பிரட்டி இறக்கி வைக்கவும். மருத்துவ தன்மை நிறைந்த பாகற்காய் பிரட்டல் ரெடி. இதனை சோறு, புட்டு, இடியாப்பத்தோடு சாப்பிட சுவையாக இருக்கும்.



## கறிவேப்பிலை குழம்பு

கறிவேப்பிலையில் விட்டமின் ஏ,பி,சி சத்துக்கள் நிறைய உண்டு.

**செய்யத் தேவையானவை**

கறிவேப்பிலை – அரை கப், சின்ன வெங்காயம் – 20, மிளகு – ஒரு தேக்கரண்டி, சீரகம் – ஒரு தேக்கரண்டி, உளுத்தம்பருப்பு – ஒரு மேசைக் கரண்டி, சிகப்பு மிளகாய் – 4, பூண்டு – 2 பல், இஞ்சி – சிறுத்துண்டு, கட்டிப்பெருங்காயம் – சிறுத்துண்டு, வெங்காய கறி வடகம் – ஒரு துண்டு, கடுகு – தாளிக்க, நல்லெண்ணெய் – ஒரு மேசைக்கரண்டி, புளி – எலுமிச்சையளவு, உப்பு – தேவைக்கு

**செய்யும் முறை**

சின்ன வெங்காயத்தை தோல் உரித்து பொடியாக நறுக்கிக் கொள்ளவும். புளியில் மூழ்கும் அளவு தண்ணீர் ஊற்றி ஊற வைக்கவும். ஒரு பாத்திரத்தில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் உளுத்தம்பருப்பு, மிளகு, சீரகம், இஞ்சி, பூண்டு, சிவப்பு மிளகாய், கறிவேப்பிலை ஆகியவற்றை சேர்த்து வதக்கவும். வதக்கிய பொருட்களை எடுத்து ஆற வைத்து மிக்ஸியில் போட்டு ஊற வைத்த புளியை சேர்த்து சிறிது தண் ணீர் சேர்த்து நைசாக விழுது போல் அரைக்கவும். அதே பாத்திரத்தில் எண்ணெய் ஊற்றி கடுகு தாளித்து கட்டி பெருங்காயம், வெங்காய கறி வடகம் சேர்த்து தாளிக்கவும். தாளித்தவற்றுடன் பொடியாக நறுக்கின வெங்காயத்தை சேர்த்து பொன்னிறமாக வதக்கவும். பின்னர் அதனுடன் அரைத்த விழுதை சேர்த்து வதக்கி விடவும். வதக்கிய பின்னர் ஊற வைத்த புளி தண்ணீர் மற்றும் மிக்ஸியில் அரைத்து கழுவிய தண்ணீர் (2 கப்) மற்றும் தேவையான அளவு உப்பு சேர்த்து கொதிக்க விடவும். குழம்பில் எண்ணெய் மேலே மிதக்கும் வரை சுண்டியதும் மல்லித்தழை சேர்த்து இறக்கவும். சுவையான கறிவேப்பிலை குழம்பு தயார். இந்த குழம்பு சாதம், இட்லி, தோசைக்கு பொருத்தமாக இருக்கும்.



## க்ரீமீ கஸ்டர்ட் கப்ஸ்



**செய்யத் தேவையானவை**

க்ரீம் செய்ய:

பால் – அரை லிட்டர், கஸ்டர்ட் பவுடர் – 3 மேசைக்கரண்டி (வெனிலா ஃப்ளேவர்), மைதா – 2 தேக்கரண்டி, ஃப்ரஷ் க்ரீம் – 2 தேக்கரண்டி, சீனி – 50 கிராம், வெனிலா எசன்ஸ் – கால் தேக்கரண்டி, வெண்ணெய் – 2 தேக்கரண்டி

கடல்பாசி செய்ய:

கடல்பாசி – சிறிய கைப்பிடி அளவு (5 கிராம்), சீனி – 4 மேசைக்கரண்டி, ஃபுட் கலர் – சில துளிகள், வெனிலா எசன்ஸ் – ஒரு துளி, கிவி பழம் – ஒன்று

**செய்யும் முறை**

க்ரீம் செய்ய கொடுத்துள்ளவற்றில் வெண்ணெய் தவிர மற்ற அனைத்தையும் பாலில் சேர்த்து கட்டிகள் இல்லாமல் கரைத்து க்ரீம் பதத்திற்கு காய்ச்சவும். மற்றொரு பாத்திரத்தில் இரண்டு கப் கொதிக்கும் தண்ணீரில் கடல்பாசியைப் போட்டு கரைந்ததும் சீனி மற்றும் வெனிலா எசன்ஸ் சேர்த்து கொதிக்கவிடவும். கொதித்ததும் இறக்கி வைத்து 10 நிமிடங்கள் ஆறவிடவும். காய்ச்சி வைத்துள்ள க்ரீமு டன் வெண்ணெயைச் சேர்த்து அடுப்பில் வைத்துக் கிளறிவிட்டு இறக்கி வைக்கவும். தயார் செய்த க்ரீமை சிறு கோப்பைகளில் ஊற்றி, செட் ஆகும் வரை (5 நிமிடங்கள்) வைத்திருக்கவும். அதன்மீது வட்டமாக நறுக்கிய கிவி பழத்தை வைக்கவும். பிறகு அதன் மேல் ஆற வைத்துள்ள கடல்பாசியை ஊற்றவும். க்ரீமீ கஸ்டர்ட் கப்ஸ் ரெடி. ஃப்ரிஜில் வைத்தெடுத்துப் பரிமாறவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்த காலாண்டு தளிர் இதழின் விஜபி (VIP)

# எழுத்தாளரும் பத்திரிக்கையாளருமான

# வீரகேசரி மூர்த்தி

ஈழத்தில் யாழ்ப்பாணத்தை அடுத்துள்ள காவலூர் என அழைக்கப்படும் ஊர்காவற்றுறையில் உள்ள கரம்பொன் மேற்கு கிராமத்தைச் சேர்ந்தவர் திரு.தெட்சணாமூர்த்தி செல்லத்துரை. இவர் வாலிப வயதில் "மேகமூர்த்தி", "காவலூர் மூர்த்தி" என்ற புனைபெயர்களில் சிறுகதை, கட்டுரை ஆகியவற்றினை எழுதி வந்தார். அதன் பயனாக தனது இருபத்தெட்டாவது வயதில் 1972ம் ஆண்டு கொழும்பிலுள்ள வீரகேசரி பத்திரிகையின் தலைமை அலுவலகத்தில் உதவி ஆசிரியராகப் பதவி ஏற்றார்.

இலங்கையின் பல்வேறு மாகாணங்களிலும் உள்ள நகரங்களில் இருந்து நிருபர்கள் அன்றாடம் எழுதி அனுப்பும் செய்திகளையும், தலைமை அலுவலகத்திலுள்ள அலுவலக நிருபர்கள் எழுதிக் கொடுக்கும் செய்திகளையும் வாசித்து அவற்றை சீர்செய்து (Edit பண்ணி), வெட்டிச் சுருக்கி, பொருத்தமான தலையங்கமும் போட்டு அச்சுக் கோக்கும் பகுதிக்கு அனுப்புவது உதவி ஆசிரியக்களின் பணி. அத்துடன் கலைஞர்கள், பிரமுகர்கள் ஆகியோரை சந்தித்து பேட்டி கண்டு எழுதுவது, நாடக, நாட்டிய விமர்சனங்களும் எழுதுவதும் உண்டு.



உதவி ஆசிரியராகப் பணியேற்று ஐந்து வருட காலத்தில் 1977ம் ஆண்டு இவருக்கு திருமணமும் நடை பெற்றது. தொடர்ந்து 1982ம் ஆண்டு வரை வீரகேசரியில் பணியாற்றி வந்தார். உலகறிந்த தமிழறிஞரான வண தனிநாயகம் அடிகளாரையும் சந்தித்து பேட்டி கண்டு எழுதும் அரிய வாய்ப்பும் இவருக்கு கிட்டியது. அத்துடன் பரத நாட்டிய கலைஞர்கள், நாடக நடிகர்கள் ஆகியோரையும் பேட்டி கண்டு எழுதி வந்தார். ஆழிக்குமரன் ஆனந்தன் பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த போது இவரும் ஈழநாட்டு நிருபராக இருந்த திரு.பாமா இராஜகோபாலுடன் வள்ளத்தில் தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடி வரை சென்று செய்தி எழுதியதோடு திரும்பி வந்த பின்னர் கட்டுரையாகவும் வீரகேசரியில் எழுதினார்.

ஆண்டாண்டு தோறும் இந்தியாவில் இருந்து வருகை தந்து கொழும்பு ஜிந்துப்பிட்டி முருகன் கோவிலில் சமயச் சொற்பொழிவாற்றும் திருமுருக கிருபானந்த அடிகளாரின் சொற்பொழிவுகளையும் கட்டுரையாக எழுதி வீரகேசரியில் வெளியிட்டு வந்தார். அதனால் வீரகேசரியில் பணியாற்றிய அந்த பத்தாண்டு காலம் தனது வாழ்க்கையின் பொற்காலம் என அவர் இன்றும் பெருமையுடன் கூறிக் கொள்வார்.

"திரை கடல் ஓடியும் திரவியம் தேடு" என்ற பழமொழிக்கு ஒப்ப நிதியை சம்பாதிக்கும் வகையில் 1983ம் ஆண்டு இவர் மனைவி, மகன், மகள் ஆகிய மூவரையும் யாழ்ப்பாணத்தில் விட்டுவிட்டு அகதியாக கனடா மொன்றியல் நகரை வந்தடைந்தார். அங்கு புதிய நண்பராக அறிமுகமான திரு.பேரின்பநாதனின் உதவியால் அவர் பணியாற்றிய தொழிற்சாலையில் ஒரு தொழிலாளியாக பணியாற்றத் தொடங்கினார். இருந்தாலும் அவர் தனது எழுத்துப் பணியை கைவிட்டு விடவில்லை. அப்போது மொன்றியலில் இயங்கி வந்த "கியூபெக் ஈழத் தமிழர் ஒன்றியம்" என்ற தமிழ் அமைப்பின் சார்பில் "தமிழ் எழில்" என்ற மாதாந்த கையெழுத்துப் பிரதியின் ஆசிரியர் பொறுப்பை ஏற்று வெளியிட்டு வந்தார்.

தமிழ் தட்டெழுத்து இயந்திரமோ, கணணி வசதியோ இல்லாத அக்காலத்தில் கதைகள், கட்டுரைகள், செய்திகள் ஆகியவற்றினை இவர் தன் கைப்பட எழுதிக் கொடுக்க அதனை அவர்கள் போட்டோ கொப்பி எடுத்து சஞ்சிகையாக ஸ்ரேப்பிள் பண்ணி ஒரு டொலர் வீதம் பிரதிகளை விற்று ஒன்றியத்துக்கு நிதி சேகரித்தனர். இவர் அதனை ஒரு தொண்டாகவே செய்து வந்தார். தற்போது றொறண்டோவில் வசித்து வரும் வண பிதா சேவியர் அவர்களும் அப்போது ஒன்றியத்தின் முக்கிய சேவகராகப் பணியாற்றி வந்தார்.

மொன்றியலில் பிரெஞ் மொழியைத் தவிர ஆங்கில மொழி இல்லாத காரணத்தினால் அங்கிருந்த அநேகமான தமிழ் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை ஆங்கில மொழியில் கல்வி போதிப்பதற்காக றொறண்டோவிற்கு இடம்பெயர்ந்தார்கள். இரு வருடங்களில் இவரது குடும்பத்தினரும் அகதிகளாக மொன்றியல் நகரை வந்தடைந்தனர்.

மனைவியின் சகோதரி ஒருவர் மனிற்றோபா மாகாணத்திலுள்ள வினிபெக் நகரில் வசித்து வந்ததினால் அங்கு சென்றால் அவர்களுடன் வாழ்வதோடு பிள்ளைகளையும் ஆங்கில மொழி மூலம் கல்வி போதிக்கலாம் எனக் கருதி இவரும் 1985ம் ஆண்டு குடும்பத்துடன் அங்கு சென்றார்.

அங்கு சென்ற பின்னர் தான் வின்ரர் காலத்தில் 35, 40 பாகைக்கு கீழே செல்லும் குளிரின் கடும் தாக்கத்தை அனுபவ ரீதியாக விறைத்துப் போய் உணர்ந்தார். அங்கிருந்த போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிற்றேபா தமிழ் கலாச்சார கழகத்தின் சார்பில் "தமிழ் மலர்" என்ற கையெழுத்துப் பிரதியை மாதாந்தம் வெளியிட்டு வந்தார்.


ஏழாண்டு காலங்களின் பின்னர் 1992ம் ஆண்டு றொறண்டோமாநருக்குஇடம்பெயர்ந்தார். இங்கே ஆரம்பத்தில் றிச்மன்ட் ஹில்லில் உள்ள ATI Computer Company யில் "செக்குறுட்டி காட்" ஆக பணியாற்றத் தொடங்கிய இவர் பின்னர் அதே கொம்பனியில் Mail Clark ஆக பத்தாண்டு காலம் பணியாற்றி ஓய்வு பெற்றார்.



அக்காலத்தில் இங்கிருந்து முதன் முதலாக இலவசப் பத்திரிகையாக வெளி வந்த சூரியன், பத்திரிகையில் எதுவித சன்மானமும்இன்றி செய்தியாளராக, ஒப்பு நோக்காளராக, தமிழ் தட்டெழுத்தாளராக எல்லாம் பணியாற்றினார்.

பின்னர்சச்சிமாஸ்டரினால்நடாத்தப்பட்டுவந்தசெந்தாமரை பத்திரிகை யிலும், அதன் பின்னர் தன்னுடன் கொழும்பு வீரகேசரி பத்திரிகையின் நிருபராக பணியாற்றிய திரு.அரச ரெட்னத்தினால் ஆரம்பிக்கப்பட்ட "தமிழர் செந்தாமரை"யிலும் பகுதி நேரப் பணியாளராக பணியாற்றி வந் தார். நீண்டகாலம் "Ethnic Media Association" பல்லின பத்திரிகையாளர் சங்க அங்கத்தவராக இருந்து வரும் இவர் றிச்மன்ட் ஹில்லிலுள்ள "Senaga College"ல் நடைபெற்ற பத்திரிகையாளர்களுக்கான கருத்தரங்கில் பங்கு பற்றி கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட கனடா பிரதமர் திரு.ஸ்ரீபன் ஹாப்பரிடம் இருந்து பாராட்டுப் பத்திரத்தையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. எழுத்தாற்றலும், பத்திரிகை அனுபவமும் உள்ள நீங்கள் ஏன் சொந்த மாக ஒரு பத்திரிகை நடாத்தக் கூடாது? என சில அன்பர்கள் இவரிடம் கேட்ட போது ஆம் அந்த அனுபவங்கள் எல்லாம் இருக்கிறது. ஆனால் என்னிடம் அதற்கான நிதிவசதி இல்லை. அந்த விசயத்தில் "சுமை" எடுக்க எனக்கு விருப்பமில்லை எனக் கூறினார். ஆனால் இன்றும் கூட தனது எழுத்தாற் றலையும், நீண்டகால பத்திரிகை அனுபவத்தையும் கைவிட்டு விடாது "கதிரொளி" பத்திரிகைக்கு தொண் டாற்றி வருகின்றார்.

தான் எழுதிய சிறுகதைகளை தொகுத்து "வீரகேசரி மூர்த்தி" என்ற புனைபெயரில் 2001ம் ஆண்டு "சுதந்திர மண்" என்ற நூலினை மணிமேகலை பிரசுரத்தின் மூலம் பிரசுரித்தார். பத்தாண்டுகளின் பின்னர் "ஓரினத் தோன்றல்" என்ற மற்றொரு சிறுகதை தொகுதியினையும் "விஸ்வசேது இலக்கியப் பாலம்" மூலம் இந்தியாவில் பதிப்பித்து வெளியிட்டார். நீதி, நேர்மை, கண்ணியம் ஆகிய முக்குணங்களுடன் இவர் பலருடனும் அன்புடனும், பண்புடனும் பழகி வருகின்றார். அதேவேளையில் பொய், களவு, தலைக்கனம் கொண்டோரைக் கண்டால் தூர ஒதுங்கி விடுவார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மருத்துவம்

# உம்மா நோய் அல்லது முத்தி வியாதி (Kissing Disease)

## டாக்டர். போல் யோசேப்

கிவ் மீஉம்மாஉம்மாசெல்ஃபிபுள்ள,பக்கம்வந்துகொஞ்சம் முத்தங்கள் தா, இவையெல்லாம் அண்மைக் காலங்களில் மிகவும் பிரபலமான சிறுவர்களும் முணுமுணுக்கும் பாடல்கள். முத்தம் என்பது அன்பை வெளிப்படுத்தும் பாசத்தைப் பகிர்ந்து கொள்ளும் உறவு முறையின் வெளிப்பாடாகும்.

கன்னத்தில் முத்தமிட்டால், உச்சிதனை முகர்ந்தால், நெற்றியில் முத்தமிட்டால், அனைத்து அன்பைப் பரிமாறி னால் பிரச்சினைகள் ஏதுமில்லை. கணவன் மனைவி தவிர மற்றவர்களோடு வாயோடு வாய் வைத்து, உதடு களோடு உதடு வைத்து உம்மா கொடுப்பதால் உண்டாகும் பிரச்சி னைகள் பற்றிய விழிப்புணர்வுக்காகத்தான் இந்த தகவல்களை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

ஒருவருக்கு, சளி, இருமல், ஃபுளூ, நிமோனியா, புரோங்கைற்றிஸ் என்ற நுரையீரல் அழற்சி மற்றும் வெளிப்புறத்தில் தெரியக் கூடிய பல தொற்று நோய்கள் இருக்கும் போது இவை தும்மல், இருமல், சளி, உமிழ் நீர், போன்ற உடலில் உண்டாகும் வெளிப்பாடுகளால் மற்றவர்களுக்கும் இலகுவாக பரவும் என்பது உங்கள் எல்லாருக்கும் தெரிந்த விடயம் தான்.

ஏன் கை குலுக்குவதால் கூட பல வியாதிகள் தொற்றிக் கொள்ளலாம். அடுத்தவர்க்கு என்ன வியாதி உள்ளது, எப்படிப்பட்டவர் என்பதெல்லாம் நமக்கு தெரியாது. உங்களுக்கு கை கொடுக்க முன்பு அவர் கையை எங்கெல்லாம் வைத்திருந்தார், யார் யாருக்கெல்லாம் கை கொடுத்தார் என்ற புள்ளி விபரங்கள் எல்லாம் உங்களுக்குத் தெரியாது.

குறிப்பாக தொற்று நோய்கள் பரவும் காலங்களில் இவற்றை தவிர்த்துக் கொள்வது நல்லது. அதற்காகத்தான் நமது கலாச்ச ாரத்திலுள்ள இரு கரம் கூப்பி புன்னகைத்து வணக்கம் செ ால்லுவது எவ்வளவு அழகான பழக்கமாகும், கைகுலுக்கும் மேற்கத்தைய கலாச்சாரத்தைக் கற்றுக் கொண்ட நாம் எமது மிகச்சுகாதாரமான கரம் கூப்பி வணக்கம் செலுத்தும் கலாச்ச ாரத்தை மற்றவர்களுக்கும் பரப்பலாம் தானே!

கிறிஸ்தவ ஆலயங்களில் திருப்பலியின் போது குருவானவர் ''ஒருவருக்கொருவர் கிறிஸ்த்துவின் சமாதானத்தை பரிமாறிக் கொள்ளுங்கள்'' என்று சொல்லும் போது முன்பெல்லாம் கைகுலுக்கி கட்டியணைத்து அன்பை, மகிழ்ச்சியினைப் பரிமாறும் பழக்கம் இருந்தது. ஆனால் தற்போது புன்னகைத்து வணக்கம் தெரிவிக்கும் முறை கடைப்பிடிக்கப்படுகிறது.

சரி விடயத்திற்கு வருவோம். இந்த உம்மா வியாதி என்று நான் சொல்ல வந்த விசயம் என்னவென்றால் "Kissing Disease" என்று கூறப்படும் "Infectious Mononucleosis" என்ற Epstien & Barr Virus எனும் ஹெர்பிஸ் இனத்தை சார்ந்த வைரசினால் வரும் ஒரு தொற்று நோயாகும். "ஒருவனுக்கு ஒருத்தியென்று வாழ்பவர்கள் தவிர மற்றவர்கள் வாயோடு வாய் வைத்து முத்தம் கொடுப்பதால் இருவரில் ஒருவருக்கு தொற்று நோய்கள் இருப்பின் மற்றவர்க்கும் பரவும் அபாயம் உள்ளது. உதாரணமாக Hepatitis என்ற வைரஸ் ஈரல் அழற்சி, பல பால்வினை நோய் (STD) HIV என்ற எய்ட்ஸ் நோய், மற்றும் பல பக்ரீறியா, பூஞ்சைக்காளான் போன்ற நோய்களும் தொற்றிக் கொள்ள வாய்ப்புகளுண்டு.

அண்மைக்காலங்களில் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக மாணவரிடையே குறிப்பாக Teenage இல் இருக்கும் வளரினம் பருவத்தினரிடையே குறிப்பாக மேற்கத்தைய நாடுகளில் அதிகமாக தொற்றிக்கொண்டிருக்கும் ஒரு நோய் தான் Kissing Disease, மருத்துவத்தில் இதனை Infectious Mono Nucleosis அல்லது Glandular Fever என்றழைக்கப்படுகிறது. முத்தம் கொடுக்கும் போது உமிழ்நீரினால் இது பொதுவாக பரவு கிறது.

Epstein Barr எனும் வைரஸ்தான் இதற்குக் காரணமாகும். அடுத்து Cytomegalo Virus என்ற இன்னொரு வைரசும் இந்த நோய்க்கு காரணமாகிறது என்றும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இந்த வைரஸ் தொற்றிக்கொண்டால் வாழ்நாள் முழுவதும் உடலுக் குள் அமைதியாக இருக்குமாம், தாயிடமிரு ந்து தொப்புள்கொடி வழியாக சிசுவுக்கும் பரவும்.

இந்த இரண்டு வைரஸ்களும் ஒருவருக்கு தொற்றிக் கொண்ட பின்பு நான்கு முதல் ஏழு வாரங்களுக்கு எந்த குணங்குறிகளும் உடலில் வெளிப்படாது.


பின்னர் லேசான காய்ச்சல், தலையிடி, உடம்பு வலி, தொண்டை வலி அழற்சி, டான்சில்களில் வீக்கம் வலி, இருமல், சளி போன்று ஃபுளுக்காய்ச்சல் போன்ற குணங்குறிகள் தான் ஏற்படும்.

ஆனால் காய்ச்சல் இரண்டு வாரங்கள் வரை தொடரும், மற்றும் கழுத்துப் பகுதியிலுள்ள நிணநீர்க்கட்டிகள் வீங்கி வலிக்கும். நாட்பட்ட நிலைகளில் உடலிலுள்ள மற்ற நிண நீர்க்கட்டிகளுக்கும் பரவும், அல்லது மண்ணீரல், மற்றும் கல்லீரல் போன்றவை வீங்கி பெரிதாகும். இதனால் வயிற்று வலி, சீரணக் கோளாறுகள், செங்கமாரி என்ற மஞ்சள் காமாலை போன்ற பிரச்சினைகளும் வரவாய்ப்புள்ளது.

சில வேளைகளில் இந்த வைரசுகள் செங் குருதிக் கலங்களை பாதிப்பதால் இரத்த சோகையும் (Anemia) உண்டாகலாம், இப்படி பல வகையான பிரச்சினைகளையும் பாதிப்புகளையும் உண்டாக்கும் இந்த உம்மா வியாதியை தொடக்கத்தில் பரிசோதனைகள் மூலம் கண்டுபிடிப்பது இலகுவான காரியமல்ல. நோய் தொற்றிய பின்பு சில நாட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழித்துத்தான் சில பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும். Monospot Test, IgG, IgM போன்ற சிறப்பு பரிசோதனைகள் மூலம் ஓரளவு திருப்திகரமான முடிவுகளைப் பெற முடியும்.

"முத்த நோய்க்கு'' குறிப்பிட்ட மருந்துகள் சிகிச்சைகள் இல்லையென்றாலும் நோயின்போது உண்டாகும் குணங்குறிகளுக்கு ஏற்ற வகையில் வலி மாத்திரைகள், அழற்ச்சிக்கான மருந்துகள், கோட்டிசோன், ஸ்ரீரொயிற் மருந்துகள், அன்ரிபயோற்றிக் போன்றவற்றின் மூலம் நோயின் கடுமையினை அப்போதைக்கு குறைத்துக் கொள்ளலாம்.

இல்லையென்றால் வைரஸ் நோயின் பின்பு தாக்கத்தினாலுண்டாகும் பக்ரீறியா தொற்றுக்களின் விளைவுகள் அதிகமாவதால் பாரிய பின்விளைவுகள் எதிர் கொள்ள வேண்டி வரும். பின்விளைவுகளை பார்த்தால் முத்த மழையின் சுகமே தொலைந்து விடும். வுளை அழற்சி, இரத்த சோகை, ஈரல் அழற்சி, இதயத் தசை அழற்சி, மற்றும் புற்று நோய்கள் அதிலும் குறிப்பாக Burkitts Lymphoma, Hodgkin's Lymphoma போன்ற கொடிய கான்சர்களும் உண்டாகலாம்.

எனவே இந்த நோய்கள் வராமல் தடுக்க ஒருவனுக்கு ஒருத்தியென்று வாழ்வதே ஒரே வழியாகும். குறிப்பாக வடஅமெரிக்க நாடுகளில் Teenage இல் உள்ள வளரினப் பருவத்தினரிடம் தான் இந்த Kissing நோயின் தாக்கம் பரவலாக உள்ளது. மற்றும் பலருடன் பாலுறவு கொள்வோரிடமும், விலைமாதர்களிடமும் அதிகமாக இருப்பதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கிறது.

"ஒழுக்கம் உடைமை குடிமை; இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும் – குறள் 133.

ஒழுக்கமுள்ள முத்தத்தினால் பல நோய்களும் தீர வாய்ப்புள்ளது மட்டுமல்ல அன்பின் பாசத்தின் வெளிப்பாடான இதனால் உறவுகளுக்கிடையேயான உண்மையான பிணைப்பு Emotional Bonding வலுப்பெறுகிறது. மனவழுத்தம் குறைகிறது. நோய் எதிரப்புச் சக்தி அதிகரிக்கிறது. ஹோமோன்களின் சமநிலையும் பேணப்படுகிறது. இதயத்துடிப்பு சற்று உயர்ந்து இரத்த ஓட்டம் அதிகரித்து இரத்தக் குழாய்கள் நன்கு சுருங்கி விரிவதால் உயர்ரத்த அழுத்தம், மாரடைப்பு போன்ற நோய்கள் வராமல் நலமோடு நீளாயுளோடு வாழ வாழ்த்துக்கள்.

**டாக்டர். போல் யோசேப்**
B.H.M.S. (India), H.D.(Canada). R.A.P.
(Bachelor of Homeopathic Medicine and Surgery)
1193A Brimley
Road, Unit 10, Scarborough, Ontario M1P 3G5
Tel: 4164383939, Cell: 4169864903



# கருவறை

**டாக்டர். போல் யோசேப்**

மனித உயிர்களை உருவாக்க
இறைவன் தந்த
இயற்கை ஆய்வு கூடம்.

இரண்டு விஞ்ஞானிகள்
இணைந்து செய்கிற இணையில்லா
இன்ப அதிசய ஆராய்ச்சி

விஞ்ஞானிகளே தங்களை
பிரதியெடுத்துக் கொள்ளும்
தசைகளாலான
எந்திர மந்திர வறை,

மங்கையின் பூப்பனிதம்
கருவறையில் பெண்மையின்
முதல் தாய்மையுணர்வுக்கான
முதல் படிக்கல்

சில வருடங்கள் சிந்திய குருதி
சில மாதங்கள் தாங்கிய
சுகமான சுமை
சில நாட்கள் எடுத்த வாந்தி
சில மணிகள் தாங்காத வலி
சிந்திய கண்ணீர்
நீயும் நானும் இன்று
பிறப்புச் சான்றிதழ்களோடு
இன்னொரு சான்றிதழ் – அது
நாம் வாங்கமுடியாது – ஆம்
நம் உறவுகள்தான் வாங்க முடியும்
வாழ்க்கையென்பது வெறும்
இரண்டு சான்றிதழ்களுக் கிடையான
இடைவெளி மட்டும்தானா,

கருவறை சொல்கிறது
வெறும் கலங்களாய் வந்த உன்னை
உயிர் கொடுத்து உருவாக்கி
போஷிக்கும் கற்பக தரு நான்
போதிக்கும் போதி மரமும் நான்
முழு மனிதனாய் உருக்கொடுத்து
உலகிற்குள் உன்னை
அனுப்பியதும்
குப்பைத் தொட்டியில் போட
உனக்கென்ன உரிமையுண்டு
வை திஸ் கொலைவெறி

கருவறையே தாயெனும்
ஆலயத்தில்
உயிரைப் படைக்கும் ஆற்றல்
உனக்குள் உண்டு
அதனால் தான் ஆலயங்களிலும்
ஆண்டவனின் இருப்பிடமும்
கருவறையெனப்படுகிறதோ

கருவின்றி பல கருவறைகள்
காய்ந்து கிடக்க
தாயாக சேய்க்காக ஏங்கிக்கிடக்க,
இனிவேண்டாம் சிசுவென்று
கருக்கலைப்பு செய்யும் போது
கருவறைகள் கழிவறைகளாகிறது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சொர்க்கம் இதுவென்று சொர்க்கும் மனிதர்கள்

## போதைப்பொருட்கள்:- சொர்க்கமும், நரகமும்

**சிந்தனைப்பூக்கள் பத்ம நாதன்**

வாழ்க்கையின் கசப்பான அனுபவங்களிலிருந்து விடுபட்டு உள்ளக்கிளர்ச்சியை தூண்டும் போதைப் பொருட்கள் (Drugs) இன்று போலியானதொரு சொர்க்கத்திற்கு தற்காலிகமாக பலரை கொண்டு செல்ல உதவுகின்றன. ஆரம்பத்தில் மகிழ்ச்சியூட்டிய பல போதைப் பொருட்கள் இன்று இன்பக் கிளர்ச்சியை ஏற்படுத்த முயன்று வருகின்றன. கடந்த சில ஆண்களில் வியப்பூட்டும் வகையில் இளையோர் மத்தியில் இப்பழக்கம் பரவி வருகிறது. உடல் உள சமூக நலத்திற்கு பெரிதும் பாதிப்பினை ஏற்படுத்தும் நிலையில் இது உள்ளதால் உலக தலைவர்களும் மனநல மருத்துவர்களும், சமூகவியளாளர்களும் இதனை தடுப்பதற்கு பல தீவிரமான முயற்சிகளை எடுத்து வருகின்றனர்.

போதைப் பொருட்கள் மனித சிந்தனையை மாற்றி உடல் - உள ஆரோக்கியத்தினை மாற்றும் வேளையில் மனிதரை அடிமையாகவும் மாற்றி விடுகின்றன. ஒரு தடவை இப்பாவனைக்கு உட்பட்டவர் இதனை விட முடியாது மீண்டும் பயன்படுத்தித்தான் ஆகவேண்டும் என்ற பரிதாப நிலைக்கு உள்ளாகிறார். கட்டுக்கடங்காத தீவிர விருப்பத்தினை ஏற்படுத்துவதில் மிக சக்தி வாய்ந்த போதைப் பொருட்கள் நூற்றுக்கணக்காக சந்தைக்கு வந்து விடுகின்றன. எப்படியெப்படியோ மறைத்து வைத்து விற்பதாய் பெரும் புள்ளிகள் உள்ளனர். பொதுவாக இப்போதைப் பொருட்களின் குணாதிசயங்கள் மிகவும் வியப்பானவை. உள்ளக்கிளர்ச்சி, மனக்கசப்பு நிலை, நடத்தை மாற்றம், உறுதியற்ற மனோநிலை என்பவற்றை இவை ஏற்படுத்துகின்றன.

போதைப் பொருட்களால் பாவனை சமூகத்தில் முக்கியத்துவம் பெற சில காரணிகள் உள. முக்கியமாக சமூகப் பிரச்சினைகளிலிருந்து விடுபடல், வித்தியாசமான எண்ணம், சில கசப்பான அனுபவங்களை மறக்க செய்தல், நோய்கள் போன்றவை தூண்டுதலாக இருந்துள்ளன. எனினும், இவை நிரந்தர தீர்வுக்கு வழிவகுப்பனவல்ல என்று எவரும் உணருவதில்லை. வேலையின்மை, பாதுகாப்பின்மை, காதல் தோல்வி, போன்றவையும் போதைப் பாவனையை தூண்டியுள்ளது. கீழ், நடுத்தர, மேல் வர்க்க வேறுபாடுகளின்றியும் பல்வேறு வயது வேறு பாடின்றியும் அனைவரையும் ஈர்ப்பதில் போதைப் பொருட்கள் பெற்றுக் கொண்டுள்ளன. பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் போதைப் பொருள் பாவனை அதிகரித்து வருகின்றது.

தற்போதைய பாவனையில் உள்ள போதைப் பொருட்கள் பல என்றும் சில முக்கியமான பொருட்களின் விபரம் பின் வருமாறு, மரிஜ்வானா (Marijuana) ஓப்பியம் (Opium) ஹெராயின் (Heroine) கொக்கெயின் (cocaine) ஹலுசிம்னாஜென் (Hallucinogens) எக்ரசி (Ectacy) ஆகியவை.

இவற்றுள் மரிஜ்வானா ஆரம்பத்தில் சில பைத்திய சேவைகளுக்காகவே பாவிக்கப்பட்டுள்ளது. Cannabis Sativa எனப்படும் செடியின் இலைகளின் மூலம் இது தயாரிக்கப்படுகிறது. வாதம், மன அழுத்தம், உளச் சோர்வு, வாந்தி பேதி போன்றவற்றிற்காக இது சிபாரிசு செய்யப்பட்டது. ஐக்கிய அமெரிக்காவில் மிகக் கூடுதலாக தயாரிக்கப்பட்ட இப்போதைப் பொருள் அருகில் உள்ள நாடுகளுக்கும் பரவியுள்ளது. இது புகைத்தல், சுவைத்தல், தேநீர் போன்றவற்றுடன் கலந்து பாவிக்கப்படுகிறது. இதனை உட்கொள்ளுபவர்களுக்கு தண்ணீர்தாகம், கண்கள் சிவப்பாதல், கைகால் நடுக்கம், மற்றவர் சொற் கேட்டல், தலைவலி, உளச் சோர்வு, முரண் மூளை என்பன ஏற்படும் ஐக்கிய அமெரிக்காவில் 1004 மாணவர்களிடம் **Kandel** என்ற வைத்தியர் செய்த ஆய்வில் பலர் விவாகரத்து செய்துள்ளனர். இளம் குற்றவாளிகளாகியுள்ளனர். மூளைக்கோளாறு பெற்றுள்ள போதையினால் வீதி விபத்துக்களும், விமான விபத்துக்களும் இப்பாவனையால் அதிகரிக்கின்றன.

ஓப்பியம் என்ற போதைப் பொருள் **Poppy** என்ற தாவரத்தின் விதைகளிலிருந்து முதலில் தயாரானது. சுமேரியப் நாகரிக காலத்தில் கூட இது பாவிக்கப்பட்டுள்ளது. தற்போது இதனுடன் மேலும் பல இரசாயனங்களை கலந்து Heroine தயாரிக்கப்படுகிறது. இதனை பாவிப்பதால் உடல் சூடு ஏறி பேரானந்த நிலைக்கு கொண்டு செல்லும் தன்மையது என்றும், சில மணி நேரங்களில் தசைகளில் நோவு, தும்மல் வியர்த்தல், கொட்டாவி என்பன ஏற்படும். பின்பு இரத்த அழுத்தம் ஏற்படும். நித்திரையின்மை, வாந்தி ஏற்படும். பல நாடுகளில் **Heroine** கடத்தல் பல பிரச்சனைகளை தோற்றுவித்துள்ளது.

கொக்கேயின் (Cocaine) எனப்படும் போதைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் 1844-ல் கொக்கோ மரத்தின் இலைகளிலிருந்து தயாரிக்கப்பட்டுள்ளது. சிக்மண்ட பிராய்ட் என்ற உளவியலாளர் நோயாளிகளை மயக்க நிலைக்கு கொண்டு வர இதனைப் பயன்படுத்தியுள்ளார். எனவே மருத்துவ தேவைகளுக்கு இது பயன்பட்டுள்ளது. ஆனால் அதனை துஷ்பிரயோகம் செய்தமையால் அமெரிக்கா போன்ற நாடுகளில் பிரச்சனை ஏற்பட்டுள்ளது. இதனை புகைத்தலில் சேர்க்கலாம். ஊசிகளால் ஏற்றலாம், ஆனாலும் மூளையை தாக்கிடவிடக் கூடிய ஆபத்துக்கள் இதில் உண்டு. பலர் மதுவையும், இதனையும் சேர்த்து அருந்தி மரணத்தினைக் கூட தழுவக்கூடும்.



ஹலுசினோஜென் (Hallucinogens) என்ற பெயரில் பலபோதைப் பொருட்கள் வருகின்றன. Albert Hofmann என்பவர் 1943-ல் LSD என்ற ஜெர்மானிய பெயரில் போதைப் பொருட்களை பாவித்தார். இது படிப்படியாக (Hallucinogens என்ற பெயரில் வந்துள்ளது. இம்மருந்து கற்பனைத் தோறங்களை மனதில் ஏற்படுத்துகின்றது. எங்கும் இல்லாத பொருட்கள் மனதில் எழுவதால் மனக்கோளாறுகள் ஏற்படுகின்றன. இவைகளை தெரிந்தும் இதிலே சொர்க்கம் காண்போர் பலர். சிலர் இதனால் நற்பனைசந்தி ஏற்படுகின்றதெனினும் அதில் உண்மையில் தசைப்பலவீனம், இரத்த அழுத்தம் போன்ற மேலதிக பிரச்சினைகள் எழுகிறது.

1985-ல் Ecstacy என்ற போதைப் பொருள் பாபளைக்கு வந்தது. கூடுதலாக இரவு களியாட்ட நடனங்களில் பாவளையில் உள்ளது. தொடர்ந்து நடனம் புரிபவர்கள். இதற்கு அடிபணிந்துள்ளனர். படிப்படியாக மயக்கம் பதட்டம், தடுமாற்றம் என்பன ஏற்படும் சகோதர நிலைக்கு அச்சுறுத்தலான இப்பொருள் பாவளையால் மரணங்கள் பல ஏற்பட்டுள்ளன.

இன்று உலகத்திலும் போதைப் பொருள் பாவளையாளர்களை பாடசாலைகளில் இது பற்றிய ஆய்வுகள் உள்ளன. இதன் தீமைகள் பற்றி மருத்துவப் பரிமாற்றங்கள் நிகழ் கின்றன. பெற்றோர் ஆசிரியர் சந்தித்துப் பேசுகின்றனர். அனுமதியின்றி போதைப் பொருட்களை கண்டறிந்து சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. போதைப் பொருட்களுக்கு அடியமையாகும் பிள்ளைகளிடம் பெற்றோர் அறிவுரை கூறுகின்றனர். நயந்து வேண்டுகின்றனர். வற்புறுத்துகின்றனர். தண்டிக்கின்றனர். ஏளனம் செய்து பேசுகின்றனர். எனினும், பலர் இப்பழக்கத்தினை விடுவதாக இல்லை.

போதைப் பொருள் பாவிப்போர்க்கு நஞ்சு இறக்க சிகிச்சை (Detoxication) செய்யப்படுகிறது. Nalmafene என்ற மருந்தும் பயன்படுகிறது. குறிப்பாக சென்னையில் இதனைப் பயன்படுத்துகின்றனர். அதில் வெற்றியும் பெற்றுள்ளது. கனடாவில் இதற்காக பல உள்ளக தங்குமிட வீடுகள் உள்ளன. ஐக்கிய அமெரிக்காவில் Daytop village, Phoneix House, மீள்திருத்த போதை தடுப்பு நிலையங்கள் உதவுகின்றன. பல்வேறு தடைகள், பிரச்சினைகள் இருந்தாலும் பலரை திருத்த முயல்கின்றனர். முடிவு தான் இல்லை!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓமம்

## பயன்கள் மற்றும் குறிப்புகள்

ஓமத்தின் இலைகள், விதைகள் என அனைத்துமே மருத்துவக் குணங்கள் கொண்டவை. நோய்கிருமிகள் உண்டாகாமல் தடுக்கும். சிலர் எவ்வளவு சாப்பிட்டாலும் உடல் தேறமாட்டார்கள். சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, அஜீரணக் கோளாறு உள்ளவர்கள் 100 கிராம் ஓமத்தை 1 லிட்டர் தண்ணீர் விட்டு கொதிக்க வைத்து அது பாதியாக வந்தவுடன் எடுத்து அருந்தினால் மேற்கண்ட அனைத்தும் தீரும்.

ஓமம், மிளகு வகைக்கு 35 கிராம் எடுத்து நன்கு இடித்து பொடியாக்கி அதனுடன் 35 கிராம் பனைவெல்லம் சேர்த்து அரைத்து காலை, மாலை என இருவேளையும் 5 கிராம் அளவு எடுத்து சாப்பிட்டு வந்தால் பொருமல், கழிச்சல், வயிற்றுக் கடுப்பு நீங்கும். நல்ல தூக்கமும், நல்ல பசியும் தான் ஆரோக்கிய மனிதனுக்கு அடையாளம். இந்த பசியும், தூக்கமும் பறந்துபோனால் நோய்களின் கூடாரமாக உடல் மாறி, அதனால் மனமும் பாதிக்கப்படும். பசியைத் தூண்டி உண்ட உணவு எளிதில் சீரணமாகவும், வயிறு தொடர்பான அனைத்து பிரச்சனைகள் தீரவும், ஓமத்தை கஷாயமாக்கி அருந்திவருவது நல்லது. காற்றும், நீரும் சுகாதாரமாகவும், சுத்தமாகவும் இருந்தால் தான் மனித இனம் உயிர்வாழ முடியும். தற்போதைய காலகட்டத்தில் காற்றும், நீரும் சுகாதாரம் என்பது கேள்விக்குறியாகி விட்டது. இந்த அசுத்தமடைந்த காற்று, நீரால் சுவாசகாசம், இருமல் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன.

தினமும் இரவில் தூங்க போகும் போது அன்னாச்சிப்பழம் நான்கு துண்டுகள் மற்றும் ஓமம் பொடி இரண்டு ஸ்புன் இவை இரண்டையும் தண்ணீரில் விட்டு கொதிக்க விட வேண்டும்.

### ஓமம் - சுக்குக் குழம்பு ஓமம்.

தேவை:


ஓமம் - 1 தேக்கரண்டி,
சுக்குப்பொடி - 1 தேக்கரண்டி,
தக்காளி துண்டங்கள் - 1/2 கப்
நறுக்கிய வெங்காயம் - 2 மேஜைக்கரண்டி
பூண்டுபல் - 10
மிளகாய் வற்றல் - 4
தனியா - 2 தேக்கரண்டி
மிளகு - 2 தேக்கரண்டி
கடலைப்பருப்பு - 1 மேஜைக்கரண்டி
உளுத்தம்பருப்பு - 1 தேக்கரண்டி
கடுகு - 1 தேக்கரண்டி
கறிவேப்பிலை - 1 கொத்து
மஞ்சள் தூள் - 1/2 தேக்கரண்டி
புளி கரைசல் - 1/2 கப்
உப்பு - ருசிக்கேற்ப
சமையல் எண்ணெய் - 2 மேஜைக்கரண்டி.

செய்முறை:

மிளகாய் வற்றல், தனியா, கடலைப்பருப்பு, மிளகு ஆகியவற்றை எண்ணெய் விடாமல் வாணலியில் சிவக்க வறுத்து பொடித்து வைக்கவும். ஓமத்தை தனியே சூடான வாணலியில் ஒருமுறை புரட்டி எடுக்கவும். வாணலியை சூடாக்கி பாதி அளவு எண்ணெயை விட்டு, கடுகு வெடிக்க விட்டு உளுத்தம் பருப்பு, மற்றும் கறிவேப்பிலை போட்டு தாளிக்கவும். வெங்காயம் மற்றும் தக்காளியோடு துளி உப்பு சேர்த்து வதக்கவும். இதோடு புளிக் கரைசல் மற்றும் மஞ்சள் தூள் மீதமுள்ள உப்பு சேர்த்து நன்கு கொதிக்க விடவும். இந்த நிலையில் ஓமம் மற்றும் சுக்குப் பொடி சேர்த்து பாத்திரத்தை மூடி வைத்து மீண்டும் ஒரு கொதி வரும் போது இறக்கவும்.

சுடச்சுட சாதத்தில் கலந்து சாப்பிடவும். வெளியே சாப்பிட்ட உணவு செரிக்காமல் இருந்தால், அந்த விஷத்தன்மையை நீக்கும் குணம் வாய்ந்தது என்பர். இந்தக் கலவை குழம்பு வயிற்று உப்புசத்தால் ஏற்படும் அசௌகரியத்தைக் குறைக்கும். அதாவது வாய்வை நீக்கி மீண்டும் வயிறு பழைய நிலைக்கு வர ஏதுவாகும்.

அஜீரண வாந்திக்கும் கை கண்ட கை வைத்தியம். குறிப்பாக அடி வயிற்றில் சூசுருக் சுருக் கென்று உண்டாகும் வலிக்கு நல்ல தீர்வை அளிக்கும். மிக எளிதில் விரைவாக தயாரிக்கக்கூடிய இந்தக் குழம்பு மிக மலிவானதும் கூட.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# NEW RANGANAS JEWEL HOUSE

## நியூ ரங்கனாஸ் நகை மாடம்

*இப்பொழுது இரண்டு கிளைகளில்!*



**எமது சேவைகள்**

1. சிங்கப்பூர் நகைகளை மிகக் குறைவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்
2. பழைய தங்க நகைகள் அதிகூடிய விலையில் வாங்கப்படும்.
3. தங்க நகை அடவு சேவை குறைந்த வட்டி வீதம்.
4. துரித பணமாற்று சேவை சகல நாடுகளுக்கும்.
5. பரிசு பொருட்கள், பான்சி சாமான்கள் மிகவும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
6. புதிய தங்கநகை சேமிப்பு திட்டம் ஆரம்பம் ($200 இலவசம்)
7. உங்கள் தங்க நகைகள் உடனுக்குடன் திருத்திக் கொடுக்கப்படும்.

**Tel: 647-702-2159**

மார்க்கம் - ஸ்ரீல்ஸ்: 6055 Steeles Ave E Unit C102, Scarborough, ON., M1X 0A7

**தை மாதம் முதல் நகை சீட்டு ஆரம்பம்**

# Sooriyan

**Srilankan - South Indian Cuisine**

:: Dosa :: Idli
:: Kothuroty

**416.438.5333**

3863 Lawrence Ave. E.
Scarborough, ON.
M1G 1R2

*Restaurant takeout and catering*

தரமான
சைவ, அசைவ
உணவுகள்
ஒரே இடத்தில்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'லவுட் ஸ்பீக்கர்'

## வீரகேசரி மூர்த்தி

பரமநாதன் மாஸ்டரைக் கண்டதும் எல்லோரும் 'லவுட் ஸ்பீக்கர்' வருகுது என்று சொல்லுவார்கள். அதைக் கேட்டதும், கடந்த கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக கனடாவில் தஞ்சம் புகுந்து நெஞ்சம் நிறைந்த வாழ்வு வாழ்ந்து வரும் எனக்கு உடனடியாக இலங்கையில் தீவுப் பகுதியிலுள்ள எங்களது கரம்பொன் கிராமத்து முருகமூர்த்தி கோயில் திருவிழா தான் ஞாபகத்திற்கு வரும். திருவிழா ஆரம்பிப்பதற்கு முதல் நாள் புளியங்கூடலில் உள்ள தம்பிஐயாவும் அவரது ஆக்களும் லைற் எஞ்ஜினையும், லவுட் ஸ்பீக்கரையும் கொண்டு வருவார்கள். அப்போது சிறுவனாயிருந்த நானும் எனது நண்பர்களுமாகப் போய் நின்று அவர்கள் ஏணியில் ஏறி 'லவுட் ஸ்பீக்கரை'யும், 'லைற் பல்பு'களையும் கட்டுவது முதல் 'வயர் கொனெக்சன'; கொடுப்பது வரை எல்லாவற்றையும் வேடிக்கையாகப் பார்த்துக் கொண்டு நிற்போம். அப்போது எங்கள் கிராமத்தில் எலெக்றி சிற்றி இல்லாது கை விளக்கோடும், அரிக்கன் லாம்போடும் படித்த காலம்.

மறுநாள் காலையில் நாங்கள் வீட்டில் இருக்கும் போதே 'ஞானப் பழத்தைப் பிழிந்து ரசமின்றி...' என்ற கே.பி.சுந்தராம்பாளின் பாடலும், 'குன்றத்திலே குமரனுக்கு கொண்டாட்டம் அங்கு கூடுதம்மா சனங் களெல்லாம் வண்டாட்டம்...' என்ற றமணி அம்மாளின் பாடல்களும் கேட்கும். அந்த இனிமையான இள வயது காட்சியினை கண் முன்னே கொண்டு வரும் பரமநாதன் மாஸ்டருக்கு நன்றி சொல்ல வேண்டு மெனத் தோன்றும். ஆனால் மறுகணம் 'லவுட் ஸ்பீக்கர்' மாதிரி அவர் எப்போதும்,எங்கேயும் காது கிழிய கத்திக் கத்திப் பேசுவதை கேட்க முடியாது காதுகளை இறுகப் பொத்திக் கொள்ள வேண்டும் போல் ஆத்திரம் வரும்.

கனடாவில் வெள்ளைக் காரரைப் பொறுத்த மட்டில் அவர்கள் மற்றவர்களுடன் பேசும் போது சத்தம் போட்டு பேசி அடுத்தவர்களுக்குத் தொல்லை ஏற்படுத்தாது குசு குசுவென ரகசியம் பேசுவது போல் தான் பேசுவார்கள். ஆனால் குடியேற்ற வாசிகளான சீனர்கள், தமிழர்கள், கறுப்பு இனத்தவர்கள் ஆகி யோர் இன்னமும் தத்தமது நாடுகளில் வாழ்வதாக நினைத்துக் கொண்டே கத்திக் கத்திப் பேசுவார்கள். அந்தத் தொல்லையைப் பொறுக்க மாட்டாது, வெள்ளையர்கள வெறுப்புடன் அவர்களைப் பார்த்து "Why our Government allow these people to come to Canada?" என் வாயினுள் முணுமுணுத்துக் கொள்வார் கள். அத்துடன் குடியேற்ற வாசிகள் இங்கு செய்யும் கடன் அட்டை மோசடிகள், வாகன விபத்தில் சிக் காமலே விபத்தில் சிக்கியதாகப் பொய் சொல்லி பெருந் தொகை காப்புறுதிப் பணத்தை பெற்று ஏமா ற்றி வருவதையும் கண்டு விரக்தி அடைந்த அரசியல்வாதிகளே குடியேற்றவாதிகளின் எண்ணிக்கையை குறைக்க வேண்டுமெனக் கூறி புதுப் புது ச ட்டங்களும் கொண்டு வந்துள்ளனர்.

தமது சொந்த தாய் நாடுகளில் ஏற்பட்ட துன்பங்களுக்கும்,பாரபட்ச நடவடிக்கைகளுக்கும் முகம் கொடு க்க முடியாது அகதிகளாய் அடைக்கலம் தேடி ஓடி வந்தோருக்கு அபயம் அளித்து, கனடா பிரஜா உரிமையும், ஏனைய சகல சமத்துவ உரிமைகளையும் வழங்கிய நாட்டுக்கே குந்தகம் விழைவித்தால் அவர்கள் பொறுத்துக் கொள்வார்களா? நூற்றி முப்பதுக்கு மேற்பட்ட இனத்தவர்கள் வாழும் பல்கலாச் சார நாடான கனடாவில் இனத் துவேசம், நிறத் துவேசம் பற்றி பேசு வதற்கு எதிராகவே தடைச் சட்டம் விதிக்கப்பட்டுள்ளது. அதனால் வெள்ளையர்கள் இவர்களது அட்டூழியங்களைக் கண்டு கொதிப்படைந்தாலும் எதையுமே வெளிக்காட்டிக் கொள்ளாது வயிற்று எரிச்சலை தாங்கிக் கொண்டு மௌனிகளாக இருப்பார்கள்.

பரமநாதன் மாஸ்ரர் நல்லதொரு எழுத்தாளர். இங்கிருந்து வெளிவரும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆகியவற்றில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதிக் கொண்டே இருப்பார். அத்து டன் இலக்கியக் கூட்டங்களிலும் சிரித்து சிரித்து நகைச் சுவையாகப் பேசுவார். அதனால் அநேகமானோருக்கு அவரைத் தெரியும். அத்துடன் அவருக்குப் பல எழுத்தாள



நண்பர்களும் உள்ளனர். அவரொரு வஞ்சகம், சூது, வாது இல்லாத நல்ல மனிசன். ஆனால் என்னையோ ஏனைய நண்பர்களையோ கோவில்களிலோ, கடைகளுக்குள் ளோ, அல்லது ஏதாவது அரசாங்கக் காரியாலயத்தின் உள்ளேயோ கண்டுவிட்டால் இடத்துக்கு ஏற்ப சவுண்டை குறைக்காமல் வழமை போல் சத்தம் போட்டு கதைப்பார். அதைக் கேட்டு அங்கு நிற்கும் சனங் கள் அனைவரும் எங்களைத் திரும்பிப் பார்ப்பார்கள். அதைப் பார்க்க எனக்கே வெட்கமாக இருக்கும். என்னடா இந்தாள் இப்படி கத்திக் கத்திப் பேசுதே என்றெண்ணி மன்னிக்கவும் மாஸ்ரர் எனக்கு அவசர அலுவலொன்று இருக்குது போக வேணுமெனக் கூறி அவரது பேச்சை முறித்துக் கொண்டு போய் விடு வேன்.

ஒரு நாள் நான் அவரைச் சந்தித்த போது மாஸ்ரர் தயவு செய்து குறை நினைக்க வேண்டாம். நீங்கள் யாரை எங்கே கண்டாலும் பலத்த சத்தம் போட்டுக் கதைக்கிறீர்கள். வெள்ளைக்கார சனங்களுக்கு மத் தியில் நீங்கள் அப்படிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைக்கும் போது அவர்கள் எல்லாரும் உங்களை வெறுப்புடன் பார்ப்பதை நீங்கள் கவனித்தீர்களோ என்னவோ தெரியவில்லை. ஆனால் நான் கவனித்திருக்கிறேன். அதனால் என க்கே வெட்கமாக இருக்கும். தயவு செய்து இனிமேல் அப்படி பொது இடங்களில் பேசும் போது மெது வாகப் பேசுங்கோ மாஸ்ரர் என மிகப் பணிவுடன் பேட்டுக் கொண்டேன்.

நீர் சொல்லுறது சரி தான் மூர்த்தி. உம்மைப் போல வேறு சில நண்பர்களும் எனக்குச் சொல்லி இருக் கினம். ஊரில இருபது வருச காலம் ஆசிரியராகப் பணியாற்றிய போது கடைசி வாங்கிலில் இருக்கும் மாணவர்களுக்கு கேட்காது என்பதனால் தினமும் சத்தம் போட்டு பாடங்களை விளக்கிப் படிப்பித்து பழக்கப்பட்டுப் போச்சுது. நானும் பலமுறை முயற்சி த்துப் பார்த்தும் அதை மாற்றுவது ரெம்பக் கஷ்டமாக இருக்குது. வீட்டில மனிசி கூட ஏன் தொண்டை கிழிய கத்திறியள் என்று பேசும் என்றார்.

ஆசிரியராக இருந்த இவரே இப்படி சத்தம் போட்டு பேசினால், மேடைகளில் கத்திக் கத்தி தேர்தல் பிரச்சாரம் செய்தும், பாராளுமன்றத்தில் கத்திக் கத்தியும் பேசி வரும் அரசியல்வாதிகளும் இப்படித் தான் எந்நேரமும் வீடுகளிலும் மனைவி மக்களுடன் கத்திப் பேசுவார்களோ என நான் ஒருமுறை எண் ணிப் பார்த்தேன்.

நீங்க சீன சனங்களைப் பார்த்திருப்பியள் மாஸ்ரர். அதுகளும் பஸ்ஸில போகேக்கயும், சந்தைக்குள்ளே நிற்கும் போதும் தங்கட பாஷையில 'சொங் சங் ஜிங்...' எனக் கத்திக் கத்தி ஏதோ சண்டை பிடிக் கிற மாதிரிப் பேசுங்கள். பஸ்ஸில போகும் போது அதுகள் அப்படி கத்திக் கத்திப் பேசும் போது தொல்லை தாங்க முடியாமல் நான் காதுகளைப் பொத்திக் கொண்டு இருப்பேன். அதைப் பார்த்து என க்கு அருகில் இருப்போர் சிரிப்பார்கள். நீ ங்கள் மாத்திரமல்ல மாஸ்ரர் எங்கட சனங்கள் பல பேர் பக்கத்தில நிக்கிறவருடன் பேசும் போது கூட ஏதோ தொலை தூரத்தில் நிற்பவரோடு பேசுற மாதிரியோ அல்லது அடுத்த வீட்டில நிற்கிற ஆளோடு வேலிக்கு மேலால கதைக்கிற மாதிரியோ நினைத்துக் கொண்டு பலத்த சத்தம் போட்டுக் கதைப்பினம். அது மாத்திரமல்ல இங்குள்ள சிலபேருக்கு இலங்கையில் இரு ந்து டெலிபோண் கோல் வந்தால், தான் பேசுவது அவர்களுக்கு கேட்காது என நினைத்துக் கொண்டு பலத்த சத்தம் போட்டுக் கதைப்பினம். முன்னர் நான் அப்பாட்மென்டில வேறு சிலருடன் கூடி இருந்த போது பேரின்பம் என்பவர் இப்படித் தான் டெலிபோணில சத்தம் போட்டுப் பேசுவார். கீழ் மாடியில இரு க்கிற ஆக்களுக்கே அது கேட்கும். பின்னர் அவர்கள் வந்து இன்று பேரின்பத்துக்கு இலங்கையில இரு ந்து டெலிபோண் வந்ததோ எனக் கேட்பார்கள்.

வேறு சிலர் இங்கேயுள்ள ஆக்களோடு டெலி போணில் லோக்கல் கோலில் பேசும் போதும் ஏதோ தொலைதூரக் கோலில பேசிற மாதிரித் தான் கத்திக் கத்திப் பேசுவினம். என்னோட அப்படி யாராவது கதைத்தால் என்னுடைய செவிப்பறையே கிழியிற மாதிரி இருக்கும். உடனடியாக டெலிபோனை காதை விட்டெடுத்து தூரத்தில பிடித்துக் கொண்டு தான் நான் பேசுவன். அப்போதெல்லாம் அது தொலை பேசியல்ல தொல்லை பேசி என நான் நினைத்துக் கொள்வதுண்டு.

நீர் சொல்லிறது சரி தான் மூர்த்தி. ஒருமுறை நான் இமிக்கிறேசன் டிப்பான்ட்மென்டுக்குப் போண் பண் ணி கதைக்கேக்க ஒரு வெள்ளைக்காரன் Could you please talk smoothly என்று கேட்டான் என மெது வாகச் சொன்னார் மாஸ்ரர். அவர் சத்தத்தைக் குறைத்துப் பேசியதும் எனக்கு சரியான சந்தோஷமாக இருந்தது. பார்த்தீங்களா மாஸ்டர். அதிலிருந்தே நீங்கள் சத்தம் போட்டுப் பேசியது அவனுக்குப் பிடிக்க வில்லை என்று தெரிகிறது தானே என்றேன். ஆனால் சிறிது நேரம் செல்ல பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில ஏறியது மாதிரி அவரது சத்தமும் உச்சக் கட்டத்துக்கு ஏறிவிட் டது. எனது ஆலோசனை யாவும் விழலுக்கு இறைத்த நீராகிப் போய் விட்டதை நான் உணர்ந்தேன்.

ஒரு நாள் பரமநாதன் மாஸ்ரர் 'சொப்பிங் மோள்' ஒன்றினுள் நிற்கும் போது பெரிய உயரமான கறுவல் தடியன் ஒருவன் தனது நண்பருடன் ஏதோ சேட்டை விட்டு பின்புறமாக ஓடி வந்த போது கைத்தடியுடன் வந்து கொண்டிருந்த ஒரு வயோதிப பெண் மீது மேதியதால் அப்பெண் தள்ளுப்பட்டு கீழே வீழ்ந்து விட்டார். அதைப் பார்த்து ஆத்திரம் கொண்ட மாஸ்ரர் "What the hell man! you pushed down the old lady" எனப் பலத்த குரலில் கத்தினார். அவர் சும்மா பேசும் போதே கத்திப் பேசுவது போல் பேசுபவர் ஆத்திரத்தில் பேசினால் எப்படி இருக்கும்? அதனால் ஆத்திரம் அடைந்த கறுவல் அவரது கன்னத்தில் பளாரென ஓங்கி ஒரு அறை கொடுத்தான். அந்த அறையில் மாஸ்ரருக்கு அண்ட சராசரம் அனைத்துமே தென்பட்டிருக்கும். இதைக் கேள்விப்பட்டதும் மாஸ்ரருக்காக நான் அனுதாபப் பட்ட போதிலும் 'நுணலும் (தவளையும்) தன்வாயால் கெடும்' என்ற பழமொழி எனக்கு ஞாபகம் வந்தது.

இவற்றை எல்லாம் பார்த்துக் கொண்டு நின்ற ஒரு வெள்ளையர் தனது செலுலர் போணில் 911 நம்பரை அழைத்து நடந்த விபரங்களைக் கூறினார். அண்மையில் போய்க் கொண்டிருந்த பொலிஸ் கார் ஒரு நிமிடத்தில் அங்கு வந்தது. அவர்களைத் தொடர்ந்து அம்புலன்ஸ் வண்டியும் வந்தது. தூரத்தே சென்று கொண்டிருந்த கறுவலை சுட்டிக்காட்டி பொலிஸாருடன் கதைத்தார் அந்த வெள்ளைக்காரன்.

அந்தக் கறுவல் தனது சிறிய பறட்டை மயிர்களுடன் மிக நீளமான பிறவுண் கலரான செயற்கை மயிர்களை வைத்துப் பின்னி பின்னர் அவற்றை அள்ளி 'றபர் பான்டி'னால் கொண்டை மாதிரி மடித்துக் கட்டி இருந்தான். அதைப் பார்க்க இமயமலையில் நீண்ட காலமாக முழுகாமல் கொள்ளாமல் தவமிருக்கும் ஞானிகளது தலை முடியைப் போன்றிருந்தது. பொலிஸர் போய் அந்தக் கறுவலுடன் கதைத்ததும் பொலிஸாருக்கே பயப்படாத கறுவல் அவர்களுடன் மாஸ்ரரைப் போலவே பலத்த சத்தமிட்டு விவாதித்தான். ஆனால் பொலிஸார் மசியவில்லை. அவர்களது இடுப்புப் பட்டியில் கைத்துப்பாக்கியும் இருந்தது. கறுவலுடன் பொறுமையாகப் பேசி கைவிலங்கை எடுத்து அவனது கைகளில் மாட்டி தமது காரின் பின் புற ஆசனத்தில் இருக்கச் செய்தனர். பின்னர் வந்து தகவல் கொடுத்த வெள்ளைக் காரரிடமும், அடி வாங்கிய பரமநாதன் மாஸ்ரரிடமும் வாக்கு மூலத்தைக் கேட்டு டயரியில் எழுதிக் கொண்டனர்.

அம்புலன்ஸில் வந்தோர் வயோதிபப் பெண்ணைப் பரிசே ாதித்து 'ஸ்றெச்சரில்' ஏத்தி அம்புலன்ஸ் வண்டிக்கு கொண்டு செ ன்றனர். மாஸ்ரரை விசாரித்த போது "I don't have any problem I am okay" என்றார். ஆனால் அடி வாங்கிய அவரது கன்னம் மாத்திரம் உப்பிச் சிவந்து போயிருந்தது. கத்திக் கத்திப் பேசி கன்னத்தில் அறை வாங்கிய இச்சம்பவத்தின் பின்னராவது பரமநாதன் மாஸ்ரர் தனது பழக்கத்தை மாற்றி மெதுவாகப் பேசுவாரா? என்பது சந்தேகம் தான்.

**(யாவும் கற்பனை)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணுத்துகள்களின் இரட்டை நிலையும் ஷ்ரோடிங்கரின் பூனைச் சிந்தனையும்

**குவாண்டம் இயற்பியல் சிந்தனையின் அடிப்படையில் தோன்றிய ஒரு விதியை விளக்க முயன்ற கட்டுரை இது.**


ராஜ்.S

**அணுத்துகள்களின் இரட்டை நிலையும், ஷ்ரோடிங்கரின் பூனைச் சிந்தனையும்**

இந்தக் கட்டுரையில் நான் சொல்லவரும் தகவல்கள் அனைத்தும் குவாண்டம் இயற்பியலின் (Quantum Physics) அடிப்படையிலானது. 1935ம் ஆண்டளவில் பிறந்த பிரபலமான சிந்தனையொன்றைப் பற்றியது இது. புரிவதற்கு மிகவும் கடினமானது. இருந்தாலும், தமிழில் இலகுவில் புரிய வைப்பதற்காக என்னாலான ஒரு முயற்சியாகவே இதைக் கருதுகிறேன். "இயற்பியலில் எனக்கு நாட்டமில்லை, அதனால் நான் இதைப் புரிந்து கொள்ளவேண்டிய அவசியமில்லைசு என்று நினைத்து, நீங்கள் இதை ஒதுக்கிவிட்டுச் செல்ல வேண்டாம். நவீன அறிவியல், நினைத்துப் பார்க்கவே முடியாத அளவுக்கு வளர்ந்துவரும் இந்தக் காலகட்டத்தில், அனைவரும் கட்டாயம் தெரிந்து கொள்ளவேண்டிய ஒன்றாகவே இதை நான் கருதுகிறேன். அதனால் சிரமங்களை ஒருபுறம் ஒதுக்கி வைத்து விட்டு, கட்டுரைக்குள் நுழைந்து கொள்ளலாம் வாருங்கள்.

**யான்நோக்கும் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்**
**தான்நோக்கி மெல்ல நகும்**

அறிவியல் கட்டுரையொன்றைத் திருக்குறளுடன் ஆரம்பிப்பது உங்களுக்கு ஆச்சரியத்தைத் தரலாம். அறிவியலைத் தேடி,



ஓடிக்களைத்து, திருக்குறளென்னும் மெய்யியலில் அடங்கி ஒடுங்குவதில் தப்பே கிடையாது. ஆனாலும், திருக்குறளின் மேன்மை பற்றிப் பேசுவதற்காக இந்தக் குறளை இங்கு நான் தரவில்லை. காமத்துப் பாலில் 1094ம் குறளாக அமைந்த, இந்தக் குறள் தரும் அர்த்தம், அப்படியே முழுமையாகக் குவாண்டம் நிலையில் நடைபெறும் செயலொன்றுடன் ஒத்துப் போகிறது என்று நான் சொன்னால், நிச்சயம் நீங்கள் ஆச்சரியப்பட்டுத்தான் போவீர்கள். 'நான் பார்க்கும் போது நிலத்தைப் பார்த்து, பார்க்காத நேரத்தில் என்னைப் பார்த்து, தனக்குள் சிரிப்பாள்' என்பதுதான் இந்தக் குறளின் பொருள். இதில் பார்ப்பவரும், பார்க்கப்படுபவரும் காதலர்கள். இருவரும் உயிருள்ளவர்கள். ஆனால் குவாண்டம் நிலையில் உள்ள துகள்கள் கூட, இப்படியான செயற்பாட்டிலேயே இயங்குகின்றன என்பது உங்களுக்குத் தெரியுமா? அதாவது, குவாண்டம் நிலையில் இருக்கும் ஒரு இலத்திரன், நாம் அதை அவதானிக்கும் போது ஒரு விதமாகவும், நாம் அவதானிக்காத போது, அதற்கு எதிரான வேறு ஒரு விதமாகவும் இயங்குகிறது. அந்த இலத்திரனுக்கு நாம் அவதானிப்பது ஏதோ வகையில் தெரிகிறது. என்ன நம்ப முடியவில்லையா? குறளில் சொன்னது போல உயிருள்ள ஒருவரால், பார்க்கும் போது பார்க்காமல் இருக்கவும், பார்க்காத போது பார்க்கவும் செய்ய முடியும். அது எப்படி, உயிரில்லாத இலத்திரன்கள், பார்க்கும் போது ஒரு விதமாகவும், பார்க்காத போது வேறு விதமாகவும் இருக்க முடியும்? இயற்பியலாளர்களை ஆச்சரியத்துடன் நிமிர்ந்து நிற்கவைத்த ஒரு செயற்பாடு இது. இதனால் திணறிப்போனார்கள். இவையெல்லாம் குவாண்டம் நிலையிலேயே நடைபெறுகின்றன. இவற்றைப்பற்றி நாம் தெளிவாக அறிந்து கொள்ளவேண்டும். அதற்கு முன்னர் 'குவாண்டம்' என்றால் என்னவென்று பார்க்க வேண்டும்.

இயற்பியலில் இரண்டு விதமான இயற்பியல்கள் உண்டு. அவை, 1. நியூட்டனின் இயற்பியல் (Newtonian Physics), 2. குவாண்டம் இயற்பியல் (Quantum Physics). அணுக்கள், அணுக்கள் சேர்ந்து உருவாகும் மூலக்கூறுகள், மூலக்கூறுகளால்உருவானபொருட்கள்,பொருட்களால் உருவான உலகம், உலகங்களால் உருவான அண்டம் என, அணுவை விட அளவில் பெரிதாக, அண்டத்தில் இருக்கும் அனைத்தும் 'நியூட்டோனியன் பிசிக்ஸ்' என்னும் ஒரு தொகுதிக்குள் அடங்குகிறது. இதில் இருக்கும் எதுவுமே ஒளியின் வேகத்தில் பிரயாணம் செய்ய முடியாத தண்மைகளைக் கொண்டிருக்கும். இன்னும் இலகுவாகச் சொல்லப் போனால், ஐசாக் நியூட்டன் என்னும் விஞ்ஞானியின் காலத்தில், அவரால் வரையறை செய்யப்பட்ட விதிகளுக்குட்பட்டவை இவை. ஆனால் 'குவாண்டம் பிசிக்ஸ்' என்பது அப்படியே அதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரெதிரானது. அணுவைப் பிளந்து, அதனுள்ளே ஆராய்ந்து பார்த்த போது, அதனுள்ளே உபஅணுத்துகள்கள் (Subatomic Particles) என்று அழைக்கப்படும் அணுவைவிட மிகமிகச் சிறிய துகள்களாலான மாபெரும் உலகமே அங்கு இயங்கிக் கொண்டிருந்தது. உலகமென்ன? அண்டத்துக்கே நிகராக, உபஅணுத்துகள்களின் செயல்பாடுகள் அணுக்களின் உள்ளே நடந்து கொண்டிருந்தன. அணுக்களுக்குள்ளே இயங்கிக் கொண்டிருந்த அந்த நுண்ணிய அண்டமே, 'குவாண்டம்' என்று அழைக்கப்படுகிறது. ஒன்று அணுக்களை விடப் பெரிய அளவிலான அண்டம். மற்றது அணுக்களுக்குள்ளே இயங்கும் நுண்ணிய வடிவிலான குவாண்டம். குவாண்டம் என்பது பிற மொழிச் சொல்லாக இருந்தாலும், தமிழில் 'அண்டம்', 'குவாண்டம்' என்னும் இரண்டு சொற்களும் பொருந்தியது போல வேறு எந்த மொழியிலும் பொருந்தவில்லை. அண்டத்துக்கு எதிர், குவாண்டம் என்று தமிழில் அமைந்தது ஒரு மாபெரும் தற்செயலே!


அணுவை பிளந்து ஆராயும் போது, அது இலத்திரன், புரோட்டான், நியூட்ரான் ஆகியவற்றால் உருவாக்கப் பட்டிருப்பதை முதலில் கண்டுபிடித்தனர். இந்த மூன்றிலிலு மிருந்துதான் குவாண்டம் பிசிக்ஸ் பயணத்தை ஆரம்பிக்கிறது. பின்னர் புரோட்டான்கள், நியூட்ரான்கள் போன்றவை பிளக்கப்பட்டு, அங்கு குவார்க்குகளும், குளுவான்களும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இப்படியே படிப்படியாக, உபஅணுத்துகள்களுக்கே ஒரு காட்சிச்சாலை (Subatomic Particle Zoo) அமைக்கக் கூடிய அளவுக்கு துகள்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இன்னும் எத்தனையோ துகள்கள் கண்டுபிடிக்கப்படாமலும் இருக்கின்றன. இவை போஸான்கள், பேமியான்கள், லெப்டான்கள், ஹாட்ரான்கள், மேசோன்கள், பாரியோன்கள், மாட்டர்கள், ஆண்டி மாட்டர்கள் என்ற வகைகளில் எண்ணிக்கையற்றுக் குவிந்தபடி இருக்கின்றன. இவை அனைத்தும் மிகச் சிறியதென்று நாம் நினைத்து வந்த அணுவுக்குள்ளே இருப்பவை. இவை அனைத்தும் ஒன்று சேர்ந்து தனியாக, ஒரு அண்டம் போல இயங்குகின்றன. அங்குள்ள துகள்களில் பல ஒளியின் வேகத்தில் பயணிப்பவை. மனிதனால் கற்பனை செய்தே பார்க்க முடியாத இயல்புகளைக் கொண்டவை. நவீன இயற்பியலாளர்கள் வெளியிடும் புரட்சிகரமான, அதிர்ச்சிகரமான அறிக்கைகளுக்கு மூலகாரணமாக இருப்பவை. இவற்றைப் பற்றி அறிந்து கொள்வதே 'குவாண்டம் இயற்பியல்' எனப்படுகிறது. சமீபத்தில் வெளியான 'ஸ்ட்ரிங்க் தியரி', 'எம் தியரி', 'பாரலல் யூனிவேர்ஸ்', 'மல்ட்டிவேர்ஸ்', 'பல்பரிமாணங்கள்', 'டார்க் எனர்ஜி', 'டார்க் மாட்டர்', 'கிராவிட்டான்' என்பவை பற்றிய புரட்சிகரமான கோட்பாடுகளுக்கு இந்த குவாண்டம் இயற்பியலே காரணமானது (இவை பற்றி தனித்தனியாக வெவ்வேறு கட்டுரைகளில் 'உயிர்மையில்' நானே எழுதியிருக்கிறேன்). இப்படியான குவாண்டம் நிலையில்தான் இலத்திரன் என்பது இயங்குகிறது என்பதை இப்போது நீங்கள் புரிந்திருப்பீர்கள்.




இலத்திரன் (Electron) என்பது குவாண்டம் நிலையில், இரண்டு விதத்தில் இயங்குகிறது என்று சொல்லியிருந்தேன். அது சாதாரண நிலையில் அலைகளாகவும் (Wave), வேறொரு நிலையில் துகள்களாகவும் (Particles) காணப்படுகிறது. ஒரே இலத்திரன் இப்படி இரண்டு விதமாகவும் இருப்பது என்பது சாத்தியமாக இருக்க முடியாதது. ஆனால், இலத்திரன் இந்த இரண்டு நிலைகளிலும் இருப்பது என்பது ஆராய்ச்சிகளின் மூலம் கண்டறியப்பட்டது. மேலிருந்து கீழாக மெல்லிய, நீண்டதொரு துளையுள்ள ஒரு தகட்டினூடாக இலத்திரன்களைத் தொடர்ச்சியாகச் செலுத்தி, அவை அந்தத் துளையினூடாக வெளிவந்து தகட்டின் பின்னால் உள்ள திரையில் படும்படி விட்டபோது, அங்கு நேர் கோட்டில் இலத்திரன்கள் படிந்ததை அவதானிக்க முடிந்தது. அதாவது துப்பாக்கிக் குண்டுகள் நேராக செலுத்தப்பட்டு துளைப்பது போல, நேர்கோட்டில் அவை அந்தத் திரையில் படிந்து காணப்பட்டன. இது இலத்திரன்கள் துகள்களாக இருக்கும் தண்மைக்கு உதாரணமாகிறது. ஆனால், முன்னரிட்ட துளை போல, இரண்டு துளைகளை அருகருகே இட்டு, இலத்திரன்களை அவற்றினூடாகத் தொடர்ச்சியாகச் செலுத்திய போது, பின்னால் உள்ள திரையில், இரண்டு கோடுகளாக இலத்திரன்கள் படிவதற்குப் பதிலாக, வரிசையாகப் பல கோடுகள் படிந்து காணப்பட்டன. இவை இலத்திரன்கள் அலைகளாக இயங்குவதற்கான ஆதாரமாக அமைகின்றது (புரிந்து கொள்ள முடியாதவர்கள் படத்தைப் பார்த்துப் புரிந்து கொள்ளலாம்).


ஒரே இலத்திரன் எப்படி ஒரு சமயத்தில் துகளாகவும், இன்னுமொரு சமயத்தில் அலையாகவும் இயங்குகிறது என்று ஆச்சரியத்தின் உச்சிக்குச் சென்ற ஆராய்ச்சியாளர்கள், இலத்திரனின் இன்னுமொரு செயலைக் கண்டு சிலையாகிப் போனார்கள். இரண்டு துளைகளினூடாகச் செலுத்தப்பட்ட 'இலத்திரன்கள் அலைகளாக செல்கின்றனவே!' என்று ஆச்சரியத்துடன் அவற்றை அவதானிக்கச் சென்ற போது, நாம் அவதானிப்பது தெரிந்த இலத்திரன்கள், உடனடியாக அலைகளாகச் செயல்படுவதை நிறுத்திவிட்டு, துகள்களாகச் செல்ல ஆரம்பித்தன. அதாவது பின்னால் உள்ள திரையில் நாம் அவதானித்த போது, இரண்டு நேர்கோடுகள் போல இலத்திரன்கள் பதிய ஆரம்பித்தன. நாம் அவதானிக்காத போது, அலைகளாகவும், நாம் அவதானிப்பது தெரிந்ததும் பார்ட்டிகள்களாகவும் இலத்திரன்கள் இயங்கின. ஏற்கனவே இலத்திரன் அலையாகவும், துகளாகவும் எப்படி இயங்குகிறது என்று ஆச்சரியப்பட்டுப் போன இயற்பியலாளர்கள், நாம் அவதானிப்பதால் தன் செயலை மாற்றிக் கொள்ளும் இலத்திரனைப் புரிந்துகொள்ள முடியாமல் தவித்தனர். 'இலத்திரனுக்கு உயிர் இருக்கிறதா?' எனச் சந்தேகிக்கலாம் போலக் கூட இருந்தது. இப்படிப்பட்ட செயல்பாடு இலத்திரனுக்கு மட்டுமல்லாமல், பெரும்பாண்மையான உப அணுத்துகள்களுக்கும் இருந்ததையும் கண்டுபிடித்தனர். நாம் அவதானிக்கும் போது, வேறு விதமான நிலையில் துகள்கள் இயங்குவதை, அந்தத் துகள்களின் 'உச்ச நிலை' (Superposition) என்று இயற்பியலாளர்கள் அழைத்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சூப்பர் பொஸன்'' நிலையைக் குவாண்டம் இயற்பியல் ஆரம்பித்த காலகட்டங்களில் பலரால் புரிந்து கொள்ள முடியாமல் இருந்தது. 'சூப்பர் பொசிஸன்' நிலையைப் புரிய வைப்பதற்காக, ஆஸ்ட்ரியாவைச் சேர்ந்த இயற்பியலாளரான 'எர்வின் ஷ்ரோடிங்கர்' (Erwin Schroedinger) என்பவர், 1935ம் ஆண்டில் ஒரு புதுமையான சிந்தனையை முன்வைத்தார். அந்தச் சிந்தனையே, 'ஷ்ரோடிங்கரின் பூனைச் சிந்தனை' (Schrodinger's Cat Thought) என்று அழைக்கப்படுகிறது. ஷ்ரோடிங்கர் ஆஸ்ட்ரியா நாட்டில் பிறந்தவர். ஜேர்மனியின் நாஸிகள் ஆஸ்ட்ரியாவைக் கைப்பற்றிய சமயத்தில் அயர்லாந்தைச் சென்றடைந்தார். டப்ளின் நகரில் வைத்தே தனது பூனைக் கருத்தை அவர் வெளியிட்டார். குவாண்டம் இயற்பியலின் ஆரம்ப கர்த்தாக்களில் ஷ்ரோடிங்கரும் ஒருவராவார்.

அணுத்துகள்களின் இரட்டை நிலைகளையும், சூப்பர் பொசிஸனையும் விளக்குவதற்காக, தனது பூனையை மையமாக வைத்தே ஷ்ரோடிங்கர் ஒரு கருத்தைத் தெரிவித்தார். அதற்காக அவர் தனது பூனையை எந்த ஒரு பரிசோதனைக்கும் உட்படுத்தவில்லை. வாய்மொழியாக சொல்லப்பட்ட ஒரு பரிசோதனைச் சிந்தனைதான் இது. அந்தச் சிந்தனைக்கான பரிசோதனையை சுருக்கமாகச் சொல்கிறேன். இறுக்கமாக அடைக்கப்பட்ட இரும்பினாலான ஒரு பெட்டிக்குள் கதிர்வீச்சை வெளிவிடும் ஒரு தனிமத்தின் மிகமிகச் சிறிய அளவை எடுத்து, அதாவது அந்த தனிமத்தின் ஓரிரு அணுக்களை மட்டும் எடுத்து அந்தப் பெட்டிக்குள் வைக்க வேண்டும். கதிர்வீச்சு வெளிவிடப்படும் போது, அந்தக் கதிர்வீச்சை அளப்பதற்கு ஒரு கருவியை உபயோகிப்பார்கள். அந்தக் கருவி 'கைகர் கௌண்டர்' (Geiger Counter) என்று அழைக்கப்படுகிறது. அந்த 'கைகர் கௌண்டர்' கருவியையும் கதிர்வீச்சு தனிமத்துடன் சேர்த்து அந்தப் பெட்டியில் வைக்க வேண்டும். பின்னர் ஒரு சிறிய கண்ணாடிக் குடுவையினுள் சயனைட் விசத்தை நிரப்பி, அதையும் பெட்டியினுள் வைக்க வேண்டும். கதிர்வீச்சு தனிமம் கதிர்வீச்சை வெளியிடும் சமயத்தில், 'கைகர் கௌண்டர்' கருவி, ஒரு அசைவுடன் இயங்க ஆரம்பிக்கும். அந்த அசைவின் போது, அதனுடன் சேர்ந்து அசைவது போல, ஒரு சம்மட்டி ஒன்றும் பொருத்தப்பட்டு இருக்க வேண்டும். அதாவது, கதிர்வீச்சு தனிமம் கதிர்வீச்சை வெளியிடும் போது, 'கைகர் கௌண்டர்' அசையும். அப்போது அந்தச் சம்மட்டியும் அசைந்து சயனைட் விசமுள்ள குப்பியை தாக்கி உடைக்குமாறு அனைத்தும் வடிவமைக்கப்பட்டிருக்க வேண்டும். செய்ய வேண்டியதெல்லாம் அவ்வளவுதான்.

இதன் பின்னர்தான் ஷ்ரோடிங்கரின் பூனைச் சிந்தனைக்கான பரிசோதனை ஆரம்பமாகிறது. ஒரு பூனையை எடுத்து அந்தப் பெட்டியினுள்ளே இட்டு மூடிவிட வேண்டும். பெட்டிக்குள்ளே நடப்பது எதுவும் வெளியே தெரியாதபடி பெட்டி இறுக்கமாக மூடப்பட்டிருக்கும். இப்போது இரண்டுவிதமான சாத்தியங்கள் பெட்டிக்குள் நடைபெறலாம். ஒன்று, பெட்டிக்குள் இருக்கும் கதிர்வீச்சு தனிமம் சிதைவுறும் போது (Decay), அது கதிர்வீச்சை வெளிவிடலாம், அல்லது அது சிதைவடையாமல் கதிர்வீச்சை வெளிவிடாமலும் இருக்கலாம். கதிர்வீச்சை அந்த தனிமம் வெளிவிட்டால், 'கைகர் கௌண்டர்' இயக்கப்பட்டு, அதன் மூலம் சம்மட்டியானது சயனைட் இருக்கும் குப்பியைத்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கி, சயனைட் விசத்தினால் பூனை இறந்து போய்விடும். அல்லது அந்த தனிமம் சிதைவடையாமல் இருந்து, எதுவுமே நடக்காமல் பூனை உயிருடன் இருக்கும்.

இப்போது யோசித்துப் பாருங்கள். அந்தப் பெட்டியைத் திறக்கும் வரை, பூனை உயிருடன் இருக்கிறதா? இல்லையா? என்பது வெளியில் இருக்கும் நமக்குத் தெரியாது. பெட்டியைத் திறந்தால் மட்டுமே பூனை உயிருடன் இருக்கிறது அல்லது செத்திருக்கிறது என்பது தெரியவரும். ஆனால் பெட்டி மூடிய நிலையில் இருக்கும் போது, பூனை உயிருடன் இருக்கவும், உயிரில்லாமலும் இருக்கவுமான சாத்தியங்கள் சமமாகவே இருக்கும். ஒரே நேரத்தில் பூனை உயிருடனும், இறந்தும் இருக்கக் கூடிய இரட்டை நிலை காணப்படும். எப்போது பெட்டியைத் திறந்து நாம் அவதானிக்கிறோமோ, அப்போது அந்த இரட்டை நிலையில் இருந்து விலகி, ஒரு நிலையை மட்டும் எடுக்கும். இது பூனையை அவதானிப்பவர்களான நம்மை வைத்துக் கணிக்கப்படும் ஒரு நிலை. இதுபோலப் பெட்டிக்குள் பூட்டப்பட்டிருக்கும் பூனையின் பார்வையில் இந்தச் செயல்பாட்டைக் கவனியுங்கள். கதிர்த் தொழில்பாட்டை அந்தத் தனிமம் வெளியிடாதவரை பூனை அந்தப் பெட்டியில் உள்ள அனைத்தையும் பார்த்துக் கொண்டே இருக்கும். அது உயிருடன் இருக்கும் வரை எதுவுமே நடக்காமல், எந்த மாற்றமும் இல்லாமல் இருக்கும். ஏதாவது நடந்தால், அந்தக் கணமே பூனை உயிருடன் இருக்காது. இறந்த பூனைக்கு எதுவும் தெரியாது. அதனால் பூனைக்கு எப்போதும் ஒரேயொரு நிலை மட்டுமே இருக்கும். அந்தப் பெட்டிக்குள் இருப்பவை எந்த மாற்றமில்லாமல் காட்சிதரும் நிலைதான் அது. இரண்டாம் நிலை என்பது அதன் பார்வையில் இருக்கவே போவதில்லை. அப்படி ஒன்று இருக்கும் பட்சத்தில் அது இறந்து போயிருக்கும். அதனால் பூனை எப்போதும் 'சூப்பர் பொசிஸன்' என்னும் ஒரே நிலையில் இருக்கும். அந்தப் பெட்டியைத் திறக்கும் வரை, நமது பார்வையில் ஒரே சமயத்தில் பூனை இறந்தும், இறக்காமலும் உள்ள இரட்டை நிலை இருந்து கொண்டே இருக்கும். நாம் எப்போது பெட்டியைத் திறந்து அவதானிக்கிறோமோ, அப்போது அந்த இரட்டை நிலை விடுபட்டு பூனை இறந்துவிட்டது அல்லது உயிருடன் இருக்கிறது என்னும் ஒரு நிலை மிஞ்சும்.

மேற்படி சொல்லபட்ட ஷ்ரோடிங்கரின் பூனைச் சிந்தனை, மிகச் சரியாக அணுத்துகள்களின் செயற்பாடுகளைப் புரிய வைப்பதாக அமைந்திருந்தது. இந்த 'ஷ்ரோடிங்கரின் பூனைச் சிந்தனை' இன்றுவரை பலராலும் வியந்து சொல்லப்பட்டு வருகிறது. குவாண்டம் இயற்பியலுக்கு மிகவும் வலிமையைச் சேர்த்த ஒரு தத்துவமாகவே இது இன்றுவரை பார்க்கப்படுகிறது.

பெட்டிக்குள் பூட்டப்பட்ட கதிர்வீச்சுத் தனிமம் ஏன் கதிர் வீச்சை வெளிவிடாமல் இருக்க வேண்டும் என்ற கேள்வி இங்கு எழலாம். கதிர்விச்சுத் தனிமம் என்றால், தானே சிதைந்து (Decay) கதிர்வீச்சை வெளிவிடத்தானே வேண்டும்? அதுதான் உண்மையும் கூட. அப்படி இருக்க, அது ஏன் கதிர்வீச்சை வெளியிடாமல் இருக்க வேண்டும் என்பது பெரிய கேள்வியாகிறதல்லவா? அதைப் புரிய வைக்க முதலில் கதிர்வீச்சுத் தனிமங்களின் 'அரைவாழ்வு காலம்' என்றால் என்ன? அது என்ன வகையில் நடைபெறுகிறது என்று பார்க்கலாம். அணுக்கதிர்வீச்சு தனிமங்கள் இரண்டு விதங்களில் கதிர்வீச்சை வெளிவிடுகின்றன. ஒன்று, பிற தாக்கங்கள் எதுவுமின்றி தானாகவே சிதைவடைவது (Nuclear Decay), மற்றது இலகுவாக அணுப்பிளவடைவது (Nuclear Fission). ஒவ்வொரு கதிர்வீச்சுத் தனிமமும் அவற்றின் தண்மைக்கேற்றவாறு, தம்மைச் சிதைத்துக் கொள்கின்றன. அப்படிச் சிதைவதால் அவை வேறொரு தனிமமாக மாறுகின்றன. சிதைவடைவதன் மூலம் அழிவுறும் அந்தத் தனிமத்தின் தண்மையை, 'அரை வாழ்வுக் காலம்' (Nuclear half life) என்னும் ஒரு அளவீட்டால் அளக்கிறார்கள். உதாரணமாக, ஒரு கிலோகிராம் எடையுள்ள தனிமம், தன்னைத் தானே அழித்து (சிதைவடைந்து) அரைக் கிலோகிராம் எடையுள்ளதாக மாறுவதற்கு எடுக்கும் காலத்தை, 'அரை வாழ்வுக் காலம்' என்கிறார்கள். ஒவ்வொரு தனிமத்துக்கும் 'அரைவாழ்வுக் காலம்' வேறு வேறானதாக இருக்கும். ஒரு நிமிடத்திலிருந்து ஒரு இலட்சம் வருடங்கள் வரை கூட இந்த அரைவாழ்வு காலம் தனிமத்துக்கு தனிமம் மாற்றமடைந்து இருக்கும். அல்ஃபா கதிர், பீட்டா கதிர், காமா கதிர் என்னும் கதிர்களை இவை வெளிவிட்டு, புதிய தனிமங்களாக மாறுகின்றன.

இப்போது, 'X' என்னும் அணுக்கதிர்வீச்சு தனிமத்தை உதாரணத்திற்காக எடுத்துக் கொள்ளுங்கள். அதன் அரைவாழ்வு காலம், 'ஒரு நாள்' என்றும் வைத்துக் கொள்ளுங்கள். அதாவது ஒரு கிலோகிராம் 'X' தனிமம் அரை கிலோகிராமாக மாறுவதற்கு ஒரு நாளாகிறது. பின்னர் அந்த 'X' தனிமம் கால் கிலோகிராமாக மாற மேலுமொரு நாள் ஆகிறது. கால் கிலோகிராம், 125 கிராமாக மாற மூன்றாவது நாள் எடுக்கும். இப்படியே அது சிதைவடைந்து கொண்டிருக்கும் என்று வைத்துக் கொள்ளுங்கள். எல்லாமே ஒரு உதாரனத்திற்காகத்தான். ஒரு கிலோகிராம் 'X' தனிமத்தில் ஒரு லட்சம் அணுக்கள் இருந்தன என்று ஒரு பேச்சுக்கு வைத்துக் கொள்ளலாம் (பேச்சுக் குத்தான்).

அது அரை கிலோகிராமாக மாறும் போது, ஐம்பதாயிரம் அணுக்கள் அழிந்திருக்கும், ஐம்பதாயிரம் அணுக்கள் அழியாமல் இருந்திருக்கும். அடுத்த தினம் கால்கிலோகிராமாக மாறும் போது, அதில் 25000 அணுக்கள் அழிந்து போய், 25000 அணுக்கள் எஞ்சியிருக்கும். இப்படியே அழிந்து கொண்டிருக்கும் போது, குறிப்பிட்ட சில அணுக்கள் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை அழியாமல் தப்பிக் கொண்டே இருக்கும். ஆனாலும் அவற்றின் அரைவாழ்வு காலமும் ஒரு நாள்தான். இருந்தாலும் பல நாட்களுக்கு அழியாமல் தப்பிக் கொள்கின்றன. சில அணுக்கள் அழிவதும், சில அணுக்கள் அழியாமல்தப்புவதற்கும் இருக்கும் வித்தியாசத்தைப் பார்த்தால், ஏதுமில்லை. ஒவ்வொரு அணுவும் அழியவும், அழியாமல் இருப்பதற்கும் ஏதோ ஒரு வகையில் தீர்மானிக்கின்றன. ஒரு வருடத்துக்கு அந்த X தனிமம் முழுமையாக அழியாமல், அதில் சிறிதளவு எஞ்சியிருந்தது என்றால், அந்த ஒரு வருடத்திற்கு எஞ்சியிருந்த சிறிதளவு அணுக்கள், ஒரு நாள் அரைவாழ்வு காலம் இருந்தும், ஒரு வருடத்துக்கு வாழ்ந்துதான் இருக்கின்றன. ஏதோ ஒரு செயற்பாட்டினால் அவை அழியாமல் அப்படியே இருந்திருக்கின்றன. அதாவது ஒரு அணுக்கதிர் தனிமம், கதிர்வீசை வெளிவிடலாம், வெளிவிடாமலும் இருக்கலாம் என்பது இதிலிருந்து புரிகிறது. இதுவே ஷ்ரோடிங்க பூனைச் சிந்தனையிலும் சொல்லப்பட்ட கதிர்வீச்சு மூலகத்துக்கு நடைபெற்றது. உங்களுக்குப் புரிகிறதா? மிகவும் கடினமானதொரு இயற்பியல் கருத்தைப் புரியவைப்பதற்கு முயற்சித்திருக்கிறேன். இது உங்களுக்குப் புரியாவிட்டால், மீண்டும் ஒருமுறை திரும்பப் படித்துப் பாருங்கள். அப்போதும் புரியவில்லை என்றால், அது உங்கள் தவறல்ல. உங்களுக்குச் சரியாகப் புரிய வைக்க முடியாத என் தவறுதான். ஆனால் இங்கு நான் எழுதியது உங்களுக்குப் புரிந்திருந்தால், அது எனக்குக் கிடைக்கும் பெரிய வெற்றியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Verico The Mortgage Practice



TMP
THE MORTGAGE PRACTICE™



SIVA RATNASINGAM
Mortgage Agent

Direct : 416.520.1214
Office : 416.430.0111

Fax : 416.430.0222

Email: Siva@ceylingo.com
Web: www.ceylingo.com

Office: 2929 Lawrence Ave, East, Unit 203,
Scarborough, ON M1P 2S8
HO: 2425 Matheson Blvd E., 8th Floor,
Mississouga, ON L4W 5K4

License:
Brokerage : 11156



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கிய மரபில் மகாபாரதமும் அதன் செல்வாக்கும்



- இலக்கியப் பிரியன் -

தமிழ் இலக்கிய வரலாற்றிலே செந்நெறி இலக்கியங்களும் நாட்டார் இலக்கியங்களும் காலத்திற்குக் காலம் ஒன்றை ஒன்று தழுவியனவாகக் கொண்டும் கொடுத்தும், வளமும் வாழ்வும் பெற்று வந்துள்ளன. சங்க காலத்திலே நாட்டார் இலக்கிய மரபுகளைப் பெரிதும் பின்பற்றியே புலவர்கள் சங்கச் செய்யுள்களைப்படைத்துள்ளனர். உலகின் அனைத்து மொழி களிலும் இத்தகையதோர் இலக்கியப் போக்கு இடம் பெற்றே வந்துள்ளது. கிரேக்க மொழியிலும் இத்தகைய இலக்கிய செல் நெறி பின்பற்றப் பட்டுள்ளமையை சி.எம். பௌறா என்ற அறிஞர் ஆராய்ந்து நிறுவியுள்ளமையும் நோக்கத்தக்கதாகும்.

நாட்டார் இலக்கியநெறியில் நாட்டார் பாடல்கள், நாட்டார் கதைகள், பழமொழிகள்,விடுகதைகள் என்ற வகைகள் இடம் பெறுகின்றன. பொதுவாக நாட்டார் இலக்கியம் அனைத்தும் மக்களின் வாழ்வியலோடு இரண்டறக் கலந்தனவாக, அவர்களது நாளாந்த வாழ்க்கையோடு இணைந்தனவாகக் காணப்படுதலே அவற்றின் சிறப்புக்களாகும். தமிழகத்திலும் ஈழத்திலுமுள்ள நாட்டார் கதை இலக்கியங்கள் பெரும்பால னவை பாரதம், இராமாயணம், மற்றும் கிராமியத் தெய்வம் சார்ந்த கதைகளைப் பொருள்களாக் கொண்டே அமைந்திருப் பதைக் காணலாம். பொதுவாக தமிழிலுள்ள கதைப்பாடல்கள் அனைத்தையும் ஒருங்கே நோக்கினால் அவற்றில் மகாபாரதம் சார்ந்த கதைப் பாடல்களே அதிகமாகக் காணப்படும்.

மகாபாரதக்கதைகளின் செல்வாக்குச் சங்க இலக்கியங்களி லும் காணப்படுகிறது. பாரதப்போர் நடைபெற்றபோது, பாண்ட வரும் துரியோதனன் ஆதியோரம் பொருத காலத்து இரு திறத் துப் படைகளுக்கும் பெருஞ்சோறிட்டுநிடுநிலை நின்றான் சேர மான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன் என்ற செய்தியைப் புறநானூறு இரண்டாம் பாடல் சான்றுபடுத்துகிறது. சங்க காலம் வீரயுக காலம் ஆதலால் போடர்களின் தொகுப்பாக விளங்கும் மகாபாரதக்கதை மக்கள் மத்தியில் விருப்புடன் கேட்கப்பட்டிருக்கலாம். வியாசர் வடமொழியில் இயற்றிய மகாபாரதம் சங்க காலத்தின் இறுதியில் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு மக்கள் மத்தியில் பெருவழக்குப் பெற்றிருந்தது என்ற செய்தியை, அக்காலத்துக்கு உரியதான 'சின்னமனூர் செப்பேடு', 'மகாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்ற தொடராற்; குறிப்பிடுகிறது. எனவே சங்கப் புலவர்கள் மகாபாரதக் கதையைத் தம் புலவர் அமர்வுகளில் எடுத்துக் கூறியும், அக்கதைபற்றிக் கலந்தரையாடியும் இலக்கிய நயம் கண்டிருப்பர் எனலாம்.

சங்க காலத்தின் இறுதிப் பகுதியில் வாழ்ந்த பெருந்தேவனார் என்னும் புலவர் சங்க இலக்கியங்களாகிய அகநானூறு, நற்றினை, குறுந்தொகை, ஐங்குநுறூறு, புறநானூறு ஆகிய வற்றுக்குப் பாயிரம்ஃ கடவுள்வாழ்த்துப் பாடியுள்ளார். அவர் பாரதக்கதையை அகவல் யாப்பில் சங்கச் செய்யுள் போன்று பாடியிருந்தார் என்றும், அவருக்குப் பாரதம் பாடிய பெருந்தேவனார் என்ற சிறப்புப் பெயர் வழங்கிற்று என்றும் அறியப்படுகிறது. ஆயினும் அவர் பாடிய பாரதம் இடைக் காலத்தில் அழிந்து விட்டது. அந்நூலிலிருந்து சில பாடல்களைத் தொல்காப்பியம், யாப்பருங்கலம் ஆகிய நூல்களுக்கு உரை எழுதிய உரையாசிரியர் மேற்கோளாக எடுத்தாண்டுள்ளனர்.

தமிழ் நாட்டில் பல்லவர் ஆட்சி நடைபெற்ற காலத்தில் (கி.பி.600-900) வடமொழிச் செல்வாக்கு தமிழர் மத்தியில் பெரிதும் இடம்பெறுவதாயிற்று. அக்காலத்தில் மகாபாரதக் கதைகள்; பக்தி இலக்கியத்தில் குறிப்பாக ஆழ்வார் பாடல்களில் அலங்கரித்துப் பாடப்பட்டுள்ளன. பல்லவர் காலத்தில் ஊர் தோறும் பாரதக் கதை படிக்கப்படுவதற்குப் பல்லவ மன்னர் ஏற்பாடு செய்திருந்தமையை அக்காலக்கல்வெட்டுக்கள் சான்று படுத்துகின்றன. அதன் பின்னர் நந்திவர்மன் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 9 ஆம் நூற்றாண்டு) பாரதக்கதை முழுமையாக வெண்பா யாப்பில் பாரத வெண்பா என்ற பெயரில் பாடப்பட்டுள்ளது. அதில் இடையிடையே உரை நடையும் கலந்துள்ளது. அந் நூலின் சிறுபகுதியே இப்போது கிடைத்துள்ளது. அதன் பின்னர் அருணிலைவாசர் அல்லது வத்சராசர் என்பவர் பாரதக் கதை யைத் தமிழில் இயற்றினார் என்றும் - அதுவும் காலத்தால் அழிந்து விட்டது எனவும் அறியப்படுகிறது. பல்லவ மன்னர் வட மொழி தமிழ்மொழி இரண்டிற்கும் ஆதரவு அளித்து தமிழில் அதிக இலக்கியங்கள் தோன்ற வழிவகுத்தனர். பல்லவர் காலத்தில் வடமொழி இலக்கியங்கள் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டும், மகாபாரதம் மற்றும் இராமாயணக்கதைகள் தமிழில் தோன்றிய இலக்கியங்களில் உவமைகளாகவும் மேற்கோள்களாடகவும் எடுத்தாளப்படுவதற்கும் ஊக்கம் அளிக் கப்பட்டதால் பாரதமும் இராமாயணமும் தமிழ் இலக்கியத்தில் ஆட்சி செலுத்தத் தொடங்கின.

மகாபாரதக்கதையில் ஏராளமான உபகதைகள் இடம்பெற் றுள்ளன. அக்கதைகள் தமிழ் இலக்கியத்தில் பிற்காலத்தில் தனித்தனிச் சிற்றிலக்கியங்களாகப் பாடப்பட்டுள்ளன. நளவெண்பா இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் புகழேந்தியார் வெண்பாப் பாடுவதில் புகழ் பெற்றவர், 424



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்பாக்களால் நளவெண்பாவை கவிவளம் சிறக்கப் பாடியுள்ளார். நளன் – தமயந்தி கதையை பாமர மக்களும் நன்கு அறிவர். பாண்டி நாட்டைச் சேர்ந்த புகழேந்தியாடர் சோழ மன்னரின் அரசசபைக்கு விருந்தினராக வந்தபோது, அங்கு பெருஞ் செல்வாக்குடன் வாழ்ந்த ஒட்டக்கூத்தரால் அவர் சிறையில் அடைக்கப்பட்டு, பெருந்துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டார். இதனை அறிந்த அரசன் அவரைச் சிறை மீட்டான் எனக் கதைகள் கூறுகின்றன. புகழேந்தியார் சிறையில் இருந்த காலத்தில் பல சிற்றிலக்கியங்களையும் இயற்றியுள்ளார். அவற்றுள் மகாபாரதஉபகதைகளைத் தழுவி பவளக்கொடிமாலை, அல்லியரசாணிமாலை, ஏணி யேற்றம். பஞ்சபாண்டவர் வனவாசம், திரௌபதியாள் குற வஞ்சி எனப் பல்வேறு நூல்களும் இவரால் ஆக்கப்பட்டன. இந்நூல்களும்,17ஆம், 18 அம் நூற்றாண்டுகளில் தோற்றம் பெற்ற பாரதக் கதையைச் சார்ந்த நாட்டார் இலக்கியங்களும் அச்சுவாகனம் ஏறி, மக்களிடம் பரவின – எனநாட்டார் இலக்கியத் துறை அறிஞரான நா. வானமாமலை அவர்கள் குறிப்பிடுவர். அல்லியரசாணிமாலைநாட்டார் இலக்கிய மரபில் தோன்றிய காவியம் எனவும் அவர் குறிப்பிடுவது நோக்கத்தக்கது. தமிழர் பண்பாட்டு வரலாற்றில் மகாபாரதக்கதையின் செல்வாக்கு பெரி தும் காணப்பட்டமையால் புலவர்கள் அக்கதைகளை வைத்துப் பல்வேறு சிற்றிலக்கியங்களைப் பாடலாயினர்.

மகாபாரதத்தில் இடம்பெறாத விடயங்களை பாரதக்கதை யுடன் இணைத்தும் இலக்கியங்கள் தோன்றியுள்ளன. இதற்குத் திரௌபதி குறவஞ்சி சான்றாகும். பாண்டவரும் திரௌபதையும் வனவாசம்செய்த காலத்தில் –திரௌபதி குறத்தி வேடத்தில் அத்தினாபுரியில் அரண்மனைக்குள் புகுந்து துரியோதனனு டைய மனைவி பானுமதியின் கைபார்த்து குறிசொல்வதாக இக்கதைப்பாடல் பாடுகின்றமை நோக்கத்தக்கது. இக்கதைகள் யாவும் மக்கள் மத்தியில் வாய்மொழி மரபில் கூறப்பட்டு வந்தவை என்பது இங்கு முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டி யதாகும். அந்த அளவுக்குப் மகாபாரதக்கதைகள் மக்கள் மத்தி யில் செல்வாக்குப் பெற்றிருந்தன.

அ.கா. பெருமாள் என்னும் நாட்டார் வழக்கியல் அறிஞர் காலச்சுவடு வெளியீடாக 2012இல் பிரசுரித்துள்ள 'அர்ச்சு னனின் காதலிகள்– மகாபாரதம் பற்றிய நாட்டார் கதைகள்' என்ற நூலிலே 14 கதைகளின் சுருக்கம் தரப்பட்டுள்ளது. இவற்றில் புகழேந்திப் புலவரின் பெயரில் 11 கதைகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அவை அனைத்தும் நாட்டார் பாடல் வகைமையில் பாடப்பட்ட கதைப்பாடல்களாகும். இப் பாடல்கள் கிராமிய வழக்கில் திருவிழாக் காலங்களிலும் – பொழுது போக்குகாலங்களிலும் பாடப்பட்டு வருபவையாகும். படிக்கப்படிக்க இசைஇன்பம் – பொருளின்பங் கொண்டவை இப்பாடல்கள். உதாரணமாகத்திரௌபதி குறம் என்ற கதைப்பாட் டில், துரியோதனன் அவையில் பாஞ்சாலி துகிலுரியப்படும் நிலையில் அவள் கிருஷ்ணனை வேண்டிப்பாடுவதாகக் குறித்தி பாடுவதை நோக்கலாம்:

'ஐவருக்கும் உகந்தாதொரு அபிஷேக பத்தினி
ஆரணங்கு திரௌபதையை சபைதனில் இழுத்தீர்
பண்ணாத பங்கமெல்லாம் பண்ணி வைத்தார் சபையில்
கட்டழகி திரௌபதையாள் மனங்கலங்கி அப்போ
காத்தவர் மாயவரை கைதொழுது நின்றாள்
பத்தினியாள் திரௌபதைக்கு மாளாத் துகில்கள்
வளருதென்று சபைதனிலே மெச்சிநின்றார் பெரியோர்
பார்சபைகளில் விரித்தக் கூந்தலடி யம்மை
பதினெட்டாம் நாளையிலே படைபொருதும் சண்டை
நூற்றுவர் பூமுடியை நொறுங்கடித்த பின்பு
அன்றாட முடியும் ஐவருட சபதம்
பத்தினியாள் சாபத்தினால் பாரதப் போர் தன்னில்
பஞ்சவர் கையாலே மாண்டிடுவார் அம்மே'..

வாசகரின் தகவல்களுக்காகவும், இக்கதைப் பாடல்களைத் தேடிப்படித்து இன்பம் அடைய வேண்டும் என்பதற்காகவும் மகாபாரதக்கதை சார்ந்த இலக்கியங்களின் பெயர்கள் தரப்படு கின்றன: அல்லியரசாணிமாலை, புலேந்திரன் களவு மாலை, பவளக்கொடிமாலை, அபிமன்னன் சுந்தரி மாலை, ஆரவல்லி சூரவல்லி கதை,ஏணியேற்றம், பஞ்சபாண்டவர் வனவாசம், திரௌபதை குறம், திரௌபதை

அம்மானை, மின்னொளியாள் குறம், வித்துவான் குறம், பொன்னுருவி மசக்கை, கர்ணமகாராஜன் சண்டை, குருகுல மக்கள் கதைச் சுருக்கம், கஞ்சன் அம்மானை, அரவான் கதை என இவ்வரிசை நீள்கிறது.

கி.பி. 17 ஆம் நூற்றாண்டில் வில்லிபுத்தூரார்; சந்தம் நிறைந்த 4300 விருத்தப்பாக்களால் இலக்கிய நயம்பட பாரதம் என்ற நூலை இயற்றினார். அது வில்லிபுத்தூரார் பாரதம் என மக்களால் வழங்கிவருவதாயிற்று. வியாசரின் வடமொழி இதிகாசமாகியமகாபாரதத்திலுள்ள 18 பருவங்களில் முதல் 10 பருவங்களையே வில்லிபுத்தூரார் தமிழாக்கம் செய்தார். அவரது மகன் வரந்தருவார் என்பவர் ஏனைய 8 பருவங்களையும் தமிழாக்கம் செய்தார் என்பர். இவற்றை அடிப்படையாகக்கொண்டே பிற்காலத்துப்புலவர்கள் மகாபாரதக் கதையைத் தமிழில் எடுத்தாண்டு பல்வேறு இலக்கியங்களைப் படைக்கலாயினர்.

கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் மக்கள் மத்தியில் மகாபாரதம் கிராமியநடையில் கூத்தாகவும் வில்லிசையாகவும் கதாப் பிரச ங்கமாகவும் பிரபல்யம் பெற்றிருந்த நிலையில் அக்கதைகளை மேலும் விரிவாகப்பாடும் நோக்கோடு நல்லாப் பிள்ளை முருகப்பா உபாத்தியாயர் என்பவர் 14.400 பாடல்களில் பாரதத்தைத் தமிழில் பாடியுள்ளார்.தமிழிலுள்ள இலக்கியங் களில் எண்ணிக்கையில் மிகப் பெரிய இலக்கிய வடிவமாக இப் பாரதம் விளங்குவதும் பாரதம் பெற்றுள்ள செல்வாக்கினை உணர்த்துகிறது. இந்நூல் 1885 ஆம் ஆண்டில் அச்சில் வெளி வந்துள்ளது.

17 ஆம்18 ஆம் நூற்றாண்டுகளில் தமிழ் இலக்கிய மரபில் நாடக இலக்கியங்கள் பெரும்பாலும் இசைநாடகங்களாகவே தோற்றம் பெற்றன. அக்காலத்தில் பார்சி நாடக மரபும் தமிழ் நாட்டில் செல்வாக்குப் பெற்றிருந்தமையும் தமிழில் இசை நாடகங்கள் தோற்றம் பெறுவதற்குக் காரணமாயிற்று.18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இராமச்சந்திரக் கவிராயர் மகாபாரதத் திலுள்ள கதைகளைத் தழுவி சகுந்தலை விலாசம், தாருகா விலாசம், பாரத விலாசம் முதலிய இசைநாடகங்களை இயற்றினார். அதனைத் தொடர்ந்து பல இசை நாடகங்களும் விலாசம் என்ற இசைநாடகங்களும் தோற்றம் பெறலாயின. இந்நாடகங்கள்; கூத்துக்களாக ஆடப்பட்டன. நாட்டார் வழக் கிலேதெருக் கூத்துக்களாக இந்தியாவிலும்,வடமோடி– தென் மோடிக் கூத்துக்களாக ஈழத்திலும் பாரதக்கதை சார்ந்த கூத்துக் கள் பெரிதும் ஆடப்பட்டு வரலாயின. தமிழகத்திலும் ஈழத்திலும் வெட்டவெளிகளில் வட்டக்களரிகளில் இந்த இசை நாடகங்கள் ஆடப்பட்டன. 18 ஆம் நூற்றாண்டில் மகாபாரதத்தைத் தழுவி யனவாக கர்ணன் சண்டை, அருச்சுனன் தபசு, அல்லி நாடகம், பவளக்கொடி நாடகம், 18 ஆம் போர் முதலிய இசை நாடகங்கள் கூத்துக்களாக தமிழகத்திலும் ஈழத்திலும் ஆடப்படலாயின. அதே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலக்கட்டத்தில் தமிழகத்தில் பிரபலம் பெற்றிருந்த பார்ஸி நாடகமரபைத் தழுவி 'விலாசம்' என்ற இசை நாடக மரபு தமிழில் தோற்றம் பெற்றது, இவ்வகையில் வாளபிமன் விலாசம், தருமபுத்திரன் விலாசம், என்பன எழுதப்பட்டு மக்கள் மத்தியில் அவை பிரபல்யம் அடையலாயின.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் பழமையில் நல்லன வற்றைப் போற்றும் பண்புடையவர். பழமையிலிருந்து புதுமையை ஏற்படுத்தியவர். அவ்வகையில்மகாபாரதம் பாரதியாரை நன்கு கவர்ந்திருந்தது. மகாபாரதக் கதை கூறும் பாஞ்சாலியின் துன்பத்திற்காக உருகி, அவளுடைய வீர உணர்ச்சியை வணங்கி, அந்தக் கதையில் பாரதத் தாயின் துன் பத்தையும் வீரப் போராட்டத்தையும் உருவகமாகக் கண்டதன் விளைவே 'பாஞ்சாலி சபதம்' ஆகும். அத்தினாபுரத்தில் அரசச டியில் திரௌபதியை சூதாட்டத்தில் தருமர் பணயம் வைத்து இழக்கும்போது பாரதியாரின் நெஞ்சில் அனல் பறக்கிறது. பாரதத் தாயின் துயரத்தையே அக்கதை நெகிழ்ச்சியில் காட்டுகின்றமையை அவர் கண்டார். தாம் இயற்றிய பாஞ்ச ாலி சபதத்தில் அச்செயலின் கொடுமையைக் கண்டு பொங்கி எழுந்து பாடுகிறார்:

கேள்விப் பொருளினையே – புலைநாயின்முன்
வென்றிட வைப்பவர் போல்
நீள்விட்டப் பொன்மாளிகை – கட்டிப் பேயினை
நேர்ந்து குடியேற்றல்போல்
ஆள்விற்றுப் பொன் வாங்கியே – செய்த பூணை ஓர்
ஆந்தைக்குப் பூட்டுதல் போல்
கேள்விக்கு ஒருவர் இல்லை – உயிர்த் தேவியைக்
கீழ்மக்கட்கு ஆள் ஆக்கினான்..'

எனப் பொங்கி எழும் ஆவேசத்துடன் பாடுவர்.

'பொன்னை அவன் அந்தப் புரத்தினில் சேர்க்காமல்
நெட்டை மரங்கள் என நின்று புலம்பினார்
பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ'–

இவ்வாறு பழித்துக் கூறும் சொற்களில் அடிமைப்பட்டுக் கிடக் கும் பாரத நாட்டின் விடுதலையைப்பற்றிச் சிந்தியாது, வெறும் வாய்ப்பேச்சோடு வீணேகாலம் கழிக்கும் உணர்ச்சியற்ற மக்களைப் பழிக்கும் தன்மையை இதில் காணலாம். பாஞ்ச ாலி சபதம் மக்கள் மத்தியில் நன்கு செல்வாக்குப் பெற்ற ஒரு காவியமாகும். இந்திய சுதந்திரப் போராட்டத்திற்குத் தேவை யான பெண்விடுதலைக்கு இக்காவியம் பெரும் பங்களிப்புச் செய்தது. சகஸ்ரநாமம் நாடகக் குழுவினர் பாஞ்சாலி சபதத்தை இசைநாடகமாக நடித்துவந்தனர். பின்னர் வந்த சோமசுந்தரபாரதியாரும் பாரதக் கதையில்நாட்டம் கொணடு, மகாபாரதக்கதையைத் தழுவி, அருச்சனனுக்கு பாண்டியன் மகள் தூது அனுப்புவதாகக் கற்பனை செய்து 'மாரிய வாயில்' என்ற செய்யுள் நூலை எழுதியமை குறிப்பிடத்தக்கதாகும்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தமிழ் உரைநடை இலக்கியம் வளர்ச்சியடையத் தொடங்கியது. அவ்வளர்ச்சியின் பயனாக வசனநடையில் நாடகங்களும் தோற்றம் பெறலா யின. புனைகதை இலக்கிய மரபில் புகழ்பெற்ற பி. எஸ்.இராமையா என்பவர் மகாபாரதக்கதையைத்தழுவி - தேரோட்டி மகன் –என்ற நாடகத்தை எழுதினார். அந்நாடகம் பலதடவைகள் மேடை ஏற்றப்பட்டு மக்களின் நல்ல வரவேற்பையும் பெற்றிருந் தது. அந்நாடகத்தில் இடம் பெறும் ஒருகட்டத்தை நோக்கலாம்

'தேரோட்டிடி மகனாகவே கர்ணன் பலராலும் அறியப்படு கிறான். அரச மரபினன் என்பது குந்திக்கும் கண்ணனுக்குமே தெரியும். ஆனால், வற்புறுத்தலால் அவனை மணந்து கொண்ட மனைவிக்குத் தான், ஒரு சத்திரியனை மணந்து கொள்ளாமல் தேரோட்டியின் மகனை மணந்து கொண்டோனே என்ற குறை நெஞ்சில் இருந்து வந்திருக்கிறது. அதனால் கர்ணன் எவ்வளவோ சிறப்பெல்லாம் பெற்றிருந்தும், மனைவியின் அன்பையும் மதிப்பையும் பெற முடியாமல் வாடுகிறான். கௌரவர் சேனைத்தலைவனாகப் போர்க் களத்துக்குப் புறப்படும்போதும், ஆரத்தி எடுத்து, வாழ்த் துக் கூறி விடைகொடுக்க மனைவி முன்வரவில்லை. ஆனால், கர்ணன் போரில் மாண்ட பிறகு, உண்மையை அறிகிறாள். தன் புறக்கணிப்பை, சாதிச் செருக்கால் செய்த தவறை நினைந்து உருகிப் புலம்புகிறாள். இவ்வாறு கற்பனை குழைந்து நாட கத்தை மிகச் சுவையாக அமைத்துள்ளார். சாதிய வெறியைச் சாடும் இந் நாடகம் அக்காலக் கட்டத்தில் மிகவும் வரவேற்பைப் பெற்றுள்ளது'.

மக்களின் நாளாந்த வாழ்க்கையிலும் சமய வாழ்விலும் மகாபாரதக் கதைகள் பெரும் பங்கினைப் பெற்று வந்துள்ளன.



மகாபாரதக் கதா மாந்தர் மக்களின் புனைபெயர்களாக – வடுச்சொல்லும் பெயர்களாக, சிறப்புரைக்கும் பெயர்களாக வழங்கி வரலாயின. அருச்சுனன், தருமர், சகுனி முதலான கதாமாந்தரின் பெயர்களால் மக்கள் சிலரின் குணாதி சயங்களுக்கு அமைமைவாக அவர்கள் அழைக்கப்பட்டு வந்த மையை நோக்கலாம். கிராமியத் தாய்மாரின் தாலாட்டுகளிலும் அக்கதாபாத்திரங்கள் இடம் பெறலாயினர். தமிழகத்திலும் ஈழத்திலும் திரௌபதி அம்மன் வழிபாடு இடம் பெற்றமைக்கான சமூகக் காரணிகள் ஆராயப்பட வேண்டியவையாகும். கிழக் கிலங்கையில் பாண்டிருப்பு என்ற பழம்பதியிலே அமைந்துள்ள திரௌபதி அம்மன் ஆலயத்தில் ஆண்டு தோறும் 18 நாட்கள் சடங்கு நடைபெறும். அக்கோயிற் சடங்கு நாட்களில் பாரதக்கதை படிப்பு, அம்மானைப் படிப்பு,பாரதக்கதை தழுவிய நாட்டுக்கூத்து, வில்லிசை முதலான பல்வேறு வடிவங்களில் மகாபாரதக்கதை மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுள்ளது. கிழக்கிலங்கையில் பாரதக்கலாசாரம் நிலைத்திருப்பதாகவும் – யாழ்ப்பாணத்தில் கந்தபுராணக் கலாசாரம் நிலைத்துள்ளதாக வும் கூறப்படுவதும் இங்கு நோக்கத்தக்கது.

தமிழிலக்கிய மரபில் சிற்றிலக்கியங்களாகவும், இசை நாடகங்களாகவும், நாட்டுக்கூத்து, தெருக்கூத்து வடிவங்களாகவும், வசன நாடகங்களாகவும் மக்கள் மத்தி யில் செல்வாக்குப் பெற்றுறிருந்த மகாபாரதம், கலையுலக மாற்றங்களுக்கு ஏற்பத் திரைப்படங்களாகவும் மக்களிடம் உலாவந்துள்ளது. வீரஅபிமன்யு, மகாபாரதம், கர்ணன் முதலான திரைப்படங்கள் இவ்வகையில் குறிப்பிடத்தக் கவை. குறிப்பிடலாம். இவற்றுக்கும் மேலாக 2014 இல் விஜே தொலைக்காட்சியிலும் சண் தொலைக் காட்சியிலும் தொடர் நாடகமாக மகாபாரதம்; ஒளிபரப்பப்பட்டு இன்று உலகில் வாழும் மிகப் பெரும்பாலான மக்கள் மத்தியில் புத்துணர்வுடன் மகாபாரதக்கதை நினைவில் நிறுத்தப்பட்டுள்ளது என்பது மகா பாரதம் தமிழர் மத்தியில் பெற்றுள்ள அதியுன்னத இடத்தைக் கோடிட்டுக் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொண்டாடப்பட வேண்டியதே காதலர்கள் தினம்...!

பரத்

காதலர் தினம் என்றவுடன் பெரியவர் முகத்தை சுழிப்ப தும், பத்திரிக்கைகளில் சில வேண்டாத விவகாரம் என்று தாக்கி எழுதுவதும், வழக்கமாக போய்விட்டது. இப்போது பெரிதாக பேசப்படுகின்ற காதலர் தினம், வேலன் டைன் என்ற பெயருடைய இரு கிறஸ்தவ தியாகிகளின் நினைவாக கொண்டாடப்படுகிறது. உலக முழுவதும் தங்கள் அன்பை தெரிவித்துக் கொள்ளும் நாளாக இது இருப்பதினால் இது, அன்பர்கள் நாள் என்றும் அழைக்கப்படு கிறது. மக்களிடையில் பிப்ரவரி 14 அன்று கொண்டாடப்படுகிறது.

காதலர்கள் தவிர பலரும் தங்கள் அன்பை தெரிவித்துக் கொள்ளும் நாளாகவும் இது இருப்பதால் அன்பர்கள் நாள் என்றும் அழைக்கப்படுகிறது. தோற்றத்தில் இது மேற்கத்திய உலகக் கொண்டாட்டமாக இருந்தாலும், அண்மைக் காலங்களில் உலகெங்கும் இந்நாளை கொண்டாடும் போக்கு இளைஞர்களிடையே கூடி வருகிறது.

நீர் பூத்த நெருப் பாய் எப்போதும் இருந்து கொண்டே இருக்கிறது. லெலா - மஜ்னு, அம்பிகாபதி - அமராவதி, முதலானவர்கள் காதல் கொண்டிருக்கவில்லை என்றால் அவர்களின் காதல் சரித்திரம் இப்போது எப்பது வந்தது.

காதல் என்பது ஒரு கன்னிகையும் ஒரு காளையும் மட்டுமே மேற்கொள்வது அல்ல, அன்பு கொண்டோர் இருவர், ஒருவர் மீது ஒருவர் வைக்கும் பாசமும் காதல் என்றே அழைக்கப்படும், காலத்தை கடந்து முதுமையை ஏய்துவிட்ட வயோதிக்க தம்பதியர்க்கும் உரித்தானதே காதல்.

தெய்வத்தின் மேல் பக்தை கொண்டது, புறவலர் மேல் பாவலர் கொண்டது, மக்களின் மேல் மன்னன் கொண்டது, எல்லாமும் காதல் தான். லோகோ சாமஸ்தா, சுக்கினோ பவன்து என்ற வட மொழி வரிகள் எல்லோரும் இன்புற்றுறிருக்க வேண்டு மென்பதை வழியுறுத்துகின்றது.

மக்கள் இன்புற்றிருக்க வேண்டுவது பொன்னும் பொருளும் மட்டுமல்ல: அன்பும் அறனும், அவ்விரண்டையும் பின்னுகின்ற காதலும் தான். அன்பின் மறுபெயர் தான் காதல் என்று எடுத்துக் கொண்டால், காதலை கொச்சைப்படுத்தும் மக்களுக்கே அச்சம் வந்துவிடும்.

காதலை முனிபுங்கவர் களும் வெறுக்கவில்லை, நான்கு வேதங் களும் தடுக்கவில்லை. எனவே அனபின் அடையாளமாய் காதலை எடுத்துக் கொள்வோம், தூய காதலை அங்கீகரிப்போம். காதல் ஒரு தனி மனிதனுக்கோ, ஒரு நாட்டிற்கோ பண்பாட்டு சின்னமாய் விளங்கவில்லை, ஆனால், உலக உள்ளங்களில் பாரம்பரிய சின்னமாய் விளங் குவதும் காதல்தான். அதே சமயத்தில் கன்னியரும் காளையரும் வழிவழியாய் வந்த பாரத காதல் பரம்பரியத்தை கொஞ்சமும் மறக்கலாகாது. கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்பதே, நல்லொழுக்க காதலுக்கு புறம்பான விஷயங்களாகும் என்பதை யும் நினைவில் கொள்ள வேண்டும்.

காதலர் தினத்தைக் குறித்து சில பெற்றோர் களிடம் கேட்ட போது, காதலர் தினம் என்ற பெயரில் பல இடங்களில் தவறுதலாக நடக்கின்றனர். காதல் என்ற பெயரில் எல்லாவற்றிலும் அவசரப்படுகிறார், இதனால் பலரின் வாழ்க்கை கேள்விக்குறியாகின்றது

கல்லூரி மாணவர்களிடம் கேட்டபோது, ஒரு காலகட்டத்திற்கு மேல் எங்களுடைய வாழ்வினை அமைத்துக்கொண்டு கடைசி வரை வாழும் போது, மனதுக்கு விருப்பமில்லா மல் மகிழ்ச்சியாக வாழ முடியாது, எங்களுக்கேற்ற துணையை நாங்கள் கண்டி, எங்களின் மகிழ்ச்சியையும், அன்பையும் வெளிகாட்ட ஒரு தினம் இருப்பது மகிழ்ச்சி யளிக்கிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாலி கசினோவில் காலி

பெண்ணுக்குஒருவேலியாதாலி
புண்சுமக்கும் பெண்களுக்கு
தாலிஒருகேலியா?
பால் சுனைத்தமருதத்தில்
பாலைவரட்டிவிட
கால் கடுக்கக்; கழைபிடுங்கிக்
காணாதுசோறுபோட
காலனியவாதிகளின்
ஏமாற்றில் வீழ்ந்தவர்
பாலகர்க்குப் பால் புகட்ட
லயத்தவர்க்கு ஏது வழி?
பிள்ளைகளைக் கொன்று
பாய்ந்திடுவாள் நல்லதங்காள்
அவள்கழுத்தில் தானில்லைத் தாலி?
புணீள்ளைக்குப் பாலில்லை
பெருங்கற்கள் பால் உறிஞ்சும்
பாலுக்குவிலைபேசத்
தாலியில்லைஅவளிடம்.
பண்டைத் தமிழனுக்குத் தாலி!
அதுவீரத்தின் அடையாளம்.
இன்றையதமிழினிக்கு
அதுஒருகாவல் நாய்.
புனிதம் பேணத் தாலி
கம்பனால் வந்ததாதாலி
சங்கமரபிலோஅல்ல
அதுகசினோவில் காலி!
அவன் வேலிமேய்ந்துவர
அவள்செய்வாள் சுமங்கலிப் பூசை
தாலிஅறுத்தவன் திரிலோகசஞ்சாரி
தாலிஅறுந்தவள் மூழியலங்காரி
விதவை! இதுஅவளுக்குச் சமூகம் இட்டபெயர்
இதுஅவனுக்கு இல்லை!
அவள் அமங்கலி
அவன் மங்களமானவன்!
கீச்சியில் அழகுபார்த்தமரபிற்கு
இன்றுதாலிஒருகேலியா?

-அமளி-



# தவறான பழமொழிகளும் அதன் சரியான பழமொழிகளும்

01. ஆயிரம் பேரைக் கொன்றவன் அரைவைத்தியன்.
ஆயிரம் வேரைக்கொண்டவன் அரைவைத்தியன்.

02. கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன்.
கல்லான் ஆனாலும் கணவன் புல்லான் ஆனாலும் புருசன்.

03. கல்லைக் கண்டால் நாயைக் காணோம் நாயைக் கண்டால் கல்லைக் காணோம்
கல்லாய்க் கண்டால் நாயைக் காணோம். நாயாய்க் கண்டால் கல்லைக் காணோம்

04. வேரோடிவிளாத்திமுளைத்தாலும் தாய்வழிதப்பாது.
வேரடிவிலத்திமுளைத்தாலும்தாய்வழிதப்பாது.

05. அறப்படிச்ச மூஞ்சூறு கஞ்சிப்பானைக்குள் விழுந்ததாம்.
அறவடிச்சமுன்சோறுகஞ்சிப்பானைக்குள் விழுந்ததாம்.

06. மண்குதிரையைநம்பிஆற்றில் இறங்காதே.
மண் குதிரைநம்பிஆற்றில் இறங்காதே.

07. சேலைகட்டியமாதரைநம்பாதே.
சேல் அகற்றிறமாதரைநம்பாதே.

08. கைப்புண்ணுக்குகண்ணாடிதேவையில்லை.
கைப்பூணுக்குகண்ணாடிதேவையில்லை.

09. முட்டையில் மயிர் பிடுங்குவது.
மொட்டையில் மயிர் பிடுங்குவது.

10. குண்டி கூழுக்குஅழுகிதுகொண்டைபூவிற்குஅழுகிது.
உண்டி கூழுக்குஅழுகிதுகொண்டைபூவிற்குஅழுகிது.

11. கழுதைகெட்டால் குட்டிச்சுவர்.
கழுதைக்கட்டால் குட்டிச்சுவர்.

12. கழுதைக்குவாழ்க்கைப்பட்டால் உதைக்குஅஞ்சலாமா?.
கழுதைக்கும் வாழ்க்கை ஏற்பட்டால் ஊசிக்குஅஞ்சலாமா?.

13. செத்தும் கெடுத்தான் சீதக்காதி.
செத்தும் கொடுத்தான் சீதக்காதி.

14. ஆனைக்குஒருகாலம் பூனைக்குஒருகாலம்.
ஆ நெய்க்குஒருகாலம் பூ நெய்க்குஒருகாலம்.

ஆக்கம்; மார்க்கம்.சந்திரன்
416-844-7453



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FREE ! Real Estate Classess




## Successful Real Estate Office With Over 300 Salespeople

TOP 5 HOMELIFE OFFICE IN CANADA 2013

TOP 5 HOMELIFE OFFICE IN CANADA 2012

TOP 6 HOMELIFE OFFICE IN CANADA 2011

TOP 7 HOMELIFE OFFICE IN CANADA 2010

## International Award Winning Office

### Top 5th HomeLife Office In Canada-2013

### Over 2000 Sq.Ft Office Located @ Markham Rd & Steeles Ave E

- 90:10 Commission Split.
- Over 300 Salespersons.
- Top 4th Listing Office in Canada
- Weekly Training, Full Services Office
- 24 Hrs Access to the Office
- Office Open 7 Days/ Week

HOMELIFE HIGHER STANDARDS



HOMELIFE /FUTURE REALTY INC., Brokerage
205 -7 Eastvale Dr., Markham, Ontario, L3S 4N7
Bus: 905.201.9977 | 416.264.0101

*Based on TREB data: 2010. (does not include independent or other franchisors). ©2010 HomeLife Realty Services Inc. All Rights Reserved.Each Office is Independently Owned and Operated. Not intended to solicit Agents or Brokers currently under contract.


INDEPENDENTLY OWNED AND OPERATED

**Selva Vettyvel**
*Broker of Record*
**Tel:416-568-4301**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நளவெண்பா



## - வித்வான் க.ஞானரெத்தினம்

தமிழ் இலக்கிய வரலாற்றுக் காலத்தில் வாழ்ந்து மறைந்த ஆர்வலர்கள் புலவர்கள், அரசர்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு சூற்றிய அரும் பொரும் தொண்டுகள் மறக்க முடியாதவை. இன்றும் அவை தமிழ் மக்களின் பண்பாடு, கலாச்சாரம், போன்றவற்றின் மகத்தான் சிறப்பைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும் ஆவணங்களாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றன என்று கூறுவதில் எந்த ஐயமும் இல்லை. எனவே தமிழ் நூலாக்க மூலம் பல இலக்கிய நூல்களின் சிறப்பையும் நயத்தையும் எடுத்தியம்பும் நோக்குடன் தொடர்ந்து இலக்கிய வரலாறு என்னும் தலைப்பில் தொடர்ந்து வழங்கப்படுகின்றது.

இந்த அடிப்படையில் தரப்படுவது நளவெண்பா என்னும் நூல் பற்றிய வரலாறு ஆகும். நளமகாஇராச ஆணையிட்டு வெண்பா என்னும் பாவினத்தில் ஆக்கப்பட்ட நூல் தான் நள வெண்பா ஆகும். நளன் + வெண்பா - நளவெண்பா ஆகும்.

தமிழ் இலக்கியத்திற் காணப்படும் பல இலக்கிய நூல் களுக்கு, ஆக்கங்களுக்கு மூல நூல்கள் உண்டு. அந்த நியதியின்படி வடமொழியில் திர்ஹர்ஷ கவி என்பவராற் செய்யப்பட்ட நைஷதமாக வியாச முனிவர் தருமனுக்கு இக் கதையைக் கூறினார் என்றொரு வரலாறு உண்டு. இதன் மூலம் நளன் பாண்டவருக்கு முந்தியவன் என்னும் வரலாறு பெறப்படுகின்றது. இக்கதைத் தொகுப்பைத்தான் தமிழில் புகழேந்திப் புலவர் வெண்பா வடிவத்தில் நளவெண்பா (நளன் பற்றிய வெண்பா) என்று இயற்றி இலக்கிய உல கிற்கு வழங்கினார் என்பது வரலாறு.



இந்நூலில் சிறப்புப்பாயிரம் ஆறு வெண்பாக்கள் சுயம்பர காண்டம் நூற்று எழுபத்தொரு பாடல்கள் கவி தொடர் காண்டம் நூற்று ஐம்பது நான்கு பாடல்கள் கவி எங்கு காண்டம் தொண்ணூற்று ஏழு பாடல்கள் ஆகியவற்றை அடக்கிய ஒரு சிறந்த நூலாகத் திகழ்கின்றது. இன்றைய இலக்கிய வரலாற்றில் இந்த நூலைப் பற்றிய ஆய்வினை நோக்குவோம். முதலில் சுயம்வர காண்டம் என்னும் பகுதியின் பொருளடக்கம் என்ன என்பதைப் பார்ப்போம். இப்பகுதியின் சூழ்நிலை பின்வருமாறு அமைத்துள்ளது.

தருமன் நாடாழ்ந்து, காடு சென்று வாழ்ந்ததும் அங்கு மன்னர் பலரும், வியாச முனிவரும் வந்து தருமனைக் கண்டு வினவியதும், தருமன் மனம் வருந்தியதன் காரணம் கூறியதும், சூதாடல் அரசர்க்கியன்பு என்று தருமனுக்கு வியாசர் நளசரிதம் கூறுமிடத்து நிபத நாடு மாவந்த நகரம், அந்நகர மாடங்கள், மாந்தர் அந்நாட்டை ஆண்ட மன்னன் நளனின் சறிப்பும், நளன் பூங்கா சென்று அன்னத்தைக் கண்டு அதனைப் பற்றியதும், அன்னம் நளனுக்குத் தமயந்தியின் சிறப்புக் கூறியதும், நளன் தமயந்தியின் மேல் காதல் கொண்டானெனக கண்டு தமயந்தியிடம் சென்று, நளனின் நிலையை உணர்த்தியதும், தமயந்தியின் காதலை நளனுக்கு வந்து தெரிவித்ததும், தமயந்தியின் மனநிலையைத் தோழியர் அவள் தாய் தந்தைக்கறிவித்ததும், சுயம்வரம் நடத்த அறிவித்ததும், சுயம்வரத்திற்கு அரசர் கூட்டமும் நளன் சுயம்வரச் செய்தி கேட்டு குண்டினபுரத்திற்கு விரைந்ததும், நாரதர் தேவ உலகு சென்று சுயம்வரம் செய்தியை இந்திரன் முதலிய தேவர் நால்வருக்கு உரைக்க அவர்கள் குண்டினபுரம் வருகையில் நளன் வழிபட்டதும் இந்திர நளனை தமயந்தியிடம் தூதனுமிபயதும், நளன் தமயந்தியிடம் யாரும் காணாது தூது சென்று திரும்பியதும் நளன் தேவர்களுடன் சுயம்வர மண்டபம் சென்றதும் தமயந்திக்கு ஏற்பட்ட அந்திப் பொழுதின் மயக்கமும் நிலவு செய்த கொடுமையும், சுயம்வர மண்டபத்தில் சேடியர் தமயந்திக்கு வந்திருந்த மன்னர் பற்றிக் கூறியதும் தேவர் நளன் உருக்கொண்டு வந்திருததில் கண்டு திகைத்துப் பின் நளனுக்கே மாலை சூட்டியதும் விண்ணவர், மன்னவர் வெட்கமும் திரும்பிச் சென்ற இந்திரன் வழியிற் கவியைக் கண்டு நளன் தம்பதியனர்கள். சென்ற இந்திரன் வழியிற் கவியைக் கண்டு நளன் தம்பதியினரைப் பிரித்திடச் சபதமேற்றதும் நள தமயந்தியர் முதல் இரவு இன்ப விளையாடல்களும் இப்பகுதியிற் கூறப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவித்தளிர்

## புதிய புத்தாண்டே புலர்ந்து நீ வருக!

மாதாகோவில் மணியடிக்க
மண்ணில் மாந்தர் மகிழ்ந்துபாட
காலைக்கதிரவன் கண் விழிக்க
காக்காகுருவிகளித்துக் கூட
வெண்பனி பொழிந்து விண்ணை மறைக்க
விண்ணவர் வந்து வாழ்த்து கூற
புதிய புத்தாண்டே புலர்ந்து நீ வருக

தங்கத் தாமரை தன்முகம் காட்ட
தவிக்கும் வண்டுகள் தாவி வந்தாட
விண்ணில் விண்மீன் வித்தைகள் காட்ட
வெண்ணிலா வந்து விபரம் கேட்க
கத்துங் கருங்கடல் கரையிலே கரைய
கருங் குழல் கன்னியர் கடுகி விரைய
புதிய புத்தாண்டே புலர்ந்து நீ வருக

பஞ்சம் பட்டினி பசி பறந்திட
பாரில் பகலவன் பட்டொளி காட்ட
துன்பம் துயரம் துக்கம் தொலைய
தொல்லைகள்
தொலைந்துசுகங்கள் விரைய
காடுகள் விளைந்து கடும் பசி
போக்க
நாடுகள் ;தோறும் நல்லுறவு ஓங்க
புதிய புத்தாண்டே புலர்ந்து நீ வருக

போர்கள் ஓய்ந்து பொறாமைகள் களைந்து
புதியபூமிபுதிதாய்ப்படைத்து
புதுமைகள் செய்து புண்ணியம் தேடி
நண்பர்கள் நாடி நல்லுறவு கூடி
நானிலம் மகிழ நலமாய் வாழ
புதிய புத்தாண்டே புலர்ந்து நீ வருக

ஆக்கம்:
**மார்க்கம். சந்திரன்**



## தை மகளே பிறந்து வா......

தைமகளேபிறந்துவாதைத் திருநாள் கொண்டாட
புதுப் புதிரெடுத்துபுனிதநீராடிபுத்தாடைஅணிந்து
முற்றம் முழுவதும் முத்தான கோலமிட்டு
புதுப்பானை வைத்து புத்தரிசியிட்டு புதுப்பால் விட்டு
பச்சைப்பயறுடன் பசுநெய்யும் கலந்துபதமாய்ப்;
பொங்கலிட

தைமகளேபிறந்துவா.......
பாங்காக பசும்பால் பொங்கிச் சரிக்க
வெள்ளை வேட்டியுடன் தலைப் பாகை தலையில் கட்டி
பக்குவமாய்.பச்சரிசிபதமாகபானையிட்டு
இதமான பொங்கல் இனிதாக பொங்கிட

தை மகளே பிறந்து வா......
சமமாக சர்க்கரையும் சத்தான கசு
க்கொட்டையும்
முந்திரிப்பருப்பும் முற்றாத
தேங்காயும்
கற்கண்டும் தேனும் கச்சிதமாச் சே
ர்த்து
ஏர் பிடித்த உழவனை இதயத்தில் ஏற்றி

தை மகளே பிறந்து வா
முற்றியகரும்பும் முக்கனியும் தயிரும்
புதமான இளநீரும் பலவகை மலர்களும்
பக்திப்பாட்டுடன் பட்டாசுவெடியுடன்
பகலவனுக்குபடைத்துபகிர்ந்துண்டுநாம் வாழ

தைமகளேபிறந்துவா.......

Sunflowers
PEGASUS Furniture Imports

Margie Vincent
President

905.201.0007
Margievdp@gmail.com

40 New Delhi Drive #58
Markham, ON, L3S 0B5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# To Buy or Sell...

**HomeLife/Galaxy Real Estate Ltd.**
Independently owned & operated
**880 Ellesmere road, Suite 204**
**Toronto, ON MIP 2W6**

HOMELIFE
HIGHER STANDARDS

*Call **Ravi** for information on homes available in area of your choice..*

***Friendly, Confidential & Professional Service***

**RAVI THARMALINGAM**

**Sales Representative**

**Dir: 416-319-7507**
**Bus: 416-284-5555**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளிரில் படர்ந்த நிகழ்வுகள்








காலாண்டு தளிர் சஞ்சிகையின் வெளியீடு கடந்த 2014ல் மார்க்கம் யேசு மாறாதவர் திருச்சபையில் இடம் பெற்றபோது கலந்து கொண்டவர்களின் ஒரு சிலரை படங்களில் காணலாம்.





தளிர் சஞ்சிகையின் ஆண்டு நிறைவினை முன்னிட்டு இடம் பெற்ற இசை நடன அறிவியல் போட்டியில் பங்கு பற்றிய மாணவர்களையும் ஆசிரியர்களையும், தளிர் சஞ்சிகையின் உறுப்பினர்களையும் படங்களில் காணலாம்...



## தேடிப்பார் வணிக தகவல் களஞ்சியத்தின் 5ஆம் ஆண்டு வணிக கையேடு வெளியீட்டு விழா

28 ஜனவரி 2015 மாலை 8 மணியளவில், கனடிய தமிழ் ஊடகவியலாளர்கள் முன்னிலையில் வெளியிடப்பட்டது. ஸ்காபுரோவில் அமைந்துள்ள JC Banquet ஹாலில் விருந்துபசாரத்துடன் திரு. கிருபா தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.



#1 CANADA SEARCH ENGINE
தேடிப்பார்.கொம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளிரில் படர்ந்த நிகழ்வுகள்















biztha.com, ekuruvi.com
ஆதரவில் தை மாதம் 11ம் திகதி
இடம் பெற்ற வர்த்தக விருது
வழங்கும் விழா
திரு N. நவஜீவன் தலைமையில்
ஸ்காபுரோவில் மிக சிறப்பாக
இடம் பெற்றன நட்புக்காக
தளிரன்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளிரில் படர்ந்த நிகழ்வுகள்...

## AWARD FUNCTION OF HOMELIFE FUTURE - 2015























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Pleasant Banquet Hall



## For 100 people

Your choice of 3 main courses
2 Meat curries & 3 Veg curries
Your choice of 3 short eats
Coffee, tea & Mango juice.
including birthday cake
Video, Photo & DJ
2 games for children & 1 game for adults

## all Inlcuded only for $2500

**Weddings, Birthdays, Puberty Ceremonies, Anniversaries, Banquets, Dances, Corporate Events, Meetings and Celebrations**

7200 Markham Road, Unit 2A & B, (Markham & Denison), Markham, ON, L3S 3R7

tel. **647.704.9037**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Canadian Tamils' Chamber of Commerce

CTCC

## Board of Directors 2014 / 2015





**Sinnadurai Jeyakumar**
President



**Moon Mahalingam**
Vice President - Community Relations



**Ajith Sabaratnam**
Executive Vice President



**Ravi Kanagasabey**
Vice President - Internal Affairs



**Sritharan Thurairajah**
Past President in 2013



**Dilani Gunarajah**
Vice President - Finance



**Suren Navaratnarajah**
Director



**Sujan Shan**
Director



**Venu Puvirasan**
Vice President - Membership



**Shalini Sathya**
Director






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மணி : அய்யா, உங்களை எங்கோ பார்த்த மாதிரி இருக்கின்றது? பேஸ்புக்-ல இருக்கீங்களா?
ரவி : இல்லை
மணி : அப்போ வாட்ஸ்-அப், டுவிட்டர்-ல இருக்கீங்களா?
ரவி: 5 வருசமா நான் உங்க வீட்டுல வாடகைக்கு குடியிருக்கேன்.
மணி: !?!?!



நெப்போலியன் :- என்னுடைய அகராதியில் முடியாது என்கின்ற வார்த்தையே கிடையாது
சர்தார்ஜி :- இப்போ சொல்லி என்ன பிரயோசனம், வாங்கும்போதே பார்த்து வாங்கியிருக்கணும்

# கிகி.... கிகி...

கணவன்: பத்துப் பவுன் செயின் வேணும்ன்னு கேக்குறியே? கழுத்துல போட்டுட்டா கஷ்டமா இருக்குமே?
மனைவி: ஒரு கஷ்டமும் இல்லே. வாங்கித் தாங்க!
கணவன்: உனக்கு இல்லை. பாவம் செயின் பறிக்கிறவனுக்கு





கண்மருத்துவர்: உங்களுக்கு என்ன பிரச்சினை?
நோயாளி: எனக்கு தூரப் பார்வை சரியில்லை!
மருத்துவர்: இப்படி என் கூட வாங்க சோதித்து பாத்திடலாம்.
நோயாளி : ஏன்என்னை வெளியே இழுத்துட்டு போறீங்க?
மருத்துவர்: அங்க மேல வானத்தை பாருங்க என்ன தெரியுது?
நோயாளி: முழு நிலா தெரியுது!
மருத்துவர்: இதவிட எது தூரமாஇருக்கு. அது உங்களுக்கு தெரியலைன்னு கவலை படுறீங்க?!

ஒருவர்: டாக்டர், நான் தெரியாம சாவியை முழுங்கிட்டேன்
டாக்டர்: எப்போ நடந்தது?
ஒருவர்: அது ஆச்சு மூணு மாசம்
டாக்டர் கோபமாக: இத்தனை நாள் என்ன செஞ்சீங்க?
ஒருவர்: டூப்ளிகேட் சாவி உபயோகபடுத்தினேன், இப்போ அதுவும் தொலைஞ்சி போச்சு





ஒரு நாளாவது ஒன்பது மணிக்கெல்லாம் ஆபிஸ் போயிடலாம்னு பார்த்தா முடியறதில்ல.
ஏன் பஸ் கிடைக்கமாட்டேங்குதா?
ஊகூம்... வேலையே கிடைக்கமாட்டேங்குது

நான் : சார் ஐ டிக்கெட் எவ்லோ ?
டிக்கெட் கவுன்ட்டர்: 150 ருபாய் தம்பி
நான் : ஓ.. ஆம்பளைக்கு எவளோ ?
டிக்கெட் கவுன்ட்டர் : ஆம்பளை பொம்பளை குழந்தைங்க எல்லாருக்குமே 150 ருபா தான் தம்பி!



மன்னர் தலைகால் புரியாத சந்தோஷத்தில் குதிக்கிறாரே...
என்னவாம்?
எதிரி நாட்டு அரசர் போர் வெறுப்போர் கூட்டணியில் இணைய சம்மதமா?ன்னு கேட்டு ஓலை அனுப்பியுள்ளாராம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரபுத் திங்கள்

சபா. அருள்சுப்பிரமணியம். தமிழ்ப்பூங்கா

ஒவ்வொரு ஆண்டின் முதல் மாதத்தையும்; கனடாவில் நாமெல்லாம் மரபுத்திங்களாகக் கடைப்பிடிக்கிறோம். தமிழரின் மரபுசார்ந்த உண்மைகளையும், பெருமைகளையும் நம்மைச் சுற்றியுள்ளவர்கள் அறியச் செய்வதே இந்த மரபுத் திங்களின் நோக்கமாகும். பல்லாயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த தமிழ்மொழியை, அதன் பழம்பெரும் இலக்கியங்களை, வரலாற்றைப் பிறர் அறியச் செய்வதன் மூலம் எம்மைப் பற்றிய ஒரு உயர்வான பதிவை நாம் அவர்கள் மத்தியில் ஏற்படுத்தலாம்.

இதனால் ஆண்ட பரம்பரை ஒன்று மீண்டும் ஆள நினைப்பதில் நியாயம் உண்டு என்பதை உலகுக்கு எடுத்துக் கூற முனைவோம். பிறமொழியிற் கல்வி கற்கும் நாம், பிறமொழிச் சூழலில் வாழும் நாம், எமது பெருமைகளையும், எம்பக்க நியாயங்களையும் எடுத்துக் கூற இதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்துவோம். பல்லினகுமுகாயத்தில் வாழும் நாம் தமிழர் மரபு சார்ந்த உண்மைகளை அறிந்து எம்மைச் சுற்றியுள்ள ஏனைய இனத்தவர்களுக்கும் அவற்றை எடுத்துரைப்போம்.

எமது உரிமைப் போராட்டத்தை உலகம் அங்கீகரிக்க வேண்டும் ஆதரவு தர வேண்டும் என்று எதிர்பார்க்கும் நாம் எமது நியாயங்களை ஆதாரபூர்வமாக அடுத்தவர் ஏற்கும் வகையில் முன் வைக்கும் நிலையில் இருக்க வேண்டும். அதற்கு அடியெடுத்துக் கொடுப்பதே இந்தமரபுத்திங்கள் கொண்டாட்டமாகும். இதை உணர்ந்து உலகெங்கும் பரந்து வாழும் இளையோராகிய நாம் எமது வரலாற்றை அறிந்து உண்மைகளை வெளிக்கொணர்ந்து எமது உரிமைகளைப் பெறுவதில் உள்ள நியாயத்தை அனைவரும் உணர வைப்போம்!

தமிழ் வாழ்ந்தாலே தமிழராக எம்மால் வாழ முடியும்.

## மரபுத் திங்களும் மாணவரும்

இன்றைய இளையோரே நாளைய பெரியோர் என்பது நாடறிந்த உண்மை. ஆம்! அந்த வகையில் தமிழர் எதிர்காலத்தை முடிவு செய்யப் போகிறவர்களும் எம்போன்ற இளையோரே. எனவே இளையோராகிய நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் எம்மைப் பலப்படுத்துவதாக இருக்க வேண்டும்.

அதற்கு எம்மிடம் நம்பிக்கை வளர வேண்டும். ஆம்! தளராத நம்பிக்கை சுடர் விட்டு ஓங்க வேண்டும்.




'தன்னை நம்பாதவனால் பிறரை நம்ப முடியாது' என்பது எமது மரபு சார்ந்த நம்பிக்கை. ஆம்! பிறரிடம் எம்மைப் பற்றி, எமது மரபைப் பற்றிக் கூற முனையும் நாம் முதலில் எம்மைப்பற்றித் தெரிந்திருக்க வேண் டும். அறிந்திருக்க வேண்டும்.

**மாணவர், பாடசாலை மட்டத்தில் நடக்கும் மரபுத் திங்கள் நிகழ்வின் போது பேசக் கூடிய சில பேச்சுகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. பயன்பெறுக.**

அந்த அறிவை இளையோர் மத்தியில் ஏற்படுத்த முனைவதே இந்த மரபுத் திங்களாகும். வெறும் வாய்ப் பேச்சு வீரராய் இல்லாமல் செயல் வீரராய் நம்மைநாம் ஆக்கிக் கொள்ளும் போதுதான் ஆக்கபூர்வமான பெறுபேற்றைப் பெற்றுக் கொள்ள முடியும். இன்று உலகெல்லாம் பரந்து வாழும் தமிழனுக்குத் தனக்கென்று ஒதுங்க ஒரு நிலமில்லை, ஒரு நாடில்லை. அகதியென்றால் தமிழன் என்று பேசும் அளவிற்கு அவன் நிலை மலினப்பட்டுவிட்டது.

இதை நம்மைத் தவிர வேறு யாரால் மாற்ற முடியும்? மாற்றப் புறப்படும் நாம் நம்மைத் தெரிந்தவர்களாய், நம்மை அறிந்தவர்களாய் இருக்க வேண்டாமா? அதற்கான அத்திவாரத்தைப் போடமுனைவதே இந்த மரபுத்திங்களாகும். எனவே இளையோராகியநாம் எமது மரபின் பெருமைகளை எமது பெற்றோரிடமும், மூத்தோரிடமும், ஆசிரியர்களிடமும் கேட்டுத் தெரிந்து கொள்வோம். தன்னம்பிக்கையை வளர்த்து, நம் மரபை அறிந்து, நம் பெருமைகளை நிலை நாட்டுவோம்!

## மரபுத் திங்களில் மாணவராகியநாம் என்னசெய்யலாம்?

'தமிழின் வாழ்வே தமிழன் வாழ்வு' என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். தமிழ் அழிந்தால் தமிழனும் அழிந்து விடுவான். எனவே நாம் தமிழராக வாழ வேண்டுமானால் நாம் தமிழ் தெரிந்தவர்களாக மாற வேண்டும். இல்லையேல் தமிழ் தெரியாத் தமிழராகவே மாறி, எம் அடையாளத்தையே தொலைத்தவர்களாக மாறி விடுவோம்.

தமிழறியாத் தமிழராக இருப்பது வெட்கம் என்பதை நாம் நெஞ்சார உணர வேண்டும். உணர்வதோடு நின்று விடாது உளம் விரும்பித் தமிழைக் கற்க முன் வர வேண்டும்.

நம்மில் இன்று எத்தனை பேர் தமிழிற் கூறுவதை விளங்கிக் கொள்பவர்களாக இருக்கிறோம்? எத்தனை பேர் தமிழைத் தொடர்பாடல் மொழியாகப் பயன்படுத்து கிறோம்? நம்மில் எத்தனை பேர் நமது பாட்டன் பாட்டியுடன் தமிழிற் பேசுகிறோம்? நம்மில் எத்தனை பேருக்குத் தமிழை எழுத வாசிக்கத் தெரியும்?

இவற்றிற்கான விடையைத் தேடினால் அது விரும்பத் தகாததாகவே இருக்கும். ஏன் இந்த அவலம்? இதைமாற்ற முடியாதா...? முடியும்!

'தமிழ் படிப்பதால் எனக்கென்ன இலாபம்?' என்று வணிக நோக்குடன் சிந்திக்காது என் தாய்மொழியை நான் அறிந்திருக்க வேண்டும் என்று மனதார ஏற்கும் நிலைஉருவாகவேண்டும். பெரியவர்கள் இதை உருவாக்க முனைய வேண்டும். ஆசிரியர்களும், அமைப்புகளும் இதற்கு உதவ முன்வர வேண்டும்.

வேற்றுமொழி தன்னிற் பல வித்தை
கற்றாலும் – எங்கள்
வீட்டுமொழி தமிழதென்று விரும்பிப்
படிப்போம்!

தமிழைப் படித்துத், தமிழை அறிந்து தமிழராய் வாழ்வோம்!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MARKHAM MCNICOLL URGENT CARE CENTRE

## மார்க்கம் மக்நிக்கல் விரைவு மருத்துவ நடுவம்.

**416-609-3333**

- **WALK - IN CLINIC & URGENT CARE**
  **Medical Card (OHIP)** ஏற்றுக் கொள்ளப்படும்.
- **X Ray, Ultra Sound, ECG,** ஆய்வுகூடவசதி, மருந்தகம், **Physiotherapy**, மற்றும் பல மருத்துவ சேவை ஒரே கட்டடத்தில்
- எல்லா நாட்களும் (விடுமுறை உட்பட) திறக்கப்படும்.
- திங்கள் - வெள்ளி : காலை 8 மணி - இரவு 9 மணி
  சனி, ஞாயிறு விடுமுறை : காலை 9 மணி - மாலை 4 மணி
- **Booking**, குடும்ப மருத்துவரின் **Referral** தேவையில்லை.

## விரைவு மருத்துவத்திலும், குடும்ப மருத்துவத்திலும்

**அனுபவமுள்ள மருத்துவர்களும், கனடாவில் தகுதி பெற்ற தாதியரும் சேவையாற்றுகின்றனர்.**



சனி, ஞாயிறு
and விடுமுறை
காலை 9 மணி
மாலை 4 மணி

**Unit II**
**2901, MARKHAM ROAD,**
**SCARBOROUGH**
**ON M1X 0B6**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர்களுக்கான பகுதி

## பூந்தளிர்

அன்புத்தம்பி தங்கைகளே இது உங்களுக்கான பகதி பூந்தளிர். இதில் சிறுகதை சொற்களம் நுன்னறிவு உலக பிரசித்தி பெற்றோர். உலக சுவைமிகு தகவல்கள். சிறுவர் நிகள்வுகள் பிறந்தநாள் புகைப்படங்கள் என்பன மூன்று மாதங்களுக்கொருமுறை வெளிவரும். தளிர் சஞ்சிகையில் நீங்களும் பங்குபற்றலாம்.

# இதயத்தில் பூக்கும் பூ

**மூர்த்தி மாமா**

வணக்கம் மருமக்களே! வண்ண வண்ண நிறங்களில் பூத்து,அழகாலும், நறுமணத்தாலும் வண்ணாத்திப் பூச்சிகளையும், மனிதர்களான எங்களையும் கவர்ந்து இழுப்பவை பூக்கள். அப்பூக்களைப் போலவே குழந்தைகளாகிய நீங்களும் உங்கள் அழகாலும், கள்ளம் கபடமற்ற மனசாலும், புன்சிரிப்பாலும் அனை வரையும் கவர்ந்து வருகின்றீர்கள். ஆனால் நீங்கள் வளர வளர இந்தப் பூமியிலுள்ள பல தீயவர்களு டன் பழக ஆரம்பித்ததும் உங்கள் மனசும் படிப்படியாக மாறி, புன்சிரிப்பும் மறைந்து விடுகின்றது. உங்களது உள்ளம் மாறியதும் 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்ற பழமொழிக்கு ஏற்ப உங்களது முகத்தில் இருந்த அழகும் இல்லாமல் போய் விடுகின்றது.

சிறுவர்களாகிய உங்களைப் போலவே உங்களோடு பழகும் பெரியோர்களும் நல்லவர்கள் என நீங்கள் எண்ணி விடுகின்றீர்கள். அது தவறும், ஆபத்தானதும் ஆகும். அதனால் சிறுவர், சிறுமிகளான நீங்கள் எல்லோரையும் நல்லவர்கள் என எண்ணிவிடக் கூடாது. அதுவும் வெளிநாடுகளில் வாழும் சிறுவர், சிறு மிகளை ஏமாற்றி கெடுப்பவர்கள் அதிகளவில் உள்ளனர். உங்களைப் பார்த்து சிரித்து, இனிப்புகளும் வாங்கித் தந்து உங்களை தூக்கிக் கொண்டும் ஓடிவிடுவார்கள். அதனால் நீங்கள் உங்கள் அப்பா, அம்மாவிடம் இருந்து பிரிக்கப்பட்டு விடுவீர்கள். அவர்களும் உங்களைப் பிரிந்த கவலையினால் அழுது துடிப்பார்கள். அதனால் நீங்கள் எல்லோரையும் நல்லவர்கள் என நம்பி ஏமாந்து போய்விடக் கூடாது. உங்கள் அறிவைப் பயன்படுத்தி யார் நல்லவர்கள்? யார் தீயவர்கள் என்பதை அறிந்து கொண்டு நல்ல வர்களுடன் மாத்திரம் பழக வேண்டும்.

சிறுவர்களாகிய் நீங்கள் தனியாக இருக்கும் போது உங்களுக்குத் தெரியாத புதியவர்கள் யாரேனும் உங்களைப் பார்த்து சிரித்தால், நீங்களும் அவர்களைப் பார்த்து சிரித்து ஏமாந்து போய்விடக் கூடாது. குழந்தைகள் ஆகிய நீங்கள் அனைவருமே நல்லவர்களாக இருப்பதைப் போன்று பெரியோர்கள் அனை வருமே நல்லவர்களாக இருப்பதில்லை. அவர்களுள் குடிகாரர்கள், கள்ளர்கள், கடத்தல்காரர்கள், கொலைகாரர்கள் என பல் வேறு தீயவர்கள் உள்ளனர். அவர்கள் பிறருக்கு நன்மை செய்யாது தீமை களையே செய்வார்கள்.

எனவே நீங்கள் வளர்ந்தாலும் அவர்களைப் போன்று தீயவர்களாக மாறி விடாது நல்லவர்களாகவே இருக்க வேண்டும். அப்போது தான் உங்களது இதயங்களில் இருந்தும் அழகான பூக்கள் பூக்கும். அவை என்ன பூக்கள் தெரியுமோ? அன்பு......! நீங்கள் பிறர் மீது அன்பு செலுத்தினால் அவர்களும் உங்கள் மீது அன்பு செலுத்துவார்கள். எனவே நீங்கள் எப்போதும் அன்புடன் பிறருக்கு நன்மையே செய்து வாழ வேண்டும். அதனால் உங்களுக்கு நன்மை ஏற்படும் என்பதை திருவள்ளுவர் பின்வரும் திருக்குறளில் கூறியுள்ளார்.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# COMMUNITY
FINANCIAL SERVICE GROUP INC.

## V.S. THURAIRAJAH
PRESIDENT

INVESTMENT - INSURANCE - MORTGAGES

416-548-7300 647-829-4044


தளிரில் இருந்து அறிந்து கொள்வோம்

# காலமும் கடல் அலையும் யாருக்காகவும் காத்திருக்காது!

நேரம் தவறாமை என்பது எல்லோராலும் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு அற்புதமான கொள்கையாகும். பள்ளி மாணவ- மாணவியர் சிறு வயதிலிருந்தே நேரம் தவறாமல் தம்முடைய வேலைகளை செய்து முடித்திட பழகிக்கொள்ளவேண்டும். இது அவர்களுடைய எதிர்காலத்தில் மிகவும் உதவிகரமாக இருக்கும். மேலும் அவர்கள் ஈடுபடும் காரியங்களில் அவர்கள் முதன்மையாக விளங்கிடவும் வைக்கும். குழந்தைகள் மட்டும் அல்லாது பெரியர்களும் நேரம் தவறாமையை கடைப்பிடிக்க வேண்டியது மிகவும் அசியமாகும். நேரம் நமக்காகாக காத்திருக்காது. வெற்றியும் நமக்காக காத்திருக்காது. எனவே செய்ய வேண்டிய எல்லாகாரியங்களையும் அந்தந்த நேரத்தில் செய்து முடித்தல் வேண்டும். வேலைகளை தள்ளிப்போடுவது சோம்பேறிகளின் வாடிக்கை என மகாத்மா காந்தியும் கூட வலியுறுத்தி கூறியுள்ளார்.


# DEBT FREE CREDIT SOLUTION

**Seeking freedom from DEBT ? We offer Total Debt Free Solutions**

**Instant relief with one easy monthly payment**

**SAVE thousands of dollars**

**SOLVE YOUR DEBT WORRIES WITH DIGNITY**




***Seeking freedom from DEBT?***
***We offer Total Debt Free Solutions***

- கடன் தொகையினை 80% வரை கறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்

We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money

- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்

We shield you from your creditors and offer you a guaranteed protection

- கடன் கொடுத்தவர்களின் அச்சுறுத்தல்கள் சட்ட நடவடிக்கைகளிலிருந்து பாதுபாப்பு

We package a custom solution to protect all your assets including you hard earned property, vehicle, insurance, RRSP, TFSA, RESP, Shares

- உங்கள் சேமிப்பு. சொத்து. வாகனம். முதலீடுகள் பாதுகாப்பிற்கு உரிய வழிமுறை செய்தல்

We arrange a sensible Repayment Plan minimizing potential losses and avoiding bankruptcy

DEBT FREE CREDIT SOLUTION
SETTLEMENT CONSUMER PROPOSAL BANKRUPTCY
www.TotalDebtFree.ca, 416.834.7227, 416.434.1522, freedebt.toro@gmail.com

**Elankeeran.T**
Certified Insolvency Counselor






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தளிர் தரும் சுவைத் துளிர்கள்

இப்போது நான் சொல்லப் போவது, ரொம்பப் பெருசா ஒன்னுமில்ல.

சின்னத் தகவல்தான். உங்கள் அன்றாட வாழ்க்கையுடன் இணைந்த ஒரு சிறிய அறிவியல் தகவல். நம்ப முடியாமல் இருந்தாலும், உண்மையானது. கணிதச் சமன்பாடுகளால் நிறுவப்பட்டது.

மழை பெய்யும் போது, கையில் குடையில்லாவிட்டால் மழைபடாத ஓரிடத்தில் ஒதுங்கியிருப்பீர்கள். நீங்கள் செல்ல வேண்டிய இடம், ஐம்பது அடிக்கும் குறைவான தூரத்தில் உங்களுக்கு முன்னாலேயே இருக்கும். ஆனாலும் பெருமழையில் நனைந்து விடுவீர்கள் என்பதால், மழை விடும்வரை அல்லது குறையும்வரை காத்துக் கொண்டிருப்பீர்கள். சிறிது நேரத்தில், பெருமழை குறைந்து சிறுதூறலாகப் பெய்ய ஆரம்பிக்கும். காத்திருந்து பொறுமையிழந்ததால், அந்தச் சிறுதூறலிலேயே செல்ல வேண்டிய இடத்துக்கு ஓடிப் போய்விடலாம் என்று நினைப்பீர்கள். மழைக்குள் இறங்கி ஓடவும் செய்வீர்கள்.

ஆனால், மழையில் சிறு தூரங்களைக் கடக்கும் போது, ஓடிச் செல்வதைவிட நடந்து செல்லும் போதுதான் நாம் குறைவாக நனைவோம் என்பது உங்களுக்குத் தெரியுமா?

நாம் நினைத்துக் கொள்வது என்னவென்றால், "நடந்து செல்வதைவிட ஓடிச் சென்றால் மழையில் நனைவது குறைவாக இருக்கும்" என்பதுதான். மூளையும் அதுவே சரியாக இருக்கும் என்றுதான் எண்ணிக் கொள்ளும். ஆனால், நடந்து செல்லும் போது நம்மில் படும் மழைத்துளிகளை விட, ஓடிச் செல்லும் போதே அதிக மழைத்துளிகள் படுகின்றன.

## போட்டி இல 5

அன்பின் தம்பி தங்கைகளே 5வது சொற்களத்தளிர் உங்கள் சிந்தனையினை தூண்டும் வகையில் தொடர்ந்தும் உங்களுக்காக தருகின்றோம். நீங்கள் செய்ய வேண்டியது கூட்டினுள் தரப்பட்டுள்ள எழுத்துக்களைக் கொண்டு சொற்களை ஆக்குங்கள். அதிகமான சொற்களை அமைத்து அனுப்பும் தம்பி தங்கையர் மூவருக்கு வெகுமதி உண்டு. அத்துடன் இதில் பங்கு கொள்ளும் அனைவருக்கும் தளிர் சஞ்சி கையின் சான்றிதழ்களும். ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| அ | பா | ப் |
| க | ம் | மி |
| ர | மா | டி |

உங்கள் சிந்தனைக்கு வேலை கொடுக்கும் வகையில் கடந்த பூந்தளிரில் நாம் கொடுத்த சொற்களத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கூடுதலான சொற்களை உருவாக்கிய தம்பி தங்கைகளில் இம்முறையும் மூன்று பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
சொற்களத் தளிர் போட்டி இலக்கம் 4இல் பங்கு பற்றி பரிசில் பெறும் தம்பி தங்கைகளின் பெயர்கள் இங்கே தரப்பட்டுள்ளன.

**முதலாவது இடத்தைப் பிடித்திருப்பவர்.**
**பவிதாரணி கோகுலன்**
6ம் ஆண்டு, Brampton

**இரண்டாவது இடத்தை பிடித்திருப்பவர்**
**சஞ்சை கிசோக்குமார்**
5ம் ஆண்டு, Scarborough

**மூன்றாவது இடத்தைப் பிடித்திருப்பவர்**
**ஜெதமி கரிகாலன்**
5ம் ஆண்டு, Scarborough

பூந்தளிருக்கான சொற்களப்போட்டியில் வெற்றி பெற்றோர் பின்வரும் தொலை பேசி எண்களுடன் தொடர்பு கொண்டு பரிசில்களை பெற்றுக் கொள்ளவும்.

**பூந்தளிர் 647 657 0910**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அம்மா
நகை அடைவு மாடம்



# AMMA PAWN BROKER

## ரொரன்றோவில் குறைந்த வட்டி தங்கநகை அடைவு மாடம்

- ரொரன்றோவில் வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
- உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் குறைந்த வட்டி வீதமும் தரும் ஒரே நிறுவனம்
- நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம்
- 5 நிமிடங்களில் உங்கள் கையில் குறைந்த வட்டியுடன் பணமும் பாதுகாப்பும் அளிக்கும் நட்பான சேவையுடன் கைராசியான நிறுவனம் அம்மா போல அம்மா பவுண் புறோக்கர்ஸ்

2%
முதல்

GOVT. LICENSED

அரசின்
அங்கீகாரம்
பெற்றவர்கள்






$5000
per month
$100 only
no other
charges



scan me

உங்கள் பழைய நகைகளை அதி உயர் பெறுமானத்திற்கு எம்மிடம் விற்றுக்கொள்ளலாம்

Scarborough
416-757-0034 | 416-994-3861

Downtown
416-921-0034

105A-2425 Eglinton Ave E, Scarborough, ON M1K 5G8
ammapawnbroker@gmail.com
(சங்கர் அன்கோ ஸ்தாபனத்துக்கு அருகில்)

Designed by thedipaz.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்புத் தம்பி தங்கைகளே

## இது உங்கள் பக்கம்!

பூந்தளிர் பகுதியில் உங்கள் பெயர், புகைப்படங்களும் இடம் பெறவேண்டுமாயின் உங்கள் மின்னஞ்சல், கல்வி பயிலும் பாடசாலை, தரம் என்பவற்றைத் தெளிவாக தமிழில் எழுதி உங்களது புகைப்படத்தினையும் எமக்கு அனுப்பி வையுங்கள்.

## பூந்தளிர் விண்ணப்பப் படிவம்

**பெயர்: .......................................................................**

**வகுப்புத் தரம்: ........................................................**

**பாடசாலை: ...............................................................**

**தொலைபேசி இலக்கம்: ..............................................**

**இதனைப் பூர்த்தி செய்து எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.**

**thalir.thalir@yahoo.ca | 647 657 0910**



## அம்மா இங்கே வா வா!

அம்மா இங்கே வா வா
ஆசை முத்தம் தா தா;
இலையில் சோறு போட்டு
ஈயைத் தூர ஓட்டு;
உன்னைப் போன்ற நல்லார்
ஊரில் யாவர் உள்ளார்;
என்னால் உனக்குத் தொல்லை
ஏதும் இங்கு இல்லை;
ஐயம் இன்றிச் சொல்வேன்
ஒற்றுமை என்றும் பலமாம்;
ஓதும் செயலே நலமாம்;
ஔவை சொன்ன மொழியாம்;
அஃதே எனக்கு வழியாம்;

## விடுகதைகள்



பெயர்

1. படபடக்கும், பள பளக்கும், மனதினுள் எப்போதும் நீங்கா இடம் பிடிக்கும்? அது என்ன?
2. தலையில் கிரீடம் வைத்த தங்கப் பழம். அது என்ன?
3. கையை வெட்டுவார், கழுத்தை வெட்டுவார்? ஆனாலும் நல்லவர், அவர் யார்?
4. கடிபடவும் மாட்டான், பிடிபடவும் மாட்டான். அவன் யார்?
5. எவர் கையிலும் சிக்காத கல், எங்கும் விற்கப்படாத கல், அது என்ன?
6. வெள்ளை ஆடை உடுத்திய மஞ்சள் மகராணி அவள் யார்?
7. பச்சைப் பெட்டிக்குள் வெள்ளை முத்து? அது என்ன?
8. உடம்பில்லா ஒருவன் பத்து சட்டைக்கு மேல் அணிந்திருப்பான். அவன் யார்?
9. கடலிலே கலந்து, கரையிலே பிரிந்து, தெருவிலே திரியும் பூ எது?
10. உயிர் இல்லாத நீதிபதியிடம் ஒழுங்கான தீர்ப்பு, அவர் யார்?

பதில்கள் :

1. பட்டாசு, 2. அண்ணாச்சிப்பழம், 3. தையல்காரர், 4. தண்ணீர், 5. விக்கல், 6. முட்டை, 7. வெண்டைக்காய், 8. வெங்காயம் , 9. உப்பூ, 10. தராசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TASTY LAND

## Take out and Catering

Sri Lankan, Indian, canadian Foods

**இலங்கை இந்திய கனடிய உணவு வகைகள்**



தாயக உணவுகளை
சுத்தமாக சுவையாக தரமாக
என்றும் பெற்றுக்கொள்ளலாம்.

**ரேஸ்ரி லாண்ட்**
ரேக் அவுட் அண்ட் கேற்றறிங்
இலங்கை, இந்திய. கனடிய
உணவு வகைகளை பெற்றுக்கொள்ளலாம்.

**9699 Jane St, Unit #28**
Maple, ON, L6A 0A4
(OPP. Wonderland)
Email:- tastylandrestaurant@hotmail.com
Tel:- (905) 553 9400



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போசிலேன் பீங்கான்கள்



இலங்கையில் தயாரிக்கப்படும் பீங்கான் பொருட்களுக்கு வெளிநாட்டுச் சந்தைகளில் அதிக வரவேற்பு கிடைப்பதற்கு முக்கிய காரணம் இங்கு கிடைக்கும் தூய மூலப்பொருட்களே. போசிலேன் என்று நாம் ஆங்கிலத்தில் அழைக்கும் பீங்கான் பாத்திரங்கள் கயோலின்சு எனப்படும் ஒரு வித வெண் களிமண்ணை பிரதான மூலப்பொருளாகவும் அதனுடன் பெல்ஸ்ப்பார், குவார்ட்ஸ் போன்ற கனியப்பொருட்களையும் கலந்து தயாரிக்கப்படுகின்றன.

இந்த மூலப்பொருட்கள் நம் நாட்டின் தென்மேற்குப் பகுதி, மாத்தளை, துலாகொடை, கைக்காவலை, நாமல் ஓயா உள்ளிட்ட பிரதேசங்களில் தாராளமாகக் கிடைக்கின்றன மூலப்பொருட்களின் விகிதங்களை அல்லது சூளையின் வெப்பநிலையை மாற்றும்பொழுது வெள;வேறு தரமான பீங்கான்கள் கிடைக்கின்றன.

உதாரணமாக ஐவரி போசிலேன்சு எனப்படும் வெண் மஞ்சள் நிறத்தைக் கொண்ட போசிலேனைப் பெறுவதற்கு அதிகளவான வெப்பநிலை கொண்ட சூளைகளில் இவை சூடேற்றப்படுகின்றன. ஐவரி போசிலேன் நீடித்த தன்மை கொண்டதால் சந்தையில் அதிகப் பிரசித்தி பெற்றது.

பைன் சைனாசு எனப்படும் இன்னொரு வகை போசிலேன் மிக நுண்ணிய பாகங்களைக் கொண்ட மூலப்பொருட்களால் ஆனது. காத்திரம் கூடிய இந்தப் போசிலேனில் தயாரிக்கப்பட்ட பாத்திரங்கள் நாளாந்தப் பாவனைக்குப் பொருத்தமானவை. உலகிலேயே அதிக விலையும் மதிப்பும் பெற்ற போன் சைனா எனப்படும் விலங்குகளின் எலும்புகளை எரித்துப் பெற்ற சாம்பல் கலந்து செய்யப்படும் உயர்தர போசிலேன் உற்பத்திகளும் இலங்கையில் தயாரிக்கப்படுகின்றன.

இலங்கையில் தயாராகும் போசிலேனைப் பயன்படுத்துவதில் உள்ள அனுகூலங்கள். வெப்பநிலை மாற்றங்களால் வெடிப்பு ஏற்படாது, கீறல், காயம் எதுவும் இலகுவில் விழாது, மைக்ரோவேவ் சமையலுக்குப் பொருத்தமானது, பயன்படுத்துவதற்கும் பராமரிப்பதற்கும் இலகுவானது, அலங்கார வேலைப்பாடுகள் சர்வதேசத் தரப்பரிசோதனைக்கு உட்பட்டவை, நீரை உறிஞ்சும் தன்மை முற்றிலும் இல்லாதது.

ஐக்கிய அமெரிக்கா, கனடா, ஐரோப்பா, மத்திய கிழக்கு, தென் ஆசியா முதலிய பகுதிகளை உள்ளடக்கிய ஏற்றுமதி சந்தைகள் மட்டுமன்றி உள்நாட்டிலும் போசிலேன் பொருட்களின் பயன்பாடு அதிகரித்து வருகின்றது.



சுற்றுலா விடுதிகள், நட்சத்திர விடுதிகள், உயர் மட்ட வணிக நிறுவனங்கள், உயர்ஸ்தானிகராலயங்கள், மருத்துவ மனைகள் முதலிய நிறுவன மட்டத்தினரிடத்தில் போசிலேன் பாண்டங்களுக்கான கேள்வி அதிகரித்து வருகின்றது. இவர்கள் சர்வதேசத் தரத்துக்கு இணைவான நவீன வடிவங்களையும் அலங்காரங்களையும் உற்பத்தியாளர்களிடமிருந்து எதிர்பார்ப்பதால் அத்தேவைகளைக் கருத்தில் கொண்டு இலங்கையின் தயாரிப்பாளர்களும் புதிய மாற்றங்களை அறிமுகப்படுத்தி வரு கின்றனர்.

Dear Brothers & sisters
**Kindly Requesting for the "Sponsors"**
கிளித்தட்டு உலக வெற்றிக்கிண்ணம்-ஐரோப்பா
Kilithattu Coupe du monde en Europe
killithattu World cup at Europe
தமிழரின் தேசிய கிளித்தட்டு விளையாட்டு
Tamil's National Game Kilithattu
Jeu National des Tamouls le Kilithattu



மொன்றியல் வானவில் விளையாட்டுக் கழகம்
Le club sportif de Vaanavil
Montreal Vaanavil sports club



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கக் குரலால் ஜெயித்து தங்கம் வென்ற ஜெசிக்கா!



உலகெங்கும் வாழும் தமிழ் ரசிகர்களை தனது தங்கக் குரலால் கவர்ந்ததோடு தங்கத்தினையும் வென் றெடுத்துள்ளார் ஈழத்து தாரகையான 'சுப்பர் சிங்கர்' ஜெசிக்கா. அது மாத்திரமன்றி தனக்கு பரிசாகக் கிடைத்த ஒரு கிலோ தங்கத்தை இலங்கையிலும், இந்தியாவிலும் வாழும் வறிய குழந்தைகளுக்கு வாரி வழங்கியதன் மூலம் வள்ளல் பாரியாகி,வானத்து நட்சத்திரமாக துலங்கின்றார் செல்வி ஜெசிக்கா.

இசையால் வசமாகா இதயம் எது? என்ற கூற்றினை மெய்ப்பிக்கும் வகையில் தனது இனிமையான இசையால் போட்டி நடுவர்களை மாத்திரமல்ல தொலைக் காட்சி ஊடாக உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களையும் வசமாக்கி அவர்களது அதிகப்படியான வாக்குகளைப் பெற்று நான்காம் இடத்தில் இருந்து இரண்டாவது இடத்துக்கு முன்னேறி ஜெயித்து விட்டார் ஜெசிக்கா!

தினமும் பாடிப் பாடி குரலை சாதகம் பண்ணி அதன் மூலம் 'சுப்பர் சிங்கர் ஜுனியர் சீசன்-4' போட்டி யில் பெரும் சாதனை படைத்து விட்டார் ஜெசிக்கா. மொத்தம் ஆறு பாடகர்கள் பங்கு பற்றிய இந்நிகழ் ச்சியில் உலகத் தமிழ் மக்களின் பேராதரவினைப் பெற்று 'வைல்ட் காட்' சுற்றில் வெற்றி பெற்ற அவர் இறுதிப் போட்டியில் இரண்டாவது இடத்தைப் பெற்றமை மாபெரும் சாதனை! 'விடை கொடு எங்கள் நாடே......'என்ற பாடலையும், தோல்வி நிலையென நினைத்தால் மனிதன் வாழ்வை நினைக்கலாமா? என்ற உருக்கமான பாடலையும் பாடி பல உள்ளங்களை நெகிழ வைத்தார். அதுமாத்திரமன்றி இரண்டாவது பாடலைப் பாடிய திரு.மாணிக்க விநாயகத்தின் பாராட்டினைப் பெறும் அளவிற்கு ஜெசிக்கா குரலி னிமை கொண்ட குயிலாகி விட்டார்.

இப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற செல்வி பூர்த்தி சுப்பர் சிங்கர் பட்டத்தினையும் பெறுமதி மிக்க அடுக்கு மாடி வீட்டினையும் பெற்றுக் கொண்டார்.

கனடாவில் வாழ்ந்து வரும் ஜெசிக்கா ஈட்டியுள்ள சாதனை கனடாவில் வாழும் நம்மனைவருக்கும் பெருமையினையும், பேரானந்தத்தினையும் ஏற்படுத்தி உள்ளது. அத்தகைய பெருமைக்குரிய ஜெசிக்காவின் புகைப் படத்தினை முன் அட்டையில் பிரசுரித்து அவரைப் பற்றிய இச்செய்தியையும் பிரசுரிப்பதில் மூலம் 'தளிர்' பெருமையும், பூரிப்பும் அடைகின்றது.


Dr. Sathy
Tel. : 416-747-7700



ALBION & FINCH DENTAL CENTRE
1620 Albion Road Etobicoke On. M9V 4R4




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூச்சிய ஈர்ப்பு விசை (Zero Gravity)

– S. ராஜ் –

அண்டமெங்கும் பொருட்கள், ஈர்ப்புவிசையுடனே சுற்றித் திரிகின்றன. புவிக்கும் ஈர்ப்புவிசை உண்டு என்பது உங்களுக்குத் தெரியும். புவியின் ஈர்ப்புவிசையை, விசேசமாகப் "புவியீர்ப்புவிசை" என்கிறோம். இந்தப் "புவியீர்ப்புவிசை" என்னும் சொல்லைப் பலர் தவறாகப் பயன்படுத்துகின்றனர். சந்திரனின் ஈர்ப்புவிசையைப் பற்றிச் சொல்லும் போது கூட, "சந்திரனின் புவியீர்ப்புவிசை" என்று சொல்லிவிடுகிறார்கள். சரி, அது ஒருபுறம் இருக்கட்டும்.

ஈர்ப்புவிசையென்பது அண்டமெங்குமுள்ள பொருட்களுக்கு இருப்பது போல, ஈர்ப்புவிசை இல்லாத இடமும் இருக்கிறது. விண்வெளியில் ஈர்ப்புவிசையென்பது கிடையாது. வளிமண்டலம் பல படலங்களாகப் படிந்து, பூமியைப் பாதுகாக்கும் வலயமாகக் காணப்படுகிறது. இதை "அட்மாஸ்பியர்" (Atmosphere) என்று அழைக்கிறோம். இந்த அட்மாஸ்பியருக்குள் நாம் இருக்கும் வரை, புவியீர்ப்புவிசை நம்மைப் பூமியை நோக்கி இழுத்துக் கொண்டே இருக்கும். அட்மாஸ் பியரை விட்டுத் தாண்டி விண்வெளியை அடையும் போது, அங்கு ஈர்ப்பு விசை இல்லாது போகின்றது. அதாவது அங்கே பூச்சிய ஈர்ப்புவிசை (Zero Gravity) ஆகிவிடுகின்றது. ஈர்ப்புவிசை இல்லாத இடத்தில் நாம் இருந்தால், அங்கே மிதந்து கொண்டுதான் இருப்போம். கீழே எங்கும் விழமாட்டோம். தண்ணீரில் நீந்துவது போல, காற்றில்லா வெற்றிடத்தில் மிதந்து கொண்டிருப்போம்.

காற்றில்லாத வெற்றிடத்தில் மிதப்பதை உங்களால் கற்பனைதான் பண்ண முடியுமேயொழிய, முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாதல்லவா? அதனால், அதைப் புரிந்து கொள்வதற்கும், அதைப் பற்றிய ஆராய்ச்சியில் இறங்குவதற்குமான அடிப்படை அறிவைப் பெறுவதற்கும், விஞ்ஞானிகள் எப்போதும் விண்வெளிக்குச் சென்று கொண்டிருக்க முடியாது. அதனால், "பூமியிலேயே பூச்சிய ஈர்ப்பு விசையை உருவாக்க வேண்டும், அதற்கு என்ன செய்யலாம்? என்று சிந்தித்த போதுதான், ஒரு ஆச்சரியமான வழி கிடைத்தது. அதற்கென உருவானதுதான் "பூச்சிய ஈர்ப்புவிசை விமானம்" (Zero Gravity Flight அல்லது Zero G Flight).

ஈர்ப்புவிசைகளற்று, வெளியொன்றில் மிதப்பதற்கென ஒரு விமானமே தயார் செய்யப்பட்டது. இதற்கென்றே பிரத்தியேகமாக இருக்கைகள் அகற்றப்பட்டு அமைக்கப்பட்ட பெரிய விமானம் அது. இந்த விமானம் வானத்தில் பறந்து கொண்டிருக்கும் போது, அது 45 பாகை கோணத்தில் மேல் நோக்கிய வண்ணம், மிகை வேகத்தில் உயரப் பறக்கத் தொடங்கும். ஒரு குறித்த உயரத்தை அடைந்ததும் உடன் மீண்டும் 45 பாகைக் கோணத்தினூடாக கீழே இறங்க ஆரம்பிக்கும்.

இப்படி அது பல தடவைகள் ஒரு பரவளைவாகத் (Parabola) தொடர்ந்து பறந்து கொண்டிருக்கையில், இந்தப் பூச்சிய ஈர்ப்புவிசை விமானத்தில் உள்ளவர்களுக்குக் கிடைக்கிறது. உயரப் பறக்கும் விமானம் கீழ் நோக்கி இறங்க ஆரம்பிக்கும் சமயத்தில் இந்த பூச்சிய ஈர்ப்பு, கிட்டத்தட்ட 25 செக்கன்களுக்குக் கிடைக்கின்றன. அதி அற்புதமான மிதக்கும் விளவாக இது இருக்கும். பல விஞ்ஞானிகள், விண்வெளிக்கே போகாமல், அந்த விமானத்தில் பயணம் செய்து மிதந்திருக்கிறார்கள்.

இப்போது நான் சொல்வதைக் கற்பனை பண்ணிப் பாருங்கள். வழமை போல இதுவும் கற்பனைதான், உண்மையாக யாரும் பரீட்சித்துப் பார்க்க வேண்டாம். இது உங்கள் அம்மா மேல் சத்தியம். ராஜ்சிவா சொன்னாரேயென்று, எதற்கும் செய்து பார்ப்போம் என முயற்சிக்கவே வேண்டாம்.

உலகிலேயே உயரமான ஒரு கட்டடத்தின் உச்சியிலிருந்து நீங்கள் கீழே குதிக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். கீழே நிலத்தை வந்து அடையப் பல நிமிடங்கள் எடுக்கும் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவ்வளவு உயரமான கட்டடம்.

நீங்கள் கீழே விழுந்து கொண்டிருக்கும் போது, உங்கள் பாக்கெட்டில் இருக்கும் ஒரு ரூபாய் நானயத்தை கையில் எடுத்து, அப்படியே விட்டுவிடுகிறீர்கள் என்றும் வைத்துக் கொள்ளுங்கள். நீங்களும், நாணயமும் இப்போது ஒரே வேகத்தில் பூமியை நோக்கி விழுந்து கொண்டிருப்பீர்கள். ஆனால் நீங்கள் கீழேயும், வேறு எங்கும் பார்க்காமல், நாணயத்தை மட்டும் பார்ப்பீர்களானால், அந்த நானயம் காற்றில் மிதந்தபடி உங்கள் கூடவே வருவது போல உங்களுக்குத் தோன்றும்.

அதாவது அந்த நாணயம் பூச்சிய ஈர்ப்புவிசையில் இருப்பது போல மிதப்பதாக உங்களுக்குத் தெரியும். இந்தச் சம்பவத்தில், உங்களுக்கும் நாணயத்துக்கும் ஏற்பட்ட விளைவு போன்ற ஒரு விளைவுதான் பூச்சிய ஈர்ப்புவிசை விமானத்திலும் ஏற்படுகிறது. கொஞ்சம் மெனக்கெட்டு யோசித்துப் பார்த்தால், இது நிச்சயம் உங்களுக்குப் புரியும். பூச்சிய ஈர்ப்பு விமானத்தில் உலகப் பிரசித்தி பெற்ற கணித, இயற்பியல் மேதையான "ஸ்டீபன் ஹாக்கிங் அவர்கள் கூடத் தன் உடலை அசைக்க முடியாத நிலையிலும், பயணம் செய்து பரிசோதனை செய்திருக்கிறார் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MAPLE GROCERIES



Vegetable, fresh Meat, fish & Money transfer

உடன் மரக்கறி, பழங்கள், மீன், இறைச்சி வகைகள் அனைத்தையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.

தமிழர் அங்காடி துரித பணமாற்று சேவை

9699 Jane St, Unit # 25 & 26 Maple, ON, L6A 0A4
Jane & Major Makenzie
Tel:- (905) 417 6069


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஹிக்ஸ் போஸான் சிறு விளக்கம்

– எஸ்.ஆர். சிவா

பிரம்மாண்டமான திறந்தவெளி அரங்கமொன்றில் நடிகர்கள் கலந்துகொள்ளும் நட்சத்திர விழாவொன்று நடக்கவிருக் கிறது. திறந்தவெளி மைதானத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களும் ரசிகர்களும் கூடியிருக்கிறார்கள்.

ஒவ்வொரு நடிகராக விழாவுக்கு வர ஆரம்பிக்கிறார்கள். நட்சத்திர நடிகர்களும் வருகிறார்கள். பிரபலமற்ற உபநடிகர்கள் வரும்போது, ரசிகர்கள் அவர்களைப் பெரிதாகக் கவனத்தில் எடுத்துக்கொள்ளாததால், மிகச் சுலபமாகவும் வேகமாகவும் மேடை நோக்கி நடந்து, மேடையில் அமர்ந்துகொள்கிறார்கள்.

இப்போது உச்ச நட்சத்திரமாக இருப்பவர்கள் உள்ளே வரு கிறார்கள். நிலைமை மோசமாகிவிடுகிறது. அந்த உச்ச நட்சத் திரத்தைக் கூட்டம் சூழ்ந்து, அவரை ஆமைபோல நகரச் செய் கிறது. வழக்கமாக ஸ்டைலாக, வேகமாக நடக்கக் கூடியவர் இப் போது, ஆயிரம் மடங்கு எடை கூடியதுபோல மெல்ல மெல்ல மேடையை நோக்கி நகர்கிறார்.

அறிவியலின் ஒரு முக்கிய நிகழ்வொன்றைப் புரிய வைக் கவே இந்த உதாரணம். நடிகர்களை வைத்துச் சொன்னால் அறிவியல்கூட நமக்கு உடனே புரிந்துவிடுமல்லவா? இனி விஷயத்துக்கு வருவோம்.

## கடவுள் துகள்

"கடவுள் துகள்" என்று பலராலும் அறியப்பட்ட "ஹிக்ஸ் போஸான்" பற்றி விளக்குவதற்காகத்தான் மேற்கண்ட உதாரணம். லியோன் லேடர்மான் என்பவர்தான் ஹிக்ஸ் போஸானுக்கு "கடவுள் துகள்" என்று பெயர்வைத்தார். இவர் எழுதிய "கடவுள் துகள்" (தி காட் பார்ட்டிக்கிள்) என்னும் புத்தகத் திலிருந்தே இந்தப் பெயர் பிரபலமானது. லியோன் லேடர்மான், நோபல் பரிசு வென்ற இயற்பியலாளர்.

ஹிக்ஸ் போஸான் என்பது, விண்வெளியில் இருக்கும் அடிப்படைத் துகள்களில் ஒன்று. விண்வெளியெங்கும் ஹிக்ஸ் போஸான்கள் அடர்த்தியாகப் பரவியிருக்கின்றன. அப்படி அவை பரவியிருப்பதை "ஹிக்ஸ் வெளி" (ஹிக்ஸ் ஃபீல்டு) என்கிறார்கள். மிகமிகச் சிறியதான அடிப்படைத் துகள்கள், இந்த ஹிக்ஸ் வெளியினூடாக நகர்ந்து செல்லும்போது, அந்தத் துகள்களின் தன்மையைப் பொறுத்து, அவற்றுடன் ஹிக்ஸ் போஸான்கள் சேர்ந்துகொள்கின்றன.

அப்படி அவை சேர்வதால், அந்தப் பொருளுக்கு எடை கிடைக்கிறது. சில துகள்களை ஹிக்ஸ் போஸான்கள் கண்டு கொள்வதில்லையாதலால், அவை எடையற்று இலகுவாகப் பயணம் செல்கின்றன. இதைச் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டுமென்றால், நான் மேலே சொன்ன உதாரணம் உங்க ளுக்கு உதவிசெய்யலாம்.

## அடிப்படைத் துகள்கள்

திறந்தவெளி அரங்குதான் பேரண்டவெளி. அதில் நிரம்பி யிருக்கும் ரசிகர்கள் கூட்டம்தான், ஹிக்ஸ் வெளி. ஒவ்வொரு ரசி கரும் தனித்தனியே ஒரு ஹிக்ஸ் போஸான். அங்கே நுழையும் நடிகர்கள்தான் "அடிப்படைத் துகள்கள்". புகழில்லாத சாதாரண உபநடிகர்கள்தான், எடையில்லாத அடிப்படைத் துகள்கள். அதன் பின்னர் வரும் நடிகர்களின் பிரபலத்துக்கேற்ப அதாவது, அடிப்படைத் துகள்களின் தன்மைக்கேற்ப அவற்றுக்கு எடை அதிகரித்துக்கொண்டே போகிறது. இந்த வகையில்தான் ஹிக்ஸ் வெளியில் இருக்கும் ஹிக்ஸ் போஸான்கள் அடிப்படைத் துகள் களுக்கு எடையை அளிக்கின்றன.

## அழிவா, ஆக்கமா?

இப்போது ஹிக்ஸ் போஸான் என்றால் என்னவென்றும், அதன் செயல்பாடு என்னவென்பதையும் அறிந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். ஸ்டீவன் ஹாக்கிங் சொன்ன கருத் தொன்றை மையப்படுத்தி ஹிக்ஸ் போஸான்கள் பற்றி இப் போது மீண்டும் பேச ஆரம்பித்திருக்கிறார்கள்.

அவர் சொன்ன கருத்தின் அடிப்படை என்னவென்றால், "சுவிஸ் நாட்டின் செர்ன் நகரில் அமைக்கப்பட்டுள்ள "மிகப் பெரிய துகள் தாக்குவிப் பான்" (லார்ஜ் ஹாட்ரான் பார்ட்டிக் கிள் கொலைடர்) என்னும் நிலத்தடிப் பரிசோதனை வட்டப்பாதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில், ஹிக்ஸ் போசான் என்னும் அடிப்படைத் துகளைக் கண்டு பிடிக்கச் செய்யப்படும் பரிசோதனைகளின் மூலம், பேரண்டமே கண்ணிமைக்கும் நேரத்துக்குள் அழிந்துவிடும் பேராபத்து நேர்ந்துவிடலாம்" என்பதுதான்.

அழிவு என்றதும் நமக்கு எப்போதும் ஒரு பதற்றம் தொற்றி விடுவது சாதாரணமானதுதான். 2012-ம் ஆண்டில்கூட உலகமே அழிந்துவிடும் என்னும் பயமும் பதற்றமும் உலகமெங்கும் பரவியிருந்தன. ஆனால், இங்கு சொல்லப்பட்டது பேரண்டத்தின் அழிவென்பதால் யாரும் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை போலும். அறிவியலில் நாட்டமுள்ள வெகுசிலர் ஆங்காங்கே பதற்றப்படுகிறார்கள்.

எஞ்சியவர்களுக்குப் பதற்றப்படுவதற்கு வேறு எத்தனையோ விஷயங்கள் இருக்கின்றன. ஹிக்ஸ் போஸான் தொடர்பான ஆராய்ச்சி ஹாக்கிங் சொன்னதுபோல ஆபத்தானதா, இல்லையா என்ற முடிவு இன்னும் சரியாகத் தீர்மானிக்கப்படவில்லை. ஆனாலும், செர்ன் நிலத்தடி வட்டப்பாதை பரிசோதனையை எதிர்ப்பவர்களுக்கு இது அவலாகிப்போனது. இந்த வட்டப்பாதை பரிசோதனையே தவறானது என்ற கருத்தும் நிலவுகிறது.

இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரே இது போன்ற எதிர்ப்புகள் கிளம்பின. பெருவெடிப்பின் (பிக் பேங்) "மாதிரி" வெடிப்பை இந்தப் பரிசோதனைகளில் செய்து பார்க்கப் போகிறார்களென்றும், அப்படியொரு பரிசோதனை நடைபெற்றால் ஒட்டுமொத்த பூமியோ பேரண்டமோ வெடித்துச் சிதறும் என்றும், இல்லையென்றால் பரிசோதனையில் உருவாகும் கருந்துளை (பிளாக் ஹோல்) அனைத்தையும் உள்வாங்கி அழித்துவிடும் என்றும் கருத்துகள் முன்வைக்கப்பட்டு, எதிர்ப்புகள் கிளம்பின.

**செர்ன் மட்டுமல்ல**

செர்ன் வட்டப்பாதை கொஞ்சம் பெரியதுதான். கிட்டத் தட்ட 27 கிலோ மீட்டர் சுற்றளவுள்ள வட்டப்பாதை அது. சுமார் 175 மீட்டர் ஆழத்தில் அது அமைக்கப்பட்டிருக்கிறது. "இப்படி நிலத்தடி வட்டப்பாதை அமைத்து, உப அணுத்துகள்களை மோத விடும் பரிசோதனைச் சாலை செர்னில் மட்டும்தான் இருக்கிறதா?" என்று கேட்டால், அதற்கு "இல்லை" என்றே பதில் சொல்ல வேண்டும்.

இதுபோலப் பெரிய நிலத்தடி வட்டப் பாதையொன்று அமைக்கப்பட்டு, முறையாகப் பரிசோதனைகள் நடத்தப்பட்ட இன்னுமொரு பரிசோதனைச் சாலையொன்று அமெரிக்காவிலும் இருக்கிறது.

அதை "ஃபெர்மி லாப்" என்பார்கள்.

இது சிகாகோ மாகாணத்தில் உள்ள இல்லிநாய்ஸில் இருக்கிறது. இந்த ஃபெர்மி லாப் மூலம் பல அடிப்படைத் துகள்களை ஏற்கெனவே கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்த ஃபெர்மி லாபின் நிர்வாகத் தலைவராக இருந்தவர்தான், ஹிக்ஸ் போஸானுக்கு "கடவுள் துகள்" என்னும் பெயரைச் சூட்டிய லியோன் லேடர் மான்.

பிரபஞ்சத் தோற்றத்தைப் பற்றிய ஆய்வுகள் மிகவும் அவசியம்தான். ஆனாலும், பிரபஞ்சத்தின் முடிவுக்கு அவையே காரணமாக ஆகிவிடுமோ என்று பொதுமக்களைப் போலவே விஞ்ஞானிகளும் அஞ்சும்போது அந்த அச்சத்தை அவ்வளவு எளிதாகப் புறந்தள்ளிவிட முடியாது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1st & 2nd Mortgages*
*Purchase/Refinance/Transfers*
*Equity Line/ Equity Visa*
*Commercial Mortgages*

MORTGAGE ALLIANCE
Access Inc.
Independantly Owned & Operated* Lic:#11404

****Access to Over 42 Lenders****



**Arun Bala**
*Mortgage Agent* BSc(Hons), MSc, AMP

**416 834 2854**
**abala@mortgagealliance.com**

***For All Your Mortgage Needs...***
**www.mortgagealliance.com/arunbala**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரமாக (தனியாகப்பிறர் ஆதரவின்றி) வாழ்வதற்கான பாதுகாப்பு!

## Independent Living Protection

குணா துரைசிங்கம்

தீராத கொடிய உயிர்க்கொல்லி நோய்கள் அல்லது விபத்துக்கள் காரணமாக தாமாகவே எழுந்து நடமாடித் தம்முடைய அன்றாட அலுவல்களை (அதாவது – உணவு உட்கொள்ளுதல், உடுப்புக்களை அணிதல், குளித்தல், மல சலம் கழித்தல், நடப்பது, கட்டிலிலிருந்து எழுந்து சென்று கதிரையில் அமர்வது) என்பவற்றைச் சமாளிக்க முடியாத நிலை தமக்கும் ஒரு நாள் வரலாம் என்பதைப் பற்றிப் பலர் சிந்திப்பதோ அல்லது ஏற்றுக்கொள்ளுவதோ இல்லை. நான்கு கனேடியர்களில் ஒருவர் உடல் நலப் பிரச்சினைகள் காரணமாக ஓய்வு பெறுகிறார். நால்வரில் ஒருவருக்கு நீண்ட கால இயலாமைப் (long term disability) பாதுகாப்புத் தேவைப் படுகின்றது அதேநேரத்தில் பத்துக் கனேடியர்களில் எட்டுப் பேர் வயதானகாலத்தில்தீராதகொடியநோய்களுக்குஆளாகிறார்கள். ஆகவே உங்களுக்கு வரக்கூடிய ஆபத்துக்களின் போது என்ன செய்வீர்களோ அதைப்போன்ற ஒன்று தான் உங்கள் எதிர்காலத்திற்கான நீண்ட காலப் பாதுகாப்பும் (long term care).

நீங்கள் வீட்டுக் காப்புறுதி வைத்திருக்கிறீர்கள் – 1200 வீடுகளில் ஒரு வீடு தீப்பற்றி எரிய வாய்ப்புண்டு. நீங்கள் வாகனக் காப்புறுதி வீட்டுக் காப்புறுதி வைத்திருக்கிறீர்கள் – 240 வாகனங்களில் ஒன்றுக்கு கோர விபத்து ஏற்படும் வாய்ப்புண்டு. நீங்கள் நீண்டகாலப் பாதுகாப்புக் காப்புறுதி வைத்திருக்கிறீர்கள் – இருவரில் ஒருவருக்கு ஏதாவது கவனிப்புத் தேவைப்பட வாய்ப்புண்டு.



தற்போதைய ஆராய்ச்சிகளின்படி அல்சைமர் (Alzheimer) என்னும் தீராத கொடிய நோய் இன்னும் 30 வருடங்களில் பரவலாகக் காணப்படுமாம் என்று கூறப்படுகிறது. உண்மையாகவே 2038ம் ஆண்டளவில் 1.2 மில்லியன் (1.2million) கனேடியர்கள் மனத்திறனிழப்பு எனப்படும் டிமென்ட்சியா (Dementia) நோயினால் அவதிப்படுவார்கள் எனக் கனேடிய அல்சைமர் சங்கம் தரவு கூறுகிறது. அதாவது நீண்ட காலக் கவனிப்புக்கான சேவைகள் இன்னும் கூடிக் கொண்டே போகுமாம். தனித்து இயங்க முடியாத கனேடியர் ஒருவர் இன்னொருவருடைய உதவியைப் பெற்று வாழ்வதற்கான செலவுத் தொகை தற்பொழுது வருடத்திற்கு டொலர்கள் 50,000ம் ($ 50,000) வரை தேவைப்படுகிறதாம். இன்னும் 20 தொடக்கம் 30 வருடங்களில் இந்த மாதிரியான வசதிகளுக்கான செலவுகள் கணிசமான அளவு கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நீங்கள் நீண்டகால இயலாமையில் இருக்கும் போதோ அல்லது ஓய்வு பெற்ற பின்னரோ உங்களால் தனித்து இயங்க முடியாத நிலை வந்தால் அந்தச் சுமை உங்கள் அன்புக் குரியவர்களுடைய சுமையாகிப் போகாமல் இருப்பதை உறுதிப்படுத்த இப்பொழுதே சில நிமிடங்களைச் செலவிட்டுத் திட்டமிடுவதே மிகவும் சிறந்த வழியாகும்.

**நீண்டகாலப் பாதுகாப்புக் காப்புறுதி பற்றிய சில உண்மைகள் இதோ:**

**சுதந்திரமாக (தனியாகப் பிறர் ஆதரவின்றி) வாழ்வதற்கான பாதுகாப்பு அல்லது நீண்டகாலப் பாதுகாப்புக் காப்புறுதி என்றால் என்ன?**

சுதந்திரமாகத் (தனியாகப் பிறர் ஆதரவின்றி) வாழ்வதற்கான நீண்டகாலப் பாதுகாப்புக் காப்புறுதித் திட்டம் என்பது அதன் நன்மைப் பெற உரித்துடையவருக்கு தீராத கொடிய நோய்களோ, இயலாமை நிலையோ, விபத்தோ, அல்லது முதுமையோ ஏற்படும்பொழுது உதவும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது. நீண்டகாலப் பாதுகாப்புக் காப்புறுதி எதிர்பாராத தீராத கொடிய நோய்களோ, இயலாமை நிலையோ, அல்லது விபத்தோ ஏற்பட்டுத் தம்முடைய அன்றாட அலுவல்களைச் சமாளிக்க முடியாத நிலையினால் வரும் மருந்து மற்றும் வாழ்வதற்கான பணச் செலவுகளிலிருந்து காப்புறுதி செய்யப்பட்டவரையும் அவரது குடும்பத்தினரையும் பாதுகாக்கும். நீண்டகாலப் பாதுகாப்புக் காப்புறுதி என்பது முதியவர்களுக்கு மட்டுமல்ல ஏனெனில் இக்கவனிப்பு எந்த வயதினருக்கும் தேவைப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சிரி... சிரி...

மாணவன்; சார் யானைக்கு ஆங்கிலத்தில எந்த பதில் சரியா இருக்கும் சார்?

சார்; யானைக்கு எலிபேண்ட் தான் கரெக்டா இருக்கும்

மாணவன்; போங்க சார் காமெடி பண்ணாதிங்க யானைக்கு எப்பிடி சார் எலியோட பேண்ட் கரெக்டா இருக்கும்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இதற்கு எவ்வளவு செலவாகும்? எவ்வளவு காலத்திற்குப் பணம் கட்ட வேண்டிவரும்?**

செலவு பல விடயங்களில் தங்கியுள்ளது அதாவது உங்கள் வயது, உடல்நிலை, காப்புறுதி நிறுவனம் மற்றும் எந்த வகையான காப்புறுதித் திட்டம் என்பவற்றைப் பொறுத்தது. சில திட்டங்கள் வருடங்களுக்கோ அல்லது வாழ் நாள் முழுவதற்குமோ அமைக்கப்பட்டிருக்கும். சுதந்திரமாகத் (தனியாகப் பிறர் ஆதரவின்றி) வாழ முடியாத நிலை வந்தால் அதன் பின் பணம் கட்டத்தேவையில்லை.

**இக்காப்புறுதிக்கு யார் தகுதியுடையவர்?**

பதினெட்டு (18) வயதுக்கும் எண்பது (80) வயதுக் கும் இடைப்பட்ட வயதுடைய கனேடிய பிரஜா உரிமை அல் லது நிரந்தர வசிப்பிட விசா (PR) உள்ள அனைவரும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களே. ஆயினும் 40 வயதிற்கும் 50 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் இதைத் தங்கள் ஓய்வூதியத் திட்டத்தின் ஒரு பகுதியாகக் கருத வேண்டும்.

**எந்தச் சந்தர்ப்பத்தில் இந்தக் காப்புறுதி மூலம் ஒருவர் இக் கொடுப்பனவைப் பெறலாம்?**

ஒருவர் தன்னுடைய அன்றாட அலுவல்களான உணவு உட்கொள்ளுதல், உடுப்புக்களை அணிதல், குளித்தல், மலசலம் கழித்தல், நடப்பது, கட்டிலிலிருந்து எழுந்து சென்று கதிரையில் அமர்வது என்பவற்றைச் சமாளிக்க முடியாத நிலை, மலசலம் வெளியேறுவதைக் கட்டுப்படுத்த முடியாத நிலை (Inability to control the BLADDER and BOWELS), மற்றும் பிறப்பினால் ஏற்படும் மோசமான உடல் மற்றும் மனக் கோளாறுகள் (Cognitive impairment) உள்ள நிலை ஆகியவற்றில் ஏதாவது இரு நிலைகளை இழக்கும் சந்தர்ப்பத்தில் இந்தக் காப்புறுதி மூலம் வரியற்ற மாதாந்தக் கொடுப்பனவுகளைப் பெறலாம்.

**கொடுப்பனவு எப்படி கொடுக்கப்படும்?**


வரியற்ற மாதாந்தக் கொடுப்பனவுகளை உங்களுக்கு எப்படிப் பொருத்தமான முறையில் செலவு செய்ய வேண்டும் என்று தோன்றுகிறதோ அப்படிச் செய்யலாம். உங்களுக்குத் தேவையான மாதிரி தரமுள்ள வகையான கவனிப்பிற்காகவோ அல்லது நுட்பமான இந்தக் கவனிப்பிற்காக உங்கள் குடும்ப அங்கத்தவர் ஒருவர் செலவு செய்த பணத்தை ஈடு செய்யவோ செலவழிக்கலாம். அதற்கான பற்றுச் சீட்டுக்களைச் சமர்பிக்க வேண்டியதில்லை. இறப்பு ஏற்படும் தருணத்தில் நீண்டகாலப் பாதுகாப்புக் காப்புறுதித் திட்டத்திற்காக செலுத்திய முழுத் தொகையிலிருந்து இது வரை பெற்ற தொகையைக் கழித்துக்கொண்டு மிகுதியைப் பெறக் கூடிய முறையைத் தேர்ந்தெடுக்கும் உரிமையும் உங்களுக்கு உண்டு.




**எந்தக் காப்புறுதி மிகவும் பொருத்தமான பாதுகாப்பைக் கொடுக்கும்?** உங்களுக்கு எது ஏற்றது என்பதை அறிய எங்களோடு தொடர்பு கொள்ளலாம். உடன் பதிலுக்கு எங்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம்.

# கிருஸ்மஸ் என்றால் என்ன ?...

இயேசுநாதரின் பிறந்ததினமாக டிசம்பர் 25ம் தேதி நள்ளிரவை உலகம் முழுவதுமுள்ள மக்கள் கொண்டாடுகின்றனர். அதைக் "கிருஸ்மஸ்' (Christmas) என்ற பெயரில் இப்போது அழைக்கிறோம். ஆனால், கிருஸ்மஸ் என்பதற்குப் பதில், X'mas என்றும் நம்மில் சிலர் அழைக்கிறார்கள். ஆனால் இன்றுவரை நாம் ஏன் Christmasக்குப் பதில் X'mas என்றழைக்கிறோமெனத் தெரிந்து கொள்ளவில்லை. அதாவது இயேசுநாதரின் பெயரான "Christ' என்பதற்குப் பதில் "X' என்னும் எழுத்தை ஏன் பயன்படுத்துகிறோம் என்பது தெரியாது. இயேசுவுக்கும் "X' க்கும் என்ன சம்மந்தம் இருக்கலாமென்று எப்பவாவது நீங்கள் சிந்தித்திருக்கிறீர்களா?



அது ஏன் என்பதை இப்போது நாம் பார்க்கலாமா? இதன் விளக்கம் விக்கிப்பீடியாவில் இருந்தாலும்கூடக் கொஞ்சம் தெளிவாக அதை நாம் பார்க்கலாம். கிரேக்க மொழியில் "Christ' என்பதற்கு "Christos' என்றே சொல்வார்கள். கிரேக்க மொழியிலுள்ள பைபிளின் புதிய ஏற்பாட்டிலும் "Christos' என்றே இருக்கிறது. இதைக் கிரேக்க எழுத்துகளில் "Χριστός' என்றெழுதுவார்கள். இதில்வரும் முதல் எழுத்தான X ஐ "Chi' என்று உச்சரிப்பார்கள். அதுபோல இரண்டாவது எழுத்தான p ஐ "rho' என்றும் உச்சரிப்பார்கள். கி.பி.306-337களில் ரோமை ஆட்சி செய்த கொன்ஸ்டாண்டைன்1 சக்கரவர்த்தி, மாக்ஸெண்டியஸ் (Maxentius) அரசனுடன் நடத்திய போரின்போது, தனது போர்க்கொடியில், மேலே சொல்லப்பட்ட Xp ஆகிய இரண்டு எழுத்துகளுடன் கூடிய சின்னத்தை அமைத்துப் போரிட்டார். அந்தப் போரில் கொன்ஸ்டாண்டைன் வெற்றியும் பெற்றார். அதிலிருந்து X என்னும் எழுத்து கிருஸ்துவைக் (Chirist) குறிக்கும் எழுத்தாக மாறியது. அதுவே படிப்படியாக இப்போது X'mas என்று அழைப்பதற்குக் காரணமாகவும் ஆகியிருக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# POORANI VILAAS

Take-out Restaurant & Catering

*Delicious, Quality and Healthy*

**சுவை மிக்க தமிழீழ. தென்னிந்திய மற்றும் சீன உணவுவகைகள்**

**சகலவிதமான வைபவங்களுக்கும் ஏற்ப சுவையான சுத்தமான தரம்மிக்க**
**சைவ. அசைவ உணவு வகைகளை குறிப்பிட்ட நேரத்தில்**
**ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள அழையுங்கள்**

**416.335.7775 & 647.822.4972**

**6055 Steeles Ave.E, Unit 104 (Markham & Steeles)**
**Toronto, ON. M1X 0A7**






www.pooranivilaas.ca





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களின் சகல விதமான மோட்கேஜ் தேவைகளும்

சிறந்த முறையில் பூர்த்தி செய்யப்படும்!



BonaFide
Mortgage Solutions Inc.
the true freedom

SUREN NATHAN
MORTGAGE BROKER
416 436 1111

7 Eastvale Drive, Unit 203, Markham, Ontario L3S-4N8

Office: 416 548 7475 | Fax: 416-548-7496 | Email: suren@bmsic.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலீடுகளில் முக்கிய முதலீடு வீடு

என்னூடாக வாங்கும்
வீடுகளுக்கு
ஒரு வருட
உத்தரவாதம்





NO BODY CAN BEAT MY SERVICE & COMMISSION
UPTO 80% OFF *
GUARANTEED

GOLD 2009 · DIAMOND 2010 · CHAIRMAN 2011 · TOP 5% SALES REP IN CANADA 2010, 2011

வீடு வாங்க விற்க
அழையுங்கள்

## சங்கர் மாணிக்கம்

## 416.453.6666

## உங்களுக்குத் தெரியுமா?

வீட்டு உரிமையாளர்கள் பெரிதளவு பணத்தைச் சேமிக்கின்றார்கள்

| வீணாகும் உங்கள் பணத்தை சேமியுங்கள் | Condo | Townhouse | Bungalow | Detached |
|---|---|---|---|---|
| **House Amount** | Start form **$100,000** | Start form **$200,000** | Start form **$300,000** | Start form **$350,000** |
| Down Payment | $5,000 | $10,000 | $15,000 | $17,500 |
| Loan Amount | $95,000 | $190,000 | $285,000 | $332,500 |
| **Mortgage Payment** | **$420** | **$840** | **$1261** | **$1472** |
| Property Tax | $100 | $200 | $225 | $250 |
| Condo Maintenance Fee | $500 | $200 | - | - |
| Utilities | - | $200 | $300 | $300 |
| Total Payment | $1020 | $1640 | $1786 | $2022 |
| Room Rent Income | $300 | $400 | - | - |
| Basement Rent Income | - | - | $700 | $800 |
| **TOTAL** | **$720** | **$1240** | **$1086** | **$1222** |

Down Payment 5% - 3%

உங்களுக்காக வீடு விற்க வாங்க தகுதியான
**Real Esate Agent ஐ தெரிவு செய்யுங்கள்**

## About Shankar Manickam...

- Full Time Realtor
- Top 5% Sales Rep in Canada
- Highest award winner - Chairman 2011
- Working 7 days a week 9am to 9pm
- Home inspector
- Former Mortgage Advisor

**Home Life/Future** Realty Inc., Brokerage* **905.201.9977** Cell: **416.453.6666**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org